# பல்பொருட் கட்டுரை

## முதற் பாகம்

மர்

ங்க்


சென்னைப் பச்சையப்பன் கல்லூரித் தமிழாசிரியரும்
திராவிடன் கௌரவப் பத்திராசிரியரும் ஆகிய
**மணி. திருநாவுக்கரசு முதலியார்**
இயற்றியது.


வழங்கும் பகுதி


வெளியிடுவோர்:
இம்பீரியல் அச்சுக்கூடம்
23, டேவிட்சன் தெரு, சென்னை.


[பதிப்புரிமை]

1931

[விலை ரூபா 1

# This Book is heartily Dedicated

TO

## M. R. RY. M. DURAISWAMY MUDALIAR AVL.,

WELL KNOWN COTTON MERCHANT

**In token of his**

High esteem and Sincere love, Love of integrity
and unrivalled Generosity, Embodiment of
Courtesy and nobility, Geniune
well-wishing of prosperity
to friends

*with*

**Ardent love, high admiration and
profound gratitude**

*by*

**THE AUTHOR**

1813

சேலம்



வித்வான்

**மணி. திருநாவுக்கரசு முதலியார்**

*சென்னைப் பச்சையப்பன் கலாசாலைத் தமிழாசிரியர்*

திருவள்ளூர் வெஸ்லியன் மிஷின் உயர்தரப் பாடசாலைத்
தலைமைத் தமிழ்ப் புலவராக இருந்த
திருவாளர்
சேலை. சகதேவ முதலியார் அவர்கள் எழுதிய

# பாயிரம்

எக்காலத்தும், எத் தேசத்தும், எம் மொழியின்கண்ணும் செய்யுள் நூல்களே முன்னர்த் தோன்றிப் பன்னூற்றாண்டுகள் கழிந்த பின்னரே உரைநடை நூற்கள் புலவர்களா லியற்றப்பட்டுலவுவன வாயின. இவ்வாறு விரிவுரை வடிவொடு நந்தம் தமிழ் மொழியின்கண்ணே முதற்கண் தோன்றிய உரைநடை நூல்கள் பெரும்பாலும் அருகியுங் கருகியுங் கிடப்ப, மேனாட்டு மொழிகளில் அத்தகைய சாமானிய நூல்களும் உயர்நடை நூல்களும் பல்லாண்டுகட்கு முன்னரே பல்கிப் பெருகித் தோன்ற, அவற்றை யனுசரித்துத் தமிழ் மொழியில் தேர்ந்த மேதாவிகளால் பிரதாப முதலியார் சரித்திரம், பஞ்சதந்திரக் கதைகள் போன்ற இரண்டொரு உரைநடை நூல்கள் இயற்றப்பட்டன. இத்துறையில் ஊக்கி உழைத்துச் சிறுவர்க்கென்று வரிசைப் பாடபுத்தகங்களும், பொதுவாகப் புராண நூல்களும் தமிழ் மக்கட்கு உதவி யருளியவர் யாழ்ப்பாணம் ஆறுமுக நாவலரவர்கள். சின்னாட்கட்கு முன் பச்சையப்பன் கல்லூரித் தலைமைப் புலமை நடாத்திய செல்வகேசவராய முதலியார் M.A., அவர்கள் மாணாக்கர்கட்கென்று உரைநடையில் சில நூல்கள் இயற்றியுள்ளார்கள். எனினும் இத்தகைய மேனாட்டு நூல்களின் எண்ணிக்கை இலக்கக்கணக்காக இருக்க நமது தமிழ் மொழிக்கண்ணே பத்துக்கணக்கினும் படுவதன்றாகும். மேலும் மேற்காட்டிய நந் தமிழ்வாணர்கள் இயற்றி வைத்த

உரைநடை நூல்கள் ஒவ்வோர் துறையின்கண்ணேயே இயன்றுள்ளன.

எனது அன்பு கெழுமிய நண்பரும், ஆற்றல் பெருகிய ஆசிரியரும், பச்சையப்பன் கல்லூரிச் செந்தமிழ்ப் பேராசிரியருமாகிய திருவாளர், மணி. திருநாவுக்கரசு முதலியாரவர்கள், சின்னாட்களாக நமது நாட்டின்கண் நிகழ்ந்து விரைய வளர்ந்து வரும் சமய சமூக சீர்திருத்தப்பாடுகளுக் கேற்ப அவைகளின் பல துறைகளிலும் நமது தமிழ் மக்கள் அறிவு பரந்து விரிந்து துலங்கவேண்டுமென மனத்திற்கொண்டு, பலதுறைக் கோவைகளாகச் சில கட்டுரைகள் செவ்வனம் செய்வான் தொடங்கி, முதற்கண் தாம் நடாத்திய 'செந்தமிழ்ச்செல்வி,' 'சித்தாந்தம்,' ஆகிய இருதுறைப் பத்திரிகைகளில் தாம் எழுதிய கட்டுரைகளைத் திரட்டி 'பல்பொருட் கோவை' எனப் பெயரிய இவ்வுரைநடைக் கட்டுரையை வெளியிட்டுள்ளார்கள். இக் கட்டுரைகள் ஐயாண்டுகட்குள் ளெழுதப்பட்டனவே யாயினும், இச்சில் லாண்டுகளிலேயே பல்வேறு கருத்துக்கள் எழுந்துள்ளமை யின் இவைகளின்கண் அங்கும் இங்கும் காணும் சிற்சில கருத்துக்களை அவ்வவ் வாண்டுகளுக் கேற்றனவாகவே கொள்க. எனினும் இக்கட்டுரைகளுள் பொதுத்தன்மை எவ்வாற்றானும் மாறுபட்டுத் தோற்றாமையைப் பெருமக்கள் காண்பார்களாக.

இந்நூல் உயர்ந்த நடையிலமைந்ததே யாயினும் எவ்விடத் தும் கருகல்கள் காணப்படா. பொருளுக் கேற்கச் சொன் னடை கடினமாதல் இயற்கையாயினும், அவ்வா றாகாது அஃது இந்நூலின்கண் தேனூறிய ஆற்றொழுக்கே போன்று தெளிந்து இனித்துச் செல்வதை மக்கள்கண்டு மகிழ்வர். எனவே கற்றோரேயன்றி மற்றோரும் இந்நூலின் துறைகளி

விறங்கி முழுகி எழுவாராயின் ஐயந்திரிபுகளாகிய மனமா சகன்று விளங்குவர். முத்துறையாக வமைத்த இந்நூலின் கண் தமிழ் என்னும் முதற்றுறையில் கம்பரையும், சமய தத்துவங்களாகிய இரண்டாந்துறையில் மெய்கண்டாரையும், போது வெனும் மூன்றாந்துறையில் இராமலிங்க சுவாமிகளை யும் அமைத்து வைத்திருக்குமோ ரழகை ஊக்கி நோக்கி யுணர்ந்து அனுபவிப்பார்க்குப் பேரானந்தம் பிறந்தோங்கி நிற்கும் என்பது திண்ணம். சொல், தொடர், பொருள், அணி ஆகிய அழகுகளில் இரண்டொன்றிலேயே முனைந்து நிற்கும் நூல்கள் போலாது, நமது ஆசிரியர் வல்வாக்கைக் கொண்ட இந்நூல் அவ்வழகுகள் எல்லாவற்றையும் பெற் றுத் துலங்குவதொரு சிறப்பு யாவரும் மிக வெளிதிற் காணக்கிடைப்பதாம். ஊதியம் நோக்கிச் சிறுவர்களாகிய மாணுக்கர்கட் கென்றே சிறு நூல்கள் தீட்டித்தீட்டிப் பாடு படுபவர் ஒருபுற மிருக்க, முதியோரும் சிறியோரும் படித்து ஆனந்தத்தோடு பல்துறை அறிவு விளக்கமும் பெறுமாறு நமதாசிரியரவர்கள் தமிழுலகிற்கு அமிழ்தென வளித்த இந் நூல் என்போன்ற எவராலும் போற்றத்தகுவதே யாகும் என்பது மிகையாகாததோ ருண்மையாம்.

இக் கட்டுரை 'முதற் பாகம்' எனவே மற்றப் பகுதி களும் விரைவில் வெளிவரும் வண்ணம் ஆசிரியரவர்களை ஆவேசத்துடன் கேட்டுக் கொள்கின்றேன். ஆசிரியரின் வாக்குக்கள், கருத்துக்கள், ஆராய்ச்சிகள் முதலியவைகளை நூல்வடிவங்க ளாக்கித் தமிழுலகிற் குதவுமாறு வெளியிடு வோர் கருதியிருக்குமோ ரூழியத்தை ஈடேற்றி வைக்கும் வண்ணம் தமிழர் யாவரையும் முன்வரச் செய்ய இறைவன் திருவருள் கிடைக்குமென வணங்கி வாழ்த்துகின்றனன்.

# உள்ளுறை

பக்கம்

I தமிழ்

இலக்கியம் ... 96
இலக்கியத் தோற்றம் ... 102
கம்ப சித்திரம் ... 123
தமிழ்ச் செல்வம் ... 143

II சமயமும் தத்துவமும்

சமயம் ... 116
முப்பொருள் ... 47
சைவ சித்தாந்தம் ... 18
சைவ பரிபாலனம் ... 26
சைவமே சமரச சமயம் ... 33
சமய ஆராய்ச்சி ... 52
சமய வாழ்க்கை ... 62
வேதாந்த சித்தாந்தம் ... 82
மெய்கண்ட தேவர் ... 88
இராமலிங்க சுவாமிகள் திருக்கோயில் வழிபாடு ... 11

III பொது—

கற்றல் ... 131
இராமலிங்க சுவாமிகள் கல்வி கற்ற வரலாறு 1
நூலாராய்ச்சி ... 108
பெரிய புராணமும் கலைவிமாரும் ... 136
உலகம் தேடுவது யாது ? ... 75
இறப்பச்சம் ... 68

ஓம்

கடவுள் துணை

# பல்பொருட் கட்டுரை

## 1. இராமலிங்க சுவாமிகள் கல்விகற்ற வரலாறு

சிதம்பரம் இராமலிங்க சுவாமிகளை அறியாதார் ஒருவரும் இலர். அவர் திருவாய் மலர்ந்தருளிய திருப்பாடல்கள் எவ்விடத்தும் பாடப்பட்டு வருகின்றன. அவர் திராக்ஷாபாகமாகச் செய்யுள் செய்வதில் அதி சமர்த்தர். அவர் பாட்டுக்கள் பண்டித பாமர ரஞ்சகமாக இருத்தலின், அவை கல்வி மிகுதியும் இல்லாதவருடைய மனத்தையும் அழலிடைப்பட்ட வெண்ணெய்போல உருகும்படி செய்து அன்பில் ஈடுபடுத்துகின்றன. இத்தகைய பெரியார் தமது இளமைப் பருவத்தில் எங்ஙனம் கல்வி கற்றுக்கொண்டார் என்பது மிக்க சுவையினை விளைக்கின்றது. என் ஆசிரியருள் ஒருவராகிய சிவ ஸ்ரீ கலியாணசுந்திர யதீந்திரர் அவர்கள் வாயிலாக யான் கேட்ட அவ்வரலாற்றை இங்கு எழுதுவேன்.

இராமலிங்க சுவாமிகள் இளமையிலேயே தம் பெற்றோரை இழந்து விட்டமையால் தம் தமையனாராகிய சபாபதிப் பிள்ளையின் ஆதரணையில் இருந்து வந்தனர். சபாபதிப் பிள்ளை தமிழிலே இலக்கிய இலக்கணங்களைப் போதுமான வரையிற் கற்றுச் சிவபுராண படனஞ் செய்வதில் தேர்ச்சி பெற்றிருந்தார். அவர் சைவபுராணங்களைக் கேட்போர் பக்தி பரவச ராகும்படி செவ்வையாய்ப் பிரசங்கஞ் செய்வார். அவர் பொருள் வருவாயை முன்னிட்டுச் சென்னையை அடைந்து, சைவப் பிரபுக்கள் சிலரைத் துணையாகக்

கொண்டு தமது வாழ்க்கையை நடத்தி வந்தனர். இங்ஙனம் வாழ்ந்து வருவார்க்குத் தம் இளவலாகிய இராமலிங்கத்துக்குக் கல்விப் பயிற்சி செய்விப்பதில் பெரிதும் ஆவல் உண்டு.

பிள்ளை அக்கால கல்வி முறைமைப்படித் திவாகரம், நிகண்டு, சதகம், அந்தாதி முதலிய நூல்களைத் தம் அருமைத் தம்பியாருக்கு நாடோறும் வழுவாமல் கற்பிக்கலானார். ஆனால், இராமலிங்கமோ சொல்லி வைத்த பாடங்களைக் கண்ணுங்கருத்துமாகக் கற்பதில்லை; எந்நேரமும் ஏதோ வேறொரு சிந்தையில் ஆழ்ந்து, தமையனார் மொழியைச் சிறிதும் நோக்குவதில்லை. சதா சருவதா நினைவு வேறுபட்டிருக்கும் இளையவராகிய இராமலிங்கம் கல்வி கற்க மாட்டாத மூழு மகன் என்றும், அவர் தமது கருத்தை நிறைவேற்றாதிருத்தலின், வழிக்கு வாராத பிள்ளையென்றும் சபாபதிப் பிள்ளை தீர்மானித்து விட்டார். அவர் உலக வழிக்கு ஒத்து வாராத பிள்ளை என்பது உண்மையே! இராமலிங்கம் தன்மையைக் கண்ட சுற்றத்தாரும் அவ்வாறே எண்ணினர்.

இராமலிங்கமோ எங்கேனும் குறிப்பின்றிச் சுற்றுவதும், மக்கள் கூட்டங்களில் சென்று அவர்கள் வாயைப் பார்த்துக்கொண்டு நிற்பதும், கோயில் குளங்களுக்குச் சென்று வழிபாடு புரிவதும், வேடிக்கை பார்ப்பதுமாகக் காலங் கடத்தி வந்தார். அவர் தாமாகத் தமக்குத் தோன்றிய புத்தகங்களை எடுத்துக்கொண்டு, தமக்கு விருப்பமான நேரங்களில் படிப்பார். ஆனால் தம் தமையனார் கட்டளைப்படி எந்நூலையும் உருப்போட்டுப் படித்து அப்படியே ஒப்புவிக்க மாட்டார். எனினும், இராமலிங்கம் ஒரு நாளும் தம் தமையனாரை அவமதித்தேனும் எதிர்த்தேனும் யாதொன்றும் பேசியதில்லை; அவரைக் குறித்துப் பிறரிடம் முணுமுணுத்துக் கொண்டதுமில்லை.

சபாபதிப் பிள்ளை தம்பி இராமலிங்கத்தை எவ்வாறேனும் முன்னுக்குக் கொண்டுவர வேண்டுமென்றெண்ணி அவர் தம் அன்புள்ள மனைவியை அழைத்து, " இராமலிங்கம் என் சொற்படி நடவாததால் இனி நீ, அவனுக்குச் சோறிட வேண்டாம். அவன் இப்பொழுதே வீட்டை விட்டு நடக்க வேண்டும். நீ என் கட்டளையை மீறி நடந்தால் நீயும் அவனைப்போல் நடக்க வேண்டும்,'' என்று தம்பியை எதிரிலே வைத்துக்கொண்டு கண்டிப்பாகத் திட்டஞ் செய்தார். இக் கட்டளையை இரண்டொரு முறைப் பிரயோகித்தும் இராமலிங்கம், தமையனார் இல்லாத வேளையிலோ, அன்றிக் கண்ணயரும் வேளையிலோ தெரியாமல் புழைக்கடை வழியாகப் போந்து, தம் அண்ணியாரைக் காண்பார். அவ்வம்மையோ கற்பிற் சிறந்த உத்தமி; கருணை நிறைந்த செல்வி; நற்குடிப் பிறப்பும், ஒழுக்கமும் நிரம்பிய குணவதி. அவள் தன் கணவனார் கட்டளையை இனி துணர்ந்தும், அவர் வெகுண்டு செய்த பணியை மீறி அவருக்குத் தெரியாமல் தம் மைத்துனச் சிறுவரைப் பெற்ற சேயினும் பெரிய சேயாக மதித்து, அன்பாற் குழைந்து, அவர் தம் செய்கைக்கு மனம் வெதும்பி நாடோறும் இனிய உணவுடன் அரிய மதியையும் புகட்டி வந்தாள். இவ்வம்மையின் செம்மை மொழிகளும் இளைய இராமலிங்கத்துக்கு நன்மை தந்தில.

இங்ஙனம் பன்னெடு நாட்கள் சென்றன. தம்பி இராமலிங்கம் தலையெடுத்ததே யன்றிக் கலையெடுத்ததில்லை. தமையனார் அறியாவண்ணம் வீட்டுக்கு வருவதும், சோறுண்பதும், கூறை பெற்றுக் கொள்வதும், தமது வழியிலே மூனைந்து நிற்பதுமாகவே இருந்து வந்தனர். சபாபதிப் பிள்ளையோ தம் தம்பியைக் குறித்து ஒன்றும் கேளாது விட்டு

விட்டார். சில வேளைகளில் அவருக்குத் தம் மனைவி தம்பிக்குத் தெரியாமல் ஊட்டி வருவதும் தெரியவந்தது. அதனைக் காணாததுபோல் புறக்கணித்து விட்டுவிட்டார். இவ்வாறிருக்கும் நாளில், ஒரு நாள் சபாபதிப் பிள்ளையின் தாயார் திதி வந்தது. அன்று அவர் தம் உறவின்முறையாருக்கும் நண்பருக்கும் தெரிவித்து, மிகச் சிறப்பாய்ப் பிராமண சந்தர்ப்பணை, அன்னதானம் முதலிய செய்தல் இயல்பு. அங்ஙனமே சிரார்த்தம் சாஸ்திரரீதியாய்ச் சிரத்தையுடன் நிறைவேறிற்று. எல்லாரும் ஒருங்கமர்ந்து அறுசுவை யுணவை ஆர அமர உண்டு களித்தனர். பின்னர், விருந்தினர் எல்லாரும் மேன்மாடத்திற் சென்று, குளிர்ந்த சந்தனம் பூசியும், பரிமள புஷ்பத்தின் நறுமணம் நுகர்ந்தும், தாம்பூலந் தரித்தும் இன்னுரையாடிக்கொண் டிருந்தனர்.

முகமும் அகமும் மலர்ந்து, வந்த விருந்தை ஓம்பி வரு விருந்தை எதிர்நோக்கி யிருந்த சபாபதிப் பிள்ளையின் மனைவிக்கோ உண்பதற்கு மனம் வரவில்லை. அந்நங்கை வேலை மிகுதியால் களைப்புற்று உள்ளமும் கெட்டுச் சோர்வடைந்திருந்தாள். சபாபதிப் பிள்ளையும் தம் சகோதரனை மறந்தவரல்லர். அவர் அனைவரும் வரிசையாகக் கூடி உண்ணுந் தருணத்தில் தம்பியை நினைத்துக் கொண்டார். ஆனால், என் செய்வார் பாவம்! தம்பி எங்ஙனமேனும் வீட்டுக்கு வந்து தன் அண்ணியால் உண்பிக்கப்படுவான் என்பது அவருக்குத் தெரியும். எனினும் தம் அரும்பிறப்பு உடனிருந்து உண்பதற் கில்லையே எனச் சிந்தாகுலம் கொண்டார். பின் அவர் சிறிது சிந்தித்து எல்லாம் திருவருட் செயலென எண்ணி, வாளா விருந்தார். அதனால் அன்று அவருக்கும் மனநிறைவு உண்டாக வில்லை.

மணி மூன்ருயிற்று. இதுதான் சமயமென்று அறிந்தனர் இராமலிங்கம். அவர்தம் தமையனர் அப்பொழுது கண்ணுறக்கங் கொள்வார் என்றெண்ணி வீட்டுக்குள் நுழைந்தார். அவர் வரவை எதிர் நோக்கிய வண்ணம் வழி மேல் விழிவைத்துப் பார்த்திருந்த அவர் அண்ணியார் உடனே விரைந்து சென்று அவருக்கு இன்னடிசில் ஊட்டினர். அவருக்குக் கள்ளத்தனமாக இவ்வாறு தம் மைத்துனருக்கு உணவு தருதல் சிறிதும் பிடிக்கவில்லை. 'ஐயோ! எத்தனையோ பேர் வந்து மகிழ்வோடு வயிரூர உண்டிருப்ப, இவர் இவ்வாறு வேளை தப்பி வந்து பதனழிந்த உணவை உட்கொள்ளும்படி இறைவன் கட்டளை நேர்ந்துளதே, என்றுன்னி உருக, அவர் கண்களில் நீர் முத்து முத்தாய் வடிந்தது. அது 'பசி ருசியறியாது' என்னும் பழமொழிக் கிணங்க ஆர்வமும், எங்கே தமையனர் வந்து விடுவாரோ என்ற அச்சமும் ஓங்க, விரைந்துண்ணும் இராமலிங்கம் கண்களுக்குப் புலப்பட்டது. புலப்படலும், அவர் 'அன்பு அன்பைத் தோற்றுவிக்கும்' என்னும் உண்மைக் கிணங்க, தம் அண்ணியார் முகம் பொலிவழிந்து விழிநீர் பெருக்குதலைக் காணப் பொருராய் உண்ணுதல் தவிர்ந்து, அவரை நோக்கி, "அண்ணியம்மா, நீர் ஏன் புலம்புகிறீர்?" என்று வினவினர். அதற்கு அவள் மறுமொழி புகலாது வாளா விருந்தாள். அவளை மீண்டும் மீண்டும் இராமலிங்கம் வற்புறுத்தினர். அதனல் அவ்வம்மை தனது கண்ணீரைத் துடைத்துக்கொண்டு, "தம்பி, உன் நிலைமையைக் குறித்துத் தான் அழுகிறேன்; நீ எப்படி உலகத்தில் வாழப் போகிருய், இப்படி எத்தனை நாளைக்குத் திருடனைப் போல வந்து போவது? எனக்குப் பிற்காலத்தில் உன் வாழ்க்கை என்னகும்!" என்று கூறித் தேம்பித் தேம்பிப் புலம்பினள்.

இராமலிங்கம் அறிவு தூண்டப் பட்டது; உணர்ச்சி ஓங்கியது. அன்னையினும் ஆயிரம் மடங்கு அதிகமாகத் தம்மைப் பேணி வளர்த்த அண்ணியார் வருத்தத்தை அவரால் தாங்க முடிய வில்லை. அதனால், அவர் அவ்வம்மையை நோக்கி, "அண்ணியம்மா, உங்கள் விருப்பம் யாது? அதைக் கூறினால் தட்டின்றிச் செய்வேன்," என்றார். "நீ உன் தமையனார் விருப்பம்போல் கல்வி கற்க வேண்டியதைத் தவிர்த்து நான் என்ன சொல்லப் போகிறேன்," என்றார். "ஆனால் அப்படியே நான் செய்யத் தடையில்லை. நாளைக்கே மேன் மாடியில் எனக்குத் தனியே ஓர் அறையை விட்டுவிட வேண்டும். அவ்வறையை மெழுகித் தூய்மை செய்து வைத்து விடுங்கள்; நான் கல்வி கற்கத் தொடங்குவேன்", என்றனர்.

அவர் அண்ணியம்மை அங்ஙனமே செய்ய ஒப்புக் கொண்டாள். அதன்மேல் இராமலிங்கம் தமக்கு ஒரு நிலைக் கண்ணாடியும், சில பரிமள வர்த்திகளும் வேண்டுமென அண்ணியிடம் கூறிப் பொருள் பெற்றுக்கொண்டு அவற்றை வாங்கி வந்து தமது அறையிலே வைத்துக்கொண்டார். பிறகு அவ்வறையின் கதவை மூடிக்கொண்டு நாடோறும் படித்துக்கொண்டு வந்தார். சபாபதிப் பிள்ளை, ஏதோ தம் இளவல் நல்வழியில் திரும்பிவிட்டான் என்றெண்ணிப் பேசாம லிருந்தார். ஆனால் இராமலிங்கம் இன்ன நூலைப் படிக்கின்றார் என்பது யாருக்கும் தெரியாது. கேட்பவர்கட் கெல்லாம் அவர், "இராமலிங்கம் ஏதோ குறியாய் ஓரிடத்தில் தங்கித் தரித்து இருக்கிறான்; கதவை மூடிக்கொண்டு நாள் முழுவதும் படித்துக்கொண் டிருக்கிறான்; ஆனால் அவன் இன்னது படிக்கிறான் என்பது இறைவனுக்கே வெளிச்சம்," என்று மொழிந்தனர். எனினும், அவ

ருக்கு வீடு தங்கித் தம் தம்பி இருப்பது பெருமகிழ்வை விளைத்தது. இங்ஙனம் சிறிது காலம் சென்றது.

பின்பு ஒரு நாள் சபாபதிப் பிள்ளைக்குக் கையேடு வாசிக்கும் பெண்மணி நோயுற்ருள். அவருக்குக் கையேடு அவ்வம்மையே வாசித்து வருதல் வழக்கம். அவ்வம்மை இனிய குரலும், சிறிது இசைப் பயிற்சியும் உடையவள்; பிரசங்கத்தின் இடையிடையே தேவாரத் திருப்பாசுரங்களைப் பண்ணுடன் பாடுவாள். அன்றியும், பௌராணிகருக்கு ஆங்காங்கு வேண்டப்படும் மேற்கோள்களைச் சமய மறிந்து எடுத்துச் சொல்லுவாள். அதனுல் சபாபதிப் பிள்ளைக்கு அவ்வம்மையின் உதவியின்றிப் புராணஞ் சொல்லுதல் இயலாததாக இருந்தது. ஏடு வாசிப்பவர் பெண்பாலரா யிருந்தால் சில இடர்ப்பாடுகளும் இருந்தன. அவ்வம்மை கைம்பெண் ; சபாபதிப் பிள்ளைக்கு நெருங்கிய உறவினள். அவள் யாருடைய பார்வைக்கும் தோன்ருதவாறு அவளைச் சுற்றி ஒரு மெல்லிய துணி சதுரமாகக் கட்டப்படல் வேண்டும். அங்ஙனம் கட்டப்படுதல் குறித்த நேரத்துக்கு முன்னரே நடைபெறல் வேண்டும். இவ்வளவு இடர்ப்பாடுகளையும் எண்ணுமல் சபாபதிப்பிள்ளை அவள் வருவாய் தமது குடும்பத்தைச் சார்தலினுலும், அவள் திறமை யுடையவளாக இருத்தலாலும், வேருெருவர் தமக்குக் கிடைக்காததாலும், அவளைக் கொண்டே தமது தொழிலை நடத்தி வந்தனர். ஆனுல் அவருக்கு அடிக்கடி தம் சகோதரர் கையேடு வாசிப்பதா யிருந்தால் எவ்வளவு நன்ரு யிருக்கும் என்னும் எண்ணம் உதிப்ப துண்டு.

அற்றைநாள் கையேடு வாசிக்கும் பெண்மணி பிணியா யிருந்ததால் அன்று பிரசங்கத்தை நிறுத்தி வைக்க வேண்டும். ஆனுல், அன்று பிரசங்கம் நிறுத்தக் கூடாததா யிருந்தது. பிர

சங்கம் வைத்தவர்கள் ஆவலோடு அதை எதிர்பார்த்துக்கொண்டிருந்தனர்; அவர்கள் ஏமாற்றத்தை அடைவது சபாபதிப் பிள்ளைக்கு விருப்ப மில்லை. அதனால், அவர் தம் இனிய அரிய மனைவியை அழைத்து, "இன்று என்ன செய்வது? பிரசங்கத்தை நிறுத்த எனக்கு எள்ளளவும் விருப்ப மில்லை! ஏடு வாசிக்கவோ ஆளில்லை. நான் தனியாகச் சொன்னாலும் சபைக்கு அலங்காரமாய் இராது," என்றனர். அவ்வம்மை உடனே, "இதோ வந்து விட்டேன்," என்று கூறித் தம் கொழுந்தரிடம் சென்று, "தம்பி, உன் தமையனார் பிரசங்கம் நின்று விடுகிறதே என்று தவிக்கிறார்; நீ ஏடு வாசிக்கமாட்டாயா? நீ வாசிப்பதாய் இருந்தால் பிரசங்கம் நடைபெறலா மல்லவா? வாசிக்கிறாயா? தைரியமாய்ச் சொல்," என்று கேட்டாள். இராமலிங்கம் சிறிதும் தாழ்த்தாது கையேடு வாசிக்க ஒப்புக்கொண்டார். இதனை உவகை துளும்பக் கேட்டுக்கொண்ட அவ்வம்மை, தன் கணவனுருக்கு இதனை எடுத்து மொழிய, அவர் அரை மனமாய் ஒப்புக் கொண்டார்; அவருக்கு இராமலிங்கம் எப்படிப் படிப்பாரோ என்ற ஐயுறவு இருந்தது.

அன்று இரவு பிரசங்கம் துவக்கப்பட்டது. சபாபதிப் பிள்ளை கடவுள் வணக்கச் செய்யுட்களைச் சொல்லி முடித்தனர். இராமலிங்கம் புராணம் வாசிக்கத் தொடங்கினார். எடுத்த எடுப்பே எல்லாருக்கும் இன்பத்தை ஊட்டியது; குரலின் சுவையும் கூடிக்கொண்டது; சொல்லும் வகையோ மனத்தைக் கரைக்கிறது; ஒவ்வொரு மொழியும் உள்ளத்தே பொதிந்து அன்பி லூறித் தேனி லூறிய பழம் போலத் தித்திப்பூறி வருகின்றது. பாட்டைப் பிரித்துப் பிரித்து அந்நுவயித்துப் படித்தார்; இடமறிந்து தொடர்களை எடுத்துக் கொடுத்தார். மக்கள் அளவற்ற மகிழ்ச்சி

அடைந்தனர். சபாபதிப் பிள்ளைக்கோ உவகை பொங்கி வழிந்தது. சிலர், 'அப்பா, இவர் தீபத்தில் ஏற்றிய தீவர்த்தி' என்றார்கள். சிலர், 'இவர் ஓரே தறியில் நெய்த துண்டு' என்றார்கள். சிலர், 'அண்ணன் துப்பாக்கி என்றால் இவர் பீரங்கி' என்றார்கள். சிலர் 'இது உற்பாத பிண்டம்' என்றார்கள். பிரசங்க சபையில் தேவாமிர்தம் கொழித்தது.

அன்றிரவு பிரசங்கம் முடிந்தவுடன் சபாபதிப் பிள்ளை மனையைச் சேர்ந்து, தம் அரும்பெறல் வாழ்க்கைச் செல்வியிடம் நிகழ்ந்தவற்றைச் செப்பி நிறைமகிழ்வு கொண்டார். அவ்வம்மை ஏதோ கடவுள் கண் திறந்தார் என்று கூறி முகமலர்ச்சியுடன் தன் கணவரிடம் மொழிந்துவிட்டு, உள்ளுக்குள் பெருங்களிப் படைந்தாள். அவ்வம்மை மறுநாள் தம்பிக்குக் கண்ணேறு கழித்தாள்; இராமலிங்கம் புன்னகை அரும்பினார். இப்பொழுதும் இராமலிங்கம் மூத்தவர் எதிரிலே வருவ தில்லை. இங்ஙனம் பல நாள் சென்றன.

ஒருநாள் சபாபதிப்பிள்ளை திடீரெனக் கடுங்காய்ச்சலால் வருந்தினார். அன்று முத்தியாலுப் பேட்டையில் செல்வத்திற் சிறந்த ஒரு வணிகர் வீட்டில் பிரசங்கம். அவருக்கோ படுக்கையை விட்டு எழவும் இயலவில்லை; பித்தம் தலை சுற்றுகிறது; தலை யிடிக்கிறது. அவர் மனைவியிடம் சொல்லி தம்பி இராமலிங்கத்தை அழைத்தார். "அப்பா, நீ செட்டியாரிடம் சென்று நான் இவ்வாறு துன்புறுவதாகச் சொல்லிவிட்டு வா," என்று அனுப்பினார். அவர் பணித்தவாறே இராமலிங்கம் அங்கே சென்றார். மக்கள் திரண்டிருந்தனர்; சுவாமி படங்கள் பல அழகாக அலங்காரஞ் செய்யப்பட் டிருந்தன; கூடத்தின் நடுவில் பெரிய நடராஜர் படம் ஒன்று ரோஜாமாலை சூட்டி ஒரு பலகையின் மீது வைக்கப்பட் டிருந்தது. அப் படத்தின் திருவுருவம் புதி

தாகச் சமைக்கப்பட்டது ; அது பேரழகு ததும்பி யிருந்தது. அதன் முன்னர்த் தேங்காய், பழம், கடலை, கற்கண்டு முதலான தின்பண்டங்கள் தட்டுத்தட்டாய் வைக்கப் பட்டிருந்தன. இந்நிலையில் இராமலிங்கம் சென்று பிரசங்கம் நடைபெற முடியாமையைப் பற்றிக் கூறினால் அவர்கள் மனம் எப்படி இருக்கும்! செட்டியார் உள்ளம் உடைந்தார் ; பெருமூச் செறிந்தார் ; இனி என்ன செய்வேன்? என்று கவன்றார். அப்போது, அவருக்கு அக்கம்பக்கத்திலே யிருந்தவர்கள் அவர் நிலையை உணர்ந்து, இராமலிங்கத்தைத் தம்மா லியன்ற வரையில் பிரசங்கம் செய்ய வேண்டு மென்று வற்புறுத்திக் கேட்டுக் கொண்டனர். அவரோ தமக்கு யாதுந் தெரியாதெனப் பன்முறை தடுத்தார். அவர்கள் அவரை விட்டபா டில்லை. அதன்மேல் அருள் கனிந்த நெஞ்சை யுடைய இராமலிங்கம் அன்று சொல்லக் கடவதாகிய பரஞ்சோதி முனிவர் திருவாய் மலர்ந்தருளிய திருவிளையாடற் புராணத்துள், 'வாதவூ ரடிகளுக்கு உபதேசித்த படலத்தை'ப் பத்திச்சுவை சொட்டச் சொட்ட யாவரும் கருவிகரணாதி சேட்டை யற்று நிற்ப, விடிய விடியப் பிரசங்கித்தனர். ஜனங்கள் வியப்பால் விழுங்கப்பட்டு இராமலிங்கம் சாதாரண மனித ரல்லர் ; ஏதோ தெய்வப் பிண்டம் எனக் கொண்டு அவர்பால் அச்சமும், அன்பும் கொண்டு நின்றனர்.

பிறகு அவ்வணிகப் பிரபு சபாபதிப் பிள்ளைக்குப் பதிலாக இனி அவர் தம்பியே பிரசங்கம் செய்தால் போது மென்று கூறினர். சபாபதிப்பிள்ளை 'குடும்பபாரம் இனிக் குறையும் ; இருவரும் பொருள் ஈட்டுதல் சாலவும் நன்' றென உட்கொண்டு வேறோரிடத்தில் தாமும் பிரசங்கஞ் செய்து வந்தனர்.

இப்படி நிகழுங் காலத்தில், சபாபதிப் பிள்ளைக்குத் தம் தம்பியார் பிரசங்கத்தைக் கேட்க வேண்டுமென்ற வேணவா உண்டாயிற்று. அதனால், அவர் ஒருநாள் முக்கியமாகத் தம்பியாருக்கும், பொதுவாகப் பிறருக்குந் தெரியாதபடி சபையின் ஒரு மூலையில் இருந்தார். பிரசங்கம் தொடங்கப்பட்டது ; கையேடும் இல்லை ; பேரேடும் இல்லை. இராமலிங்கம் பெரிய புராணத்திலே 'திருவாரூர்ச் சிறப்பை' எடுத்துக் கொண்டு சோனமாரியாகப் பொழியத் தலைப்பட்டார். அவர் வாக்கிலே மதுரமான தமிழ்ச் சொற்கள் தங்கு தடையின்றிக் கரைபுரண்ட வெள்ளம் போல வந்துகொண் டிருந்தன ; மனத்தில் கருத்துக்கள் புதிது புதிதாகத் தோன்றிக்கொண்டே யிருந்தன ; சொல்லும் தோரணையும், வாக்குபடுத்துவமும், காட்டும் நயனும் பயனும் சபாபதிப் பிள்ளைக்குப் பீதியை உண்டாக்கின. அன்று முதல் அவர் தம் தம்பியாரைத் தெய்வமாகவே கருதி வந்தார்.

## 2. இராமலிங்க சுவாமிகள் திருக்கோயில் வழிபாடு

இராமலிங்க அடிகள் திருக்கோயில் வழிபட்ட முறைமை நாம் உணர்ந்து இன்புறற்பாலது. நாம் செய்யும் வழிபாட்டிற்கும் அவர் செய்த வழிபாட்டிற்கும் உள்ள வேற்றுமை மிகப் பெரிது. திருக்கோயில் வழிபாடு புரிதலை ஒரு சிலர் கீழ்நிலையாகிய சரியை வழியென்றும், அது ஞானத்திற்கு ஒவ்வாதென்றும் பிறழ உணர்ந்து கூறுவர். அவருக்கு முற்றுமுணர்ந்த ஞானிகளும் திருக்கோயில் வழிபாடு செய்த தன்மைகள் புலப்பட வில்லை போலும். சைவ சமய குரவர்களாகிய திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரர், மாணிக்க வாசகர் முதலினோர் திருக்கோயில்

வழிபாடு செய்தது கீழ்நிலையில் நின்றுதானே என்பதை அவர் ஆழ்ந்து நினைவாராக.

திருநாவுக்கரசு சுவாமிகள் தில்லையிலே சென்று அருட் கடலாகிய நடேசப் பெருமானது குஞ்சித்த சேவடிகளைக் கும்பிட்டு வணங்கி அவர் தம் இன்முகக் குறிப்பை நோக்கி, அவர் தம் அருள் நோக்கு, "என்னை என்று வந்தாய்?" என்று வினவுதல் போலக் காணப்படுகின்றது என்று கூறியது சுவாமிகட்கு உள்ள அன்பின் பெருக்கை இனிது காட்டு மன்றோ!

இங்ஙனமே சுந்தரர் திருவொற்றியூரின் கண்ணே சங்கிலி நாச்சியாருக்குச் செய்து தந்த உறுதிமொழியினின் றும் பிழைத்து, அது காரணமாகக் கண்ணொளி இழந்து, திருவெண்பாக்கத் திருப்பதியை அடைந்து, இறைவனை நோக்கி, "சுவாமி, இங்கு இருக்கின்றாயோ? நான் இங் ஙனம் கண் குருடாய்த் துன்புறுவதைப் பார்த்துக் கொண்டு நீ இருக்கமாட்டாய்! இருந்தால் நான் இத்துயர் எய்தேன்," என்னும் பொருளமைத்துப் பாடி அதற்கு மறுமொழியாக இறைவன் அவர் செயலை முனிந்து, "உளோம் போகீர்! இருக்கிறோம் போ!," என்று அருளிச் செய்ததாகவும் அவருக்கும் சங்கிலி நாச்சியா ருக்கும் நடந்த மணவினைச் சடங்கில் இறைவன் கலந் திருந்த தன்மையையும் பின்வரும் இனிய பாடல் எத்துணைத் தெளிவாக உணர்த்தி நம்முள்ளத்தை உருக்கி இன்ப வெள் ளத்திலே திளைக்கச் செய்கின்றது காண்மின்!

"பொன்னவிலுங் கொன்றையினாய் போய்மகிழ்க்கீழ் இருவென்று
சொன்ன எனைக் காணாமே சூளுறவு மகிழ்க்கீழே
என்னவல்ல பெருமானே இங்கிருந்தாயோ என்ன
ஒன்னலரைக் கண்டாற்போல் உளோம் போகீர் என்றானே."

இங்ஙனம் சிவஞானங் கைவந்து நின்ற தெய்வத் திருவருட் பெருஞ்செல்வரும் திருக்கோயில் வழிபாடு புரிந்தனர் என்றால் கோயில் வழிபாட்டைச் சிற்றறிவுடைய நாம் புறக்கணித்தல் எவ்வளவு அறியாமையாகும். ஆனால் அவர்கள் வழிபடும் செயலுக்கும் நாம் செய்யும் வழிபாட்டிற்கும் வேற்றுமைகள் பல உள. அவர்கட்கெல்லாம் கடவுள் திருவுருவத்திலே திருவருள் முனைத்துத் தோன்றும். அவர் பார்க்கும் பொருளனைத்தும் பரமாகவே விளங்கும். நம் ஊன விழிகளுக்கு அவை பதார்த்தங்களாகத் தோன்றும். அவருடைய ஞான விழிகளால் அவர் காண்பன எல்லாம், ' நீயே ஆகி நின்றதோர் நிலையே " என்ற பட்டினத்தடிகள் திருவாக்குக்கிணங்க இறைவன் திருவருள் நிலையேயாம் என்க. இக்கருத்தை மிகச் சுருக்கமாகவும் தெளிவாகவும் அருணந்தி சிவனார், 'திருக்கோயில் உள்ளிருக்கும் திருமேனி தன்னைச் சிவமெனவே கண்டவர்க்குச் சிவன் உறைவன் ஆங்கே' என்று அழகாகக் கூறியருளினார்.

இனி நாம் இராமலிங்கம் செய்த வழிபாட்டைக் கண்டு களிகூர்வோமாக. இராமலிங்கம் மிக இளம் பருவத்திலேயே கோயிலுக்குச் செல்லும் வழக்கம் உடையவர். துலுக்காணத் தம்மன் கோயில் ஒன்று அவர் வைகியிருந்த இடத்துக்கு அணித்தே உண்டு. அங்கும் அவர் சென்று, திருக்கோயிலைப் பன்முறை வலம் வருவார். அடிக்கடி திருவொற்றியூருக்குச் செல்வார். அங்கே உள்ள நந்தியோடை அவருக்குப் பெரிதும் இசைந்த இடம். அந்நந்தி ஓடையின் கரையிலே தென்னஞ் சோலையின் ஒரு மருங்கிலே அமர்ந்து, மெல்லென வீசுங் காற்றை நுகர்ந்தும், ஓடையிலே ஓடும் தெண்ணீரின் ஓட்டத்தைக்

கண்டும் அதனை உண்டு மகிழ்ந்தும், மா நீழலின் அருமையை ஆரத் துய்த்தும் இன்புற்ற பொழுதெல்லாம் இறைவன் திருவருள் நலத்தையும் உன்னியுன்னி அதன் கண் திளைப்பார். இத்திளைப்பே பின்னர்த் தாம்பாடிய செய்யுள் ஒன்றிலே திறம்பட அமைவதாயிற்று. அச்செய்யுள் இயற்சொற்களால் இயன்றுளதேனும் ஆழமும் நுண்மையும் பெற்றுப் பல நோக்குடன் திகழ்வதைக் காண்க.

“ கோடையிலே இளைப்பாற்றிக் கொள்ளும்வகை கிடைத்த
குளிர்தருவே தருநிழலே நிழல்கனிந்த கனியே
ஓடையிலே ஊறுகின்ற தீஞ்சுவைத்தெண் ணீரே
உகந்ததண்ணீர் இடைமலர்ந்த சுகந்தமண மலரே
மேடையிலே வீசுகின்ற மெல்லியபூங் காற்றே
மென்காற்றில் விளைசுகமே சுகத்திலுறும் பயனே
ஆடையிலே எனைமணந்த மணவாளா பொதுவில்
ஆடுகின்ற அரசேஎன் அலங்கல் அணிந் தருளே.”

இக்கவியில் ‘ ஆடையிலே எனைமணந்த மணவாளா ’ என்ற அடி, அவர் தம் இளம்பருவத்திலே தம்மைக் கலந்து நின்ற தலையன்பை நன்கு தெரித்தல் உணர்க.

நம் அடிகளார் திருவொற்றித் தியாகப்பெருமான் திருமுன்னர் நின்று வழிபடும் பொழுதெல்லாம் தாம் அன்போடு கற்றுள்ள திருவாசகம், தேவாரம் முதலிய அருணூல்களிலுள்ள திருப்பாடல்களைப் பரவசமாகப் பாடி உருகுவார். அவர் அத்தெய்வத் தீம்பாடல்களைப் படிக்குந்தோறும் தாம் நிலையழிந்து நின்ற நிலையினை அவரைக் காட்டினும் நமக்கு எடுத்துக் காட்டுவோர் யாவர் உளர்? அதனால் அவர் அருளிச்செய்த அரும்பா ஒன்றைக் கரும்பெனச் சுவைத்திடக் காட்டுவாம்.

"தேன்படிக்கும் அமுதாம் உன் திருப்பாட்டைத் தினந்தோறும்
நான் படிக்கும் போ தெல்லாம் நானறியேன் நாவொன்றோ
ஊன்படிக்கும் உளம்படிக்கும் உயிர்படிக்கும் உயிர்க்குயிருந்
தான்படிக்கும் அநுபவங்காண் தனிக்கருணைப் பெருந்தகையே."

இவ்வான்சுவை அமுதினும் மேம்பட்ட தேன்மொழி இராமலிங்க சுவாமிகள் சுந்தரப் பெருமாள் நாயனாரை முன்னிலைப் பாவலாகக் கூறியருளியது. இதன்கண் அமைந்துள்ள 'நானறியேன்' 'அநுபவங் காண்' என்று கூறிய சொற்றொடர்களை உற்று நினைந்திடுக.

நம் இராமலிங்கம் பெரும்பான்மையும் திருவாசகத்திலே ஓரம் வாய்ந்தவர் என்று என் ஆசிரியர் கூறுவர். அவர் பல காலங்களிலும் தியாகப்பெருமான் சந்நிதிலேயே நின்று, கீழ்வரும் தித்திக்குந் திருவாசகத்தைத் தாம் பாடிக் கண்மழை பொழிந்து, மயிர் புளை நிறுத்தி நாத் தழுதழுத்துச் சோர்ந்து விழுந்து விடுவது வழக்கம் என்பர்.

"பாரொடு விண்ணாய்ப் பரந்த எம்பரனே
பற்றுநான் மற்றிலேன் கண்டாய்
சீரொடு பொலிவாய் சிவபுரத்தரசே
திருப்பெருந் துறையுறை சிவமே
ஆரொடு நோகேன் ஆர்க்கெடுத்துரைக்கேன்
ஆண்டநீ அருளிலையானால்
வார்கடல் உலகில் வாழ்கிலேன் கண்டாய்
வருகஎன் றருள் புரியாயே."

இத் திருப்பாட்டினும் 'ஆரொடு நோகேன் ஆர்க்கெடுத்துரைக்கேன் ஆண்டநீ அருளிலை ஆனால் வார்கடல் உலகில் வாழ்கிலேன் கண்டாய்' என்னும் உயிரை உருக்கும் இனிய அடிகளை அவர் கூறும்பொழுது கண்களில் உவகைக் கண்ணீர் ஊற்றெடுத்  தொழுகுமாம்.

சுவாமிகள் துலுக்காணத்தம்மன், திருமகள், ஸ்ரீராகவர் முதலான பல தெய்வங்களின்மேல் பாடியுளரேனும் அப்பாடல்களெல்லாம் அநுபவமும் உருக்கமும் இன்றிக் காரிகை கற்றுக் கவி செய்யத் தொடங்கும் மாணவன் தனது கவிதா சக்தியைப் பேரிகைக் கொட்டிக்காட்டுவது போலக் காணப்படுகின்றன. அருட்பாவலர் வடிவுடையம்மை, கந்தகோட்ட முருகர் முதலினோர்மீது பாடிய பாட்டுக்களும் பழைய பாடல்களுக்குப் படி எடுத்தாற்போலும் உலக நடையை ஒழுங்காக எடுத்துக் காட்டுவனவாகவும் உள்ளன. அப்பாடல்களிலே சுவாமிகள் 'எனக்கு இதுவேண்டும் அது வேண்டும்' 'நான் இது செய்தல், அது செய்தல் ஆகாது' என்று கூறுவனவெல்லாம் அவர் ஆண்டிலே அன்றி அறிவுத் துறையிலும் இளையராதலையும், பாட்டுலகத்திற்குப் புதியராதலையும், ஞானத் திளைப்பிலே இடையறவுபட்ட நிலையினராதலையும் தெள்ளத் தெளியத் தெரிப்பனவாம்.

நம் வள்ளலாருக்குத் திருத்தணிகைத் தலத்திலும் ஆங்கே எழுந்தருளியுள்ள அறுமுகச் செல்வன் ஆழகிலும் ஈடுபாடு பெரிதும் உண்டு என்பது அத்தலத்திலும் அதனைச் சுட்டியும் அவர் பாடியருளிய பாடல்களால் உணரலாகும்.

"நண்ணேனே மகிழ்வினொடுந் திருத்தணிகை மலையதனை நண்ணி என்றன்
கண்ணேநீ அமர்ந்த எழில் கண்குளிரக் காணேனே கண்டு வாரி
உண்ணேனே ஆனந்தக் கண்ணீர்கொண் டாடியுனக் குகப்பாத் தொண்டு
பண்ணேனே நின்புகழைப் பாடேனே வாயாரப் பாவி யேனே."

இக்கவியிலே 'வாரி உண்ணேனே' என்புழிப் பொங்கித் ததும்பும் அழகு வெள்ளத்திலே ஆற்றலுடையார் முழுகி முழுகித் திளைக்க.

திருவருட் பிரகாச வள்ளலார் ஒரு கால் சென்னைக் கருகிலே உள்ள திருவலிதாயம் என்னும் திருப்பதிக்குச் சென்றார். அங்கே அப்பொழுது அக் கோயிலிலே பெருமானுக்குக் கண்காணிப்பார் இன்மையால் பழங்கந்தை சுற்றிப் பரதேசிபோ லிருந்த உள்ளம் மெலிவுருங் காட்சியைக் கண்டு, 'நெஞ்சங் கரைந்து' கண்ணீர் விட்டுப் பாடினார். அப்பாடல்களிலே அவர் எடுத்துக் காட்டிய நிலைமை அவலத்திலே ஒரு சுவையை ஊட்டுந் தகையது.

" கடுத் ததும்பிய கண்ட அகண்டனே
மடுத்து நற்புகழ் வாழ்வல்லி கேசரீ
தொடுத்தகந்தையை நீக்கித் துணிந்தொன்றை
உடுத்து வாரிலை யோஇவ் வுலகிலே "
" பாலு டுத்த பழங்கந்தை யைவிடத்
தோலு டுப்பது வேமிகத் தூய்மையே"
" புல்லிதாய இக்கந்தையைப் போர்த்தினாற்
கல்லிதாய நெஞ்சங் கரைகின்றதே"

இவற்றால் அருட் பாவலருக்குத் திருக்கோயில் வழிபாட்டிலே இருந்த உறைப்பு நன்கு விளங்கும். இவர் பாடிய பின்னர் அத்தலம் சீரும் சிறப்பும் பெற்றுத் துலங்குகிறது. இது போன்றே சென்னைக் கந்த கோட்டத்தைச் சுவாமிகள் பாடிய பின்பு, அது பொன்னும் நவமணியும் கொழிக்கும் செல்வத் திருக்கோட்டமாகத் திகழ்கின்றது என்பர்.

இனி இராமலிங்க சுவாமிகள் முடிந்த நிலையிலே பாடிய அரும்பாக்கள் எல்லாம் நடன வள்ளலைக் குறித்தவையே. அவர் தியாகரிடம் செய்யும் சல்லாபலகரியினுஞ் சிவானந்த வல்லியைக் கூறிய சௌந்தரிய லகரியினும், நடேசப் பெருமான் கருணைலகரியிலே ஈடுபட்டுக் கூறிய ஆனந்த லகரியே

எம்மனோர் கன்னெஞ்சையும் கரைத்துக் கரைத்து உவட்டாப் பேரின்பத்தைப் பொழிவனவாம்.

அவ்வெழி லனைத்துந் திரண்ட இத் திருமணிப்பாட்டை எடுத்துக் காட்டுதலோடு இச்சிறு கட்டுரையை முடிப்போம் இப்பாடல்களின் பதங் கண்டார் மதுரங்கனிந்த முழுநூலையும் படித்து இன்புறுவாரென நம்புகின்றோம்.

"நினைந்துநினைந் துணர்ந்துணர்ந்து நெகிழ்ந்து நெகிழ்ந் தன்பே
நிறைந்துநிறைந் தூற்றெழுங்கண் ணீரதனால் உடம்பு
நனைந்து நனைந் தருளமுதே நன்னிதியே ஞான
நடத்தரசே என்னுரிமை நாயகனே என்று
வனைந்துவனைந் தேத்துதும்நான் வம்மின்உல கியலீர்
மரணமிலாப் பெருவாழ்வில் வாழ்ந்திடலாங் கண்டீர்
புனைந்துரையேன் பொய் புகலேன் சத்தியஞ் சொல்கின்றேன்
பொற்சபையிற் சிற்சபையிற் புகுந்தருண மிதுவே."

## 3. சைவசித்தாந்தம்

சைவசித்தாந்தம் என்பது இன்னது என்றும் அதன் கண் உணர்த்தப்படும் உண்மைப் பொருள்கள் இன்னின்ன என்றும் அதற்கும் பிற சமயங்கட்கும் உள்ள ஒற்றுமை வேற்றுமைகள் இவ்விவை என்றும் அதன் பொதுவியல்பு சிறப்பியல்புகள் இத்தகையன என்றும் சுருக்கமாகவும் விளக்கமாகவும் இலக்கிய இலக்கணம் தமிழிலே கல்லாதவர்க்கும் சமயஞானம் பயிலப் பெறாதவர்க்கும் இனிது விளங்கும் வண்ணம் பரிபாஷைச் சொற்கள் பெரிதும் கலவாமல் இடையிடைகளை வேண்டிய அளவிற்கு அமைத்துக் கொண்டு இதுமுதல் எழுதி வருவோம்.

சைவசித்தாந்தம் என்னும் சொற்றொடரை முதற்கண் ஆராய்வோம். இது சைவம், சித்தாந்தம் எனப் பிரிக்கப்படும். சைவம் என்பது சிவம் என்னுஞ் சொல்லின் அடியாகப் பிறந்த வடமொழித் தத்திதம். இதன் பொருள்: சிவசம்பந்தமுடையது என்பதாகும். சைவம் என்னும் மொழி சிவசம்பந்தமுடைய சமயத்தையும் ஆகமங்களையும் உணர்த்தும். 'சைவத்தின் மேற்சமயம் வேறில்லை' என்றும் 'சைவமுதலாம் அளவில் சமயங்கள்' என்றும் 'இது சைவம் நிகழ்த்து மாறே' என்றும் வரும் ஆன்றோர் திருவாக்குக்களைக் காண்க. சைவம், வைணவம் எனவரும் உலக வழக்கிலும் சைவம் சமயத்தைக் காட்டல் அறிக.

இனிச் சித்தாந்தம் என்பது ஒரு சொன்னீர்மையுடைய இருசொற்களாலாய தொடர்மொழி. இது சித்தம், அந்தம் எனப் பகுக்கப்பட்டு முடிந்த முடிபு என்னும் பொருளைப் பயக்கும். முடிந்த முடிபாகும் சிவாகமங்கள் சித்தாந்தம் என வழங்கப்பெறும். 'சிவாகமங்கள் சித்தாந்தமாகும்' என வரூஉம் சிவஞான சித்தியார் திருவாக்கைக் காண்க. இது 'சித்தாந்த வீதிவரும் தேவே பராபரமே' என்றும் 'சித்தாந்தத்தே சிவன் றன்திருக்கடைக்கண் சேர்த்தி' என்றும் 'தான் என்னும் வேதாந்தம் தானை சித்தாந்தம்' என்றும் வரும் வழக்குக்களால் சமயத்தை உணர்த்தலும் கொள்ளப் படும்.

எனவே, சைவசித்தாந்தம் என்பது சைவத்தினது முடிந்த முடிபு என்றும் சிவாகமங்களாகிய முடிந்த முடிபு கள் என்றும் சிவசம்பந்தமுடைய முடிந்தமுடிபாகிய ஆக மங்கள் என்றும் பலபொருள்படுதலும், சைவமாகிய சித் தாந்தமென ஒரு பொருள்படுதலும் தெளியப்படும். உலக வழக்கிலே பெரும்பாலும் சைவம் சமயாசாரம், கிரியை

முதலியவற்றையும் சித்தாந்தம் தத்துவ ஞானப் பகுதியை யும் புலப்படுத்தல் தெளிவாம்.

இனி, இச்சொற்றொடர் எப்பொழுது முதன் முதல் யாரால் வழங்கப்பட்டதெனச் சிறிது நோக்குவோம். இவ் வுண்மையினை ஆராய்ந்த அறிஞர் சிலர், 'வேதாந்தத் தெளி வாஞ் சைவசித்தாந்தத் திறன்' என்னும் உமாபதி சிவனார் திருவாக்கை எடுத்துக்காட்டிச் 'சைவ சித்தாந்தம்' என்பது முதன் முதல் உமாபதி சிவனாராலேயே உரைக்கப்பட்ட தென்றும், அதனால் அஃது இற்றைக்குச் சிறிது ஏறத்தாழ அறுநூறு ஆண்டுகட்கு முற்பட்டதே என்றும் முடித்தார். இது பொருந்தாது. ஏனெனில், உமாபதி சிவனாருக்கு ஏறக்குறைய நானூறு ஆண்டுகட்கு அஃதாவது இற்றைக்கு ஓராயிரம் ஆண்டுகட்கு முன்னரே விளங்கிய அற்புதஞான வைராக்கிய நற்றவச் செல்வராகிய பட்டினத்துப் பிள்ளை யாரால் 'சைவசித்தாந்த தெய்வநல் ஆகமம்' என அருளிச் செய்யப்பட்டமையால் என்க. இனி, இச்சொற்றொடர் காணப்படும் பாட்டு, பட்டினத்தடிகள் இயற்றியதன்று, இடைச்செருகல் என்றும் கூறுவாரும் உளர். அவர் அதற் குக் கூறும் காரணம் மென்மையுடையதாதலின் அது கொள்ளற்பாலதன்று.

ஆயிரம் ஆண்டுகட்கு முன்னரே சைவசித்தாந்தம் என்னுஞ் சொற்றொடர் செய்யுள் வழக்கில் ஏறியதெனக் கூறியதால் சைவசித்தாந்தமே அப்பொழுதுதான் தோன் றிற்று எனக் கொள்ளற்க. சைவ சமயம் எக்காலத்தே தோன்றிற்று என வரம்பிட்டுக் கூற எவராலும் இயலாது. அதனானே அது அநாதியான சமயம் எனப் பெரியோரான் புகழ்ந்துரைக்கப்பட்டுள்ளது. சைவம் என்னும் வழக்கும் சிவாகமங்களும் தோன்றிய காலம் இன்னதென அங்ஙனமே

கூற இயலாது. சிவாகமங்கள் சிவபெருமானால் திருவாய் மலர்ந் தருளப்பட்டன என்பது சைவர் கொள்கை. இனிச் சைவர் பிரமாணமாகக் கொள்ளும் நூல்களைத் தெளிந்து கொள்ளல் வேண்டும். இருக்கு, யஜுர், சாமம், அதர் வணம் என்னும் வடமொழி நான்மறைகள் சைவருக்கு உடன்பாடே. இந்நான் மறைகளையும் சைவர் தமது பிர மாண • நூல்களில் பொதுவெனக் கொள்வர். சிவாகமங் களையே தமக்குச் சிறப்புப் பிரமாணமாக ஏற்றுக்கொள்வர். வேதத்திலே சூரியன், வருணன், வாயு, மித்திரன், பிரமன், விஷ்ணு முதலான பலதேவ வழிபாடுகள் காணப்படுவதால் அது பொதுப்பிரமாணமாகச் சைவராற் கருதப்பட்டது. சிவாகமங்கள் அவ்வாறின்றிச் சிவபெருமான் ஒருவருக்கே சிறப்பாக இருத்தலால் அவை சைவருக்குச் சிறப்புப் பிரமாண நூல்களாயின. சிவாகமங்களுக்கும் வேதத்திற்கும் முரண் காணப்படின் சிவாகமப் பொருளையே சைவர் கொள் வர். இதனாற் சைவசித்தாந்தம் ஆகமாந்தம் என்னும் ஒரு பெயரையும் பெற்று வழங்கும்.

இனி, வேதம் ஒரு சாரார் தனக்குத்தானே பிர மாணம் என்றும் ஒரு புருஷனால் செய்யப்படாத அபௌ-ருஷேயம் என்றும் கருதப்படும். சைவரும் பிறரும் அது கடவுளால் அருளிச்செய்யப் பட்டதெனக் கொள்வர். வேதமும் இன்ன காலத்தே உதித்தது என அறியப்படா மையான், அநாதி எனக் கூறப் பெறும். பண்டைக்காலத்தி லேயே வேதத்தைப் பிரமாணமாகக் கொண்ட ஒரு சிலர் சிவாகமங்களைப் பிரமாண நூல்களாக ஒப்புக்கொள்ளாது மறுத்துள்ள செய்திகள் நூல்களில் காணப்படுகின்றன. அவ்வழக்கு இன்றும் முற்றும் ஒழிந்ததெனக் கூற முடி யாது.

பிற்காலத்தே வியாசர் அருளிய பிரம்ம சூத்திரத்துக்கு முதன் முதல் பிரமாண சகிதம் உரைகண்ட ஆசிரியர் நீலகண்ட சிவாசாரியர் தமது பாஷ்யத்திலே இப்பொருளை எடுத்துக்கொண்டு வேதமும் ஆகமமும் தம்முள் ஒருமையுற்று நடத்தலை நன்கு விளக்கினர். பின்னர்த் திருமூல யோகிகள்,

'வேதமோ டாகமம் மெய்யாம் இறைவன் நூல்
ஓதும் பொதுவுஞ் சிறப்புமென் றுன்னுக
நாதனுரை யிவை நாடில் இரண்டந்தம்
பேதம தென்னிற் பெரியோர்க் கபேதமே.'

என்னும் திருமந்திரத்தால் வேதம் ஆகமம் என்னும் இரண்டும் உண்மை நூல்கள் என்றும் அவற்றுள் வேதம் பொது நூலும் ஆகமம் சிறப்பு நூலும் ஆகக் கொள்ளப் படுமென்றும் இவ்விரண்டுக்கும் பரமாசாரியன் சிவபெருமானே என்றும் அவை தம்முள் பேதமில்லை என்றும் உண்மை தெளிந்த பெரியோருக்கு அவை அபேதமாக விளங்குகின்றன என்றும் தெளித்துரைப்பாராயினர்.

இனிச், சைவர், வேதம் கன்மகாண்டம் ஞானகாண்டம் என இருவகையாகக் காணப்படுதலின் அது யாவருக்கும் பொதுவாகப் பயன்படும்படி அருளிச் செய்யப்பட்டதென்றும் சிவாகமம் திருவருளைப் பெற்ற அதி தீவிர பக்குவமுடையார்க்கு அருளிச் செய்யப்பட்ட தென்றும் கொள்வர். ஆகமங்களிலும், ஆகமம் என்னும் பெயரை உடைய எல்லா ஆகமங்களும் சைவருக்குப் பிரமாணமாகா. நூற்றெட்டுச் சிவாகமங்களையே சைவர் பிரமாணமாகக் கொள்வர். இவைகளே திவ்யாகமங்கள் எனப்படும். இவ்வுண்மை சைவ நூல்கள் எல்லாவற்றிலும் முழங்கும். 'ஆகமமாகி நின் றண்ணிப்பான் தாள்வாழ்க' 'வேதங்கள் ஐயா

என ஓங்கி ஆழ்ந்தகன்ற நுண்ணியனே' என வரும் தித்திக்கும் திருவாசகத்தின் திப்பிய மொழிகளை நோக்குக.

இனி, ஒவ்வொரு வேதத்திற்கும் இறுதியிலே சிற்சில உபநிடதங்கள் காணப்படுகின்றன. இவைகளே ஞானத்தைக் கூறுகின்றன. ஆதலால் இவை ஞானகாண்டம் என்றும் ஒவ்வொரு வேதத்தின் அந்தத்திலும் இருப்பதால் வேதாந்தம் என்றும் வழங்கப்பெறும். கன்மத்தையே கூறும் வேதத்தின் முற்பகுதியினும் ஞானத்தைக் கூறும் வேதப்பிற்பகுதியாக உபநிடதங்கள் சிறந்தன. ஆதலால் அவைகட்கு வேதாந்தம் என்னும் சிறப்புப் பெயர் வழங்கும். அவ்வுபநிடதங்களைக் காட்டிலும் திவ்விய சிவஞானத்தை உள்ளங்கை நெல்லிக்கனி யெனத் தெள்ளிதின் உணர்த்தும் சிவாகமங்கள் சிறந்தவை.

இக்காரணம் பற்றிச் சிவாகமங்கள் வேதாந்தசாரமெனக் கூறப்படும்.

இனி வேதாந்தம் என வரும் இடங்களி லெல்லாம் அஃது உபநிடதங்களைக் குறிப்பதாகக் கொள்ளல் வேண்டும். வேதாந்தம் எல்லார்க்கும் பொது. அஃது ஒருவருக்கு மட்டும் சிறப்பன்று. வேதாந்திகளென வைணவரும் கூறுவர்; சைவரும் 'வேதாந்தத் தெளிவாஞ் சைவசித்தாந்தம்' என்றும், 'வேதாந்த சித்தாந்த சமரச நன்னிலை' என்றும்,

'ஒரும் வேதாந்தமென் றுச்சியிற் பழுத்த
ஆரா இன்ப அருங்கனி பிழிந்து அதன்
சாரங்கொண்ட சைவசித்தாந்தத்
தேனமு தருந்தினர் சிலரே.'

என்றும் ஆங்காங்கு முழக்குதல் காண்க. ஆனால் உலக வழக்கிலே ஏகான்ம வாதிகளே தம்மை வேதாந்திகளெனவும் அத்துவிதிகள் எனவும் வழங்கி வருகின்றனர். அத்து

விதம் என்னும் சொல்லும் வேதாந்தம் என்பதைப் போலவே பொது மொழியாம். சைவரும் அத்துவிதிகளே. அவர் தம்மைச் சுத்தாத்துவிதிகள் என்பர். வைணவர் தம்மை விசிஷ்டாத் துவைதிகள் என வழங்குவர். சைவர், வைணவர் என்னும் பெயர்கள் இவ்விருவருக்கும் வழங்குதலானும் சைவருக்குச் சித்தாந்திகள் என வேறொரு சிறப்புப் பெயர் வழங்குதலானும் அவர்கட்குப் பொதுப் பெயர் உலக வழக்கிலே அருகி வழங்கலாயிற்றெனை அறிக. இப்பெயரால் குழப்பம் ஏற்படுதலால் இதனை ஈண்டு விளக்கினேம்.

உபநிடதங்கள் யாவர்க்கும் பொதுவாதல் பற்றி அவ்வ கட்குப் பலர் தந்தங் கொள்கைகட்கு ஏற்றவாறு வலிந்தும் நலிந்தும் பொருள்கொண்டு நூல் செய்துள்ளார். அவற்றுள் சைவசித்தாந்த உரைகளையே பிரமாணமாகக் கொள்வர் ஓர் ஒழுங்கின்றிப் பொற்றுகள் போல ஆங்காங்குச் சிதறுண்டு கிடக்கும் உபநிடத ஞானப் பொருள்களை எல்லாம் ஒரு முறைசெய்து ஒன்றுபடத் திரட்டி உருக்கி வார்த்த பொற்பிழம்பு போல்வது வியாசமுனிவர் அருளிச் செய்த பிரம்ம சூத்திரம். இதுவும் யாவர்க்கும் பொது. இதற்கும் பலர் உரை கண்டனர். சங்கராசாரியார் ஏகான்ம வாதம் பற்றியும் இராமானுஜர் விசிஷ்டாத்துவிதம் பற்றியும் மாத்துவர் துவிதம் பற்றியும் உரை செய்துள்ளார். ஆசிரியர் நீலகண்டனார் சைவபரமாக உரை கண்டார். இவ்வுரையே நாம் கொள்ளத் தக்கது. இவ்வுரையும் சைவசித்தாந்தத்தோடு பெரிதும் ஒத்துச் சிறிது ஒவ்வாமல் நடப்பது. ஏனெனில் சைவசித்தாந்தத்தின் உட்பகுதியாகிய ஒரு பிரிவையே தழுவியது இவ்வுரை என்க.

இனி ஆகமங்களிலேயும் சிற்சில வேற்றுமைகள் கல்ப பேதம் பற்றி உண்டு. அவற்றுள் சில வாக்கியங்கள் ஒன்

றுக்கொன்று முரணுவனபோலவும் காணப்படும். அன்றி யும் வேதத்திற்கும் ஆகமத்திற்கும் உள்ள ஒற்றுமை நயத்தையும் இனிது விளக்கி யாரும் காட்டிற்றிலர். மேலும் அத்துவிதம் என்னும் சொல்லின் பொருளை யும் புலங்கொள்ள விளங்க வைத்தார் ஒருவரு மிலர். அத்தகைய அரும்பெரும் திறற்பணியை ஆற்றுதற்குத் தமிழ்த் திருநாடும் சைவப் பெரு நாடும் செய்த தவப் பயனாகத் திரு வெண்ணெய் நல்லூரிலே வேளாளர் நன்மரபாகிய திருப்பாற் கடலிலே சொற்சூழலில் கவிந்து கொண்டிருந்த இருள் ஒழிய உண்மை ஞான ஒளிக் கதிர்களைப் பரப்பி ஞான சூரியன்போல எழுந்தனர் மெய்கண்ட சிவாசாரிய சுவாமிகள். இத்தெய்விகப் போறி ஞரே வேதத்துக்கும் ஆகமத்துக்கும் உள்ள ஒற்றுமையினை உணர்த்தித் தெரித்தோதிய செல்வர். இவரே சிவாகமங் களின் முரணை அறுத்து அரண் வகுத்த நுண்மதியாளர். இவரே அத்துவிதத்தின் மெய்ப்பொருள் தெரிந்து எம்மை உய்யக்கொண்ட மெய்கண்ட தேவர். இவரே சைவருக்குச் சித்தாந்த பரமாசாரியர். இவர் திருவாய் மலர்ந்தருளிய சிவஞானபோதமே சைவசித்தாந்த முதனூல். இதுவே சைவ சித்தாந்தப் பரமப் பிரமாண நூல்.

இங்கு நாம் சைவருக்கு ஓர் எச்சரிக்கை செய்ய வேண் டும். அஃதாவது இத்தகைய சிவஞானபோதம் வெளிப் படையாக ஐயமின்றிச் சைவசித்தாந்தத்தை எடுத்து விளக் கும் பெருநூலாதல் அறிந்துவைத்தும் இதன் ஒப்பற்ற பெருமையை நோக்கிய பிற சமயத்தார் ஒருவர் சைவரை வஞ்சிக்கும் பொருட்டு இதற்குத் தமது சமயத்துக்கு ஒற் றுமையாக்ச் சொற்களை ஈர்த்து வலிந்து பொருள் செய்த ஒரு சைவ நூல் வெளி வந்துளது. இதனைச் சைவசித்தாந்தி

கள் உணரல்வேண்டும். இவ்வாறே சிவப்பிரகாசத்துக்கும் அவ்வாருய உரை உண்டு. சிவஞான சித்தியாருக்கு உள்ள ஞானப்பிரகாச முனிவர் உரையும் சைவத்தின் உட்பிரிவு ஒன்றைப் பற்றிச் செல்வதே. இவற்ருல் சைவசித்தாந்திகள் தமது நூல்கள் இன்னின்ன எனத் தெரிந்து கொள்வதோடு அமையாமல் அவற்றின் உரைகளிலும் தம்முடையவற்றைத் தேடித்தெளிய வேண்டியவர்களாக உள்ளார்கள் என்பதை அறிவுறுத்துகின்ருேம்.

இதுகாறும் சைவ சித்தாந்தம் என்னும் தொடர் மொழியைப் பற்றியும் சைவர் பிரமாண நூல்கள் இவ்விவை என்பதைப் பற்றியும் சிறிது கூறினேம். இனிவரும் கட்டுரைகளிலே சைவசித்தாந்தத்திலே கூறப்படும் பதி பசு பாச. உண்மை இயல்புகளைப் பற்றி எழுதுவோம்.

---

## சைவ பரிபாலனம்

நாகரிகத்திற் சிறந்து விளங்கும் மக்கள் எல்லாரும் தமது உடம்பைப் பேணி வளர்த்தலே போல அறிவையும் உயிரையும் வளர்த்து வருகின்றனர். உயிர் வளர்த்தலே சமய வளர்ச்சியாகும். சமயத்தைப் போற்றுவது ஒவ்வொருவருக்கும் இன்றியமையாத கடமையாம். சைவராகிய நாமோ நமது சமயத்தைப் பிறரைப் போலப் புரத்தலின்றி வாளா உறங்கிக் கிடக்கின்ருேம். நமது தூக்கம் நம்மை எத்துணைக் கீழே தூக்கிவிட்டதென்பதையும் உணராமலும் உணர விருப்பமின்றியும் இருக்கின்ருேம். சைவசமயத்தைப் பற்றிய கொள்கைகள் இன்னின்ன என்று பொதுவாகவாதல் சைவர் ஒவ்வொருவரும் அறிந்துகொள்ள வேண்டாமா? திருநீறு ஏன் பூசவேண்டும்? கோயில்களின்

அமைப்பு என்னை? என்றுதல் தெரிந்துகொள்ள வேண்டாமா? சைவகுரவர் இன்னார் என்பதும் சைவருள் மிகப் பலருக்குத் தெரியாது. சித்தாந்த நூல்கள் இன்னின்ன என்பதையும் பலர் அறிந்திலர். பன்னிரு திருமுறைகளின் பெயர்களையும் உணரார் பலர். சில சபையார் திருமுறை விழாவிலே வடிவிலே பெரியவையாக வுள்ள பிற புத்தகங்களைத் திருமுறைகளோடு அடுக்கி வைத்து விழவாற்றியதையும் நேரிற் கண்டுள்ளோம்.

இன்னும் திருமயிலையில் நடைபெறும் அறுபத்துமூவர் விழாவிலே காரைக்கா லம்மையார் திருவுருவைக் கண்டு, "இவ்வம்மை அறுபான்மும்மைப் புதல்வரை ஈன்றனள்; இனி ஒரு பெண்ணைப் பெற விழைந்து தவங் கிடக்கின்றாள்," என்று கூறும் பேதையர் எத்தனைபேர்? திருவொற்றியூரின்கண் நிகழும் மகிழடி சேவை செய்யத் திருக்கோயிலிற் சென்று, முன்னரே இடந்தேடிக்கொண்டு தங்கி, அவ்விடத்திலேயே மலமும் நீரும் கழிக்கும் மடவோர் எத்துணையர்? திருவானைக்காவின் உட்புறத்தே யுள்ள திருக்குளத்திலே காலைக் கழுவியவரைக் கண்ணிற் கண்டதுண்டு. திருவிழாக் காலங்களிலே திருக்கோயில்களைச் சுற்றி இருக்கும் அருவருப்பான காட்சி யாவர் உள்ளத்தைத் தான் வருத்தாது? இவ்வளவு சீர் கேடான நிலைமை ஏன் வந்தது? சைவர் தமது சமயத்தைப் பற்றிய கொள்கைகளை நன்கு பாப்பாமல் இருத்தலானன்றே. கற்ற ஒரு சிலர் சைவத்தைப் பற்றித் தெரிந்துகொண்டு சில காலங்களில் விரிவுரைகள் செய்து விடுவதால் சைவம் பரவி விடுமா? ஒரு சிலர் எவ்வாகம விதிப்படித் தீக்கை பெற்றாரோ அவ்வாகம விதிப்படியே திருநீற்றுப் புண்டரம் தரித்துக்கொண்டு திருக்கோயில் வழிபாடு செய்து விட்டால் மட்டும் சைவம்

பாம்புமா ? யாரோர் சிலர் திருமுறைகளைப் பண்ணோடு வுடன் பாடிவிட்டால் சாலுமா ? பத்திரிகைப் பிரசாரம் மட்டும் போதுமா ? பல படியாலும் சைவர் தம்து சமய ஞானத்தைத் தம்முடைய மக்கட்கேனும் புகட்டல் வேண்டும். இல்லாவிட்டால் சைவம் என்பது இன்னதென்றே தெரியாமற் போகும் காலம் வந்துவிடும்.

இப்பொழுது எங்குப் பார்த்தாலும் பகவற்கீதை முழக்கம் கேட்கிறது. காரணம் என்ன ? அது நமது சிவஞான போதத்தின் முன்னர் மின்மினி போல்வது. அதன்கணுள்ள பொருள்கள் யாவும் சிவாகமங்களினின்றும் படியெடுத் தெழுதப்பட்டவை என்பதை வீரசைவ நண்பர் ஒருவர் விளக்கி எழுதிய ஆங்கிலப்புத்தகம் ஒன்றும் கைவரப் பெற்றோம். பகவற்கீதையைக் கற்ற ஒருவன் தத்துவ ஞான முழுவதையும் உணர்ந்துகொள்ள இயலாது. ஆனால் சிவஞான போதத்தைக் கற்ற வொருவனே உலகத்திலே யுள்ள எல்லா ஞானங்களின் முடிவையும் தெளியலாம். இத்தகைய விழுச்சீரைப் பெற்றும் சிவஞான போதத்தின் பெயர் ஏன் பகவற்கீதையைப் போல யாண்டும் நிகழவில்லை. காரணம் சைவர் தூக்கமும் பிறர் ஊக்கமுமே யாகும். வியாசர் செய்த பிரமசூத்திரத்துக்கு நீலகண்ட சிவாசாரியார் அருளிச்செய்த சிவாத்துவித பாடியம் ஆங்கில ஆராய்ச்சியாளர்க்கும் தெரிய வில்லை. 'திரிமதபாஷ்யம்' என்றே பலரும் வாய்ப்பறை அறைகின்றனர். நீலகண்டர் பாடியம் ஒன்றுண் டென்பதனையே மறைக்கின்றனர் பலர். அதற்காகச் சைவர் என்ன செய்கின்றனர் ?

நாலாயிரப் பிரபந்தம் பிராமணர்களால் கோயில்களின் உள்ளும் திருவிழாக்காலங்களில் வெளியே வீதிகளிலும் ஆரிய மறையுடன் ஓதப்பட்டு வருகின்றது. சுப்ரசுப்க்

காலங்களிலும் வைணவர் தம் வீடுகளிலே பிரபந்த சேவை செய்கின்றனர், சைவப்பிராமணர் எத்தனை பேர் தமிழ் மறை ஓதி வருகின்றனர்; சைவ ஓதுவார் எவ்வளவு பேர் இருக்கின்றனர்?

இதற்குக் காரணம் யாது? தமிழ்த் திருமுறைகளைப் பண்ணுடனேயே பாடவேண்டுமெனச் சைவர் ஒரு தப்பெண்ணத்தை வைத்துக்கொண்டிருத்தலேயாம். பண்ணுடன் பாடுதல் யாவர்க்கும் இயல்வ தன்று. அங்ஙனம் செய்வதற்குப் பண்ணில் பழக்கம் வேண்டும்; தாள அறிவைப் பெற வேண்டும்; குரலினிமையும் அமைந்திருத்தல் வேண்டும். இவ்வளவும் பொருந்துதல் அரிது. சைவர் எல்லாரும், வைணவர் நாலாயிரத்தை ஓதுதல்போல ஏன் ஓதலாகாது? பெரியவர் சிறியவர் கற்றோர் கல்லாதார் ஆகிய எல்லோரும் திருமுறைகளை வாயார மனமுருகி ஓதினால் அதனால் ஓதுவாருக்கும், ஓதுதலைக் கேட்டோருக்கும் எவ்வளவு உருக்கமும் அன்பும் உண்டாகும். சைவர் திருவாசகத்தில் உள்ள அடைக்கலப்பத்தை முடிவுக் காலத்திலேயே படிக்கத் தொடங்குகின்றனர்; பிணத்தின் முன்னே கூலி கொடுத்துத் திருவாசகம் பாடச் செய்கின்றனர். இதனால் திருவாசகம் என்றபொழுதே ஒரு சிலர் 'முடிவு வந்து விடுமோ' என அஞ்சுகின்றனர். இப்பழக்கத்தை அறவே விடுத்து, எப்பொழுதும் எவ்விடத்தும் யாவுராயினும், சைவத் திருமுறைகள் ஓதப்படல் வேண்டும் என்னும் பழக்கத்தை உண்டாக்க வேண்டும். இசைப்புலவர் நன்கு தேர்ந்து இசையென்னும் இனிய சுவையுடன் தேவார அமிழ்தத்தை ஒருபால் ஊட்டலாம்; மற்றையோர் உருக்கத்துடன் பாடுதலைக் கைக் கொள்ள வேண்டும்.

சிவாலயங்களிலும் திருமடங்களிலும் வரும் வருவாயைச் சைவப் பிரசார வேலைக்கேனும் செலவிடல் ஆகாதோ? ஒவ்வொரு கோயிலிலும் ஏன் தேவார பாடசாலை வைத்தலாகாது? ஏன் சிவபுராணப் பிரசங்கம் செய்விக்கலாகாது? ஏன் கோயில்களைத் தூய்மையாக வைத்திருத்த லாகாது? பொது மக்கட்குப் பயன்படத் தக்க வேறு விஷயங்களை ஏன் நோக்க லாகாது? இக்காலத்தும், இத்தகைய நன்மைகளை செய்யத் தரும கருத்தர் எவரும் எண்ணி முன்வரவில்லை. பொதுமக்களும் கிளர்ச்சி செய்தல் இல்லை. அரசாங்கத்தார் அமைத்த சட்டமும் போதியதாகக் காணப்படவில்லை.

சிவாலயங்களிலே முன்பெல்லாம் சோற்றுப் பிரசாதங்கள் இல்லை. திருநீற்றுப் பிரசாதமே இருந்தது. சிவதீக்கை பெறுவோர் சிவாலயத்தினின்றும் யாதும் கொள்ளலாகாது என்னும் விதியும் உளது. அங்ஙனம் விதி இருப்பவும் அதற்கு மாறாக இப்பொழுது சிவாலயங்களும் பிற ஆலயங்கள் போலவே சோற்றுத் துறையிலே துறை போய் உள்ளன. ஏழைமக்கட்குப் பட்டைச் சாதமும் கிட்டுவதில்லை. சைவ தரும கருத்தர் பலர் பொங்கலுக்கு நறுநெய் வரையறுப்பதிலும் வடையின் செய்முறை பற்றியும் சுவையுள்ள புதுப் புதுத் திற்றிகளைச் செய்பாகம் கைப்பாகம் வழுவாமல் சமைப்பிப்பதிலும் முனைத்து நிற்கின்றதைக் காண்கின்றோம்.

சிலர் சிவாலயங்களிலே இல்லாத புதுவழக்கங்களைக் கொணர்ந்து புகுத்தி விட்டனர். குருக்கள் ஒருவரோ அல்லது புலவர் ஒருவரோ ஒரு கோயிலுக்குத் தனிச் சிறப்பு வேண்டுமென்று எண்ணினால் சாலும். எல்லாம் இமை கொட்டுமுன் நிகழ்ந்துவிடும். குருக்கள் ஆகமவிதியைக் கொண்டு வந்து காட்டுவர்; புலவர் தலபுராணம் நீட்டுவர்;

இப்பொழுது ஒரு கோயிலிலே நூறு பிள்ளையாரை ஒருங்கே காணும் காட்சியால் இம்மை மறுமை வீடு பேறு கள் எளிதில் கைகூடும் என்றொரு நியாயம் வகுத்துக் குருக் கள் ஒருவர் பிள்ளையார் திருவுருவம் நூறு சமைப்பித்துக் கொண்டு வருகிறார். காஞ்சிபுரத்தின்கண் ஒரு சிவாலா யத்திலே சடகோபம் கொண்டுவந்து அன்பர் தலையிலே குருக்கள் தரித்ததைக் கண்டுள்ளோம். சடகோபம் இன் னது என்பதும் அதற்கும் சைவருக்கும் யாதும் தொடர் பில்லை என்பதும் அன்னார் படியாத பாடங்கள்.

ஓர் ஆலயத்திலே சந்திரசேகர மூர்த்தியின் உருவம் சிறியதெனக் கருதிய கோயிற் குருக்கள் நடாராஜரை மறைத் துச் சந்திரசேகரராகக் கொணர்வித்துக் கோலங் காட்டி எக்களித்தனர். அசம்பிரதாய உற்சவங்களும் போலி ஒழுக் கங்களும் இடம்பச் செயல்களும் ஆரவார நாடகக் காட்சி களுமே ஆலயங்களிலே காணப்படுவதால் உண்மை தெரிந்த அன்பர் சிலர் வெறுப்புற்று ஆலயங்களுக்குப் போதலை அறவே ஒழித்து விடுகின்றனர்.

இவற்றைப் பற்றிச் சைவராகிய நாம் என்ன செய்கி றோம். கோயில்களின் வருவாயைக் கொண்டு செய்ய வேண்டுவனவற்றைத் தக்கபடி ஒழுங்காகச் செய்வித்து, எஞ்சிய பொருளைப் பொது மக்கட்குச் சைவ அறிவு கொளுத்துதற்காகச் செலவிடுவோமானால், இத்தகைய குற றங் குறைகள் நாளடைவில் ஒழிந்து விடும். இங்ஙனம் செய்யாமல் 'இராமனாண்டால் என்ன, இராவணன் ஆண் டால் என்ன?' என்று சோம்பேறி ஞானம் பேசிக்கொண்டு இருப்போமானால் நமது சமயம் குன்றிவிடுதல் ஒருதலை.

ஆலயங்கள் இன்ன காரணத்திற்காக அமைக்கப்பட் டன என்றும், இன்னின்ன தத்துவங்களை இனிது விளக்கு

வன என்றும் அறிவிப்பதில் செலவிடப்படாத கோயிற் பொருள் மற்றெதற்குப் பயன்படற் பாலதென எமக்கு விளங்க வில்லை. கோயில்களிலே வைத்துள்ள மூலதனமும் அவ்வப்போது சேரும் தொகையும் பொதுமக்கள் எல்லாருக்கும் உரியன. நம்முடைய பொருளைச் செலவழிப்பதில் எத்துணைச் செட்டும் நினைப்பும் நமக்கு உண்டாகுமோ அத்துணை, ஆலயப்பொருட் செலவிலும் நமக்கு உண்டாதல் வேண்டும். ஆனால் நம்மவரிற் பெரும்பான்மையோர் இன்னும் தனி நிலையினின்றே பொருளை நோக்குகின்றனரே அன்றிக் கலப்பு நிலையினின்றும் நோக்குகின்றார் இல்லை. கோயில் பொருள் அல்லது மடத்தின் பொருள் எக்கேடு கெட்டாலும் தமது பொருள் வீணே செலவழிக்கப்பட்டதாக அவர் எண்ணுவ தில்லை; ஆத்திரங் காட்டுவதும் இல்லை.

தத்துவ உபந்நியாசங்கள் சிறந்த புலவர்களைக் கொண்டு செய்விக்கின்றனர். அவ்வகையிலே சைவசித்தாந்த தத்துவ உபந்நியாசங்கள் பலவற்றைத் தக்க புலவர்களைக் கொண்டு செய்விக்க வேண்டுமென அச் சங்கத்தாரை நாம் கேட்டுக் கொள்ளவேண்டும். கீழ்நாட்டுப் பட்டப் பரீக்ஷைகளில் ‘சித்தாந்த சிரோமணி’ என்னும் பட்டப் பரீக்ஷையை ஏற்படுத்த வேண்டுமென ஆங்காங்குள்ள சைவ சபைகள் ஓயாமல் கிளர்ச்சி செய்ய வேண்டும்.

சென்னை இராஜதானிக் கல்லூரியிலே தத்துவப் பகுதியிலே சென்ற ஆண்டிலே ஒன்றாகக் கொள்ளப்பட்ட சைவ சித்தாந்தம், வரும் ஆண்டிலே செய்கையிற் பாட அமைப்பிலே வரவேண்டு மென்றும் அதன் பொருட்டுச் சைவ சித்தாந்தத்திலே வல்லவர் ஒருவரைப் போதகாசிரியாராக உடனே ஏற்படுத்தவேண்டுமென்றும் நாம் வித்தியா இலாகா அமைச்

சருக்கும் பொதுக் கல்வித்துறைத் தலைவருக்கும் தெரிவித்தல் வேண்டும். இன்னும் இவை போலச் செய்ய வேண்டுவன பல உள. அவற்றை விழிப்பா யிருந்து நாம் அவ்வக் காலங்களில் அதிகாரிகளுக்கு எடுத்துக் காட்டிக் கருமத்தை முடிக்க வேண்டும்.

சைவர்கள் கோயில், மடம், பொதுநிலயங்கள், அரசாங்கம் முதலான பல்வேறு இடங்களிலும் திரண்டிருக்கும் பொதுப்பொருளில் தமக்கு நியாயமான உரிமையைப் பெற்றுச் சிறந்த முறைகளை அமைத்துக்கொண்டு சைவபரிபாலனம் செய்யவேண்டும் என்பதை நன்கு உணர்வாராக. சைவ நன்மக்களே, நீங்கள் உண்மையாகச் சைவத்தில் பற்றுடையவரானால் காலத்துக் கேற்றவாறு சைவப் பிரசாரம் செய்ய முற்படுமின். நமது உரிமையைப் பெற விழைமின். பலவழியினும் சிதறுண்ட பொருளை ஈட்டுமின். விழிமின்! எழுமின்!

---

## 5. சைவமே சமரச சமயம்

சைவசித்தாந்தம் என்னும் நமது மதம் நினைவிற்கு எட்டாத பண்டைக் காலத்தில் தோன்றி நின்று திகழும் அரும் பெருஞ் சமயமாகும். அதனை இன்ன காலத்தில் இன்னார் தோற்றுவித்தார் என்று கூறுதற்கு இடமில்லை. சில சமயங்களை இன்னின்ன கால எல்லைகளிலே தோன்றின என்று உறுதியாய் நிலையிட் டுரைத்து விடலாம்; சில சமயங்கள் அண்மைக் காலத்திலேயும் தோன்றின; சில இன்னும் புதிதுபுதிதாக எழுகின்றன; இனியும் பல எழுதல் கூடும்.

இந்நிலவுலகிலே பலதிறப்பட்ட மக்கள் வாழ்கின்றனர்; ஒவ்வொருவரும் ஒவ்வொரு வகையான அறிவும் விருப்ப

மும் ஆற்றலும் வாய்ந்தவராகக் காணப்படுவர். ஒரே வயிற்றிற் பிறந்தோரும் தம்முள் பெரிதும் அறிவு விருப்பங்களால் வேற்றுமைப்பட் டிருத்தலைக் காண்கிறோம். இங்ஙனம் உண்மை இருத்தலால் எல்லோரும் ஒரே வகையாக என்றும் இருத்தல் இயலாது. அதனால் மக்களுக்குக் காலந்தோறும் மதவேறுபாடுகள் உண்டாதலும் புதிய மதங்களில் பற்று நிகழ்தலும் இயல்பேயாம். நமது சைவ சித்தாந்தமும் தோன்றிய நாள் தொட்டு ஒரே வகையில் இருந்தது என்று கூறலாகாது; அதுவும் காலந்தோறும் அதனை அவலம்பிப் போர் அறிவு வளர்ச்சி மனப்பான்மை, நாகரிக முதிர்ச்சிக் கேற்றவாறு திரிந்தும் விரிந்தும் உயர்ந்தும் பரந்தும் வந்து கொண் டிருக்கிறது. எக்காலத்தும் ஒரே நிலையில் உயிருள்ள மதம் இருத்தல் இயற்கைக்குப் பொருந்தாது. அங்ஙனம் ஒரு மதம் இருக்குமெனக் கொள்ளின் அஃது உயிரற்று இறந்துபடும் என்பது உணர்வுடையார் யாவர்க்கும் தெற்றெனப் புலப்படற் பாலதே.

இனிச், சமயம் என்பது யாதெனச் சிறிது ஆராய்வோம். எச்சமயமேனும் அது தோன்றுவதற்கு முன்பே அதன் உணர்ச்சி அரும்புதல் வேண்டும்; சமய உணர்ச்சி அரும்பிப் போதாகி மலர்ந்த பின்னரே சமயம் என்னும் கனி பழுப்பதாகும். ஆதலின் சமய உணர்ச்சி எப்பொழுது உண்டாகு மென்பது ஆராயற் பாற்று. இவ்வகன்ற வையகத்தே வாழும் உயிர்களெல்லாம் இன்பத்தை விழைதலும் துன்பத்தை வெறுத்தலும் செய்கின்றன. ஒவ்வொன்றும் விரும்புமாறு இன்பமே பெருகிவிடுமாயின், அவை சிறிது காலம் இனிது கழிக்கலாம்; ஆனால் உலக இயற்கை அங்ஙனம் இல்லை. எவ்வுயிரும் இன்பத்தை மட்டும் நுகர்தல் இல்லை; இன்பமும் துன்பமும் கலந்தே வருகின்றன.

'இன்புண்டேல் துன்ப முண்டு.' ஒரு சிலர்க்கு இன்பம் பெருகியும் துன்பம் அருகியும் இருக்கும்; அவ்வாறன்றி வேறு சிலர்க்குத் துன்பம் பெருகியும் இன்பம் அருகியும் வரும்; எவ்வாற்றானும் இன்பத்தை மட்டும் துய்க்கும் உயிர் யாதும் இல்லை. எழுநிலை மாடத்து அரியணைமேல் அமரும் மன்னர் மன்னனும் இன்பத்தையே துய்த்தல் இல்லை. அங்ஙனம் ஒருவன் இன்பத்தையே துய்க்கின்றான் எனக் கொள்ளினும், எத்துணை நாள் அவன் அதனை எய்தல் கூடும். அவன் நூறாண்டு வாழ்ந்தா னெனினும் ஒரு நாள் இறத்தல் ஒருதலையே; அவன் இன்பத்துக்கு உறையு ளென மதித்து மகிழ்ந்திருந்த காதலிற் சிறந்த மனைவியும் இறப்பாள்; தனது கண்மணியினும் அருமையாகக் காத்து வந்த மைந்தனும் தன் கண்முன் இறப்பினும் இறக்கும்; அன்றியும் தன் ஐம்புலனுக்கும் ஆரா வமுதெனச் சுவை தந்த மனைவியின் எழில் நலனும் இளமைச் செல்வியும் மெல் லென மறைந்து போம்; குயிலொத்த கூந்தல் கொக்கொக்க நரைக்கும்; வேற்கண்ணள் கோற்கண்ணள் ஆவள். சாவா மருந்தாம் அமிழ்து விளை தீங்கனி பெற்ற அவ்வைப் பிராட் டியையுங் காணோம்! சிரஞ்சீவிப் பதம் பெற்ற செல்வர் மதச்சுவடும் காணோம்! காயகற்பந் தேடி உழன்றவரும் நெஞ்சு புண்ணாகி நொந்தயர்ந்தனரே! என் செய்வேம்? 'நான் இறந்தால் எங்கே செல்வேன்? பிறத்தற்கு முன் எங்கே இருந்தேன்? நான் இவ்வுடம்பைப் பெற்று இவ் வுலகில் உலாவுதற்குப் பொருள் உண்டா? பொருள் இருப் பின் அஃது என்னை? அதனை யான் எவ்வாற்றான் உணர மாட்டுவேன்?' என்றின்னோரன்ன வினாக்களைத் தனக்குள் கேட்டுத் தெளிய முயல்வதே உண்மையான சமய உணர்ச்சி. இவ்வுணர்ச்சி முறை முறையே வளர்ந்த பின் னரே ஒருவன் சமயப் பிரவேசத்துக்கு உரியவனாவான்.

அங்ஙனம் இல்லாதவன் எச்சமயத்தைச் சார்ந்தவனாயினும் எச்சமய ஒழுக்கத்தைக் கைப்பற்றினவனாயினும் அவன் சமய நெறி, வேட்கையே அறியாத சிறுவர் மணம் புரிந்து கொள்ளுதல் போன்ற ஒரு விளையாட்டுச் செய்கையை ஒக்கு மல்லது அதனானே அவன் பயனடைதல் இல்லை என்க.

இனி, மக்கள் அறிவு வரம்புடையது; அவர் ஆற்றல் வரம்புடையது; அவர் வாழ்நாள் குறுகியது; அவருக்கு வாழ்க்கையிலே நேரும் இன்னல்களும் இடையூறுகளும் பலப்பல. ஆகலான் யாதேனும் ஒரு சமயத்தைச் சார்ந்து ஒழுக விழைவது மக்கட்கு இன்றியமையாத பண்பாகவே உளது. துணையில்லார் துணையைத் தேடுதலும் வலியற்றார் வலிவைப் பெற முயல்வதும் இயல்பே. மக்கள் தம்மினும் அறிவும் ஆற்றலும் அழகும் இன்பமும் அருளும் உடைய ஒரு செம்பொருளை அவாவி அதன் வாயிலாகத் தமது குறைபாட்டை ஒழித்துக் கொள்ள எண்ணுகின்றனர்; அப்பொருளின் அருளைப் பெற்றுத் தமது துன்பத்தைத் துடைக்கக் கருதுவர்; இங்ஙனம் தோன்றும் உணர்ச்சியே கடவுளுணர்ச்சி ஆகும். அக்காலமே தெய்வம் உண்டென்பதோர் சித்தமுண்டாகும் காலமாகும். கடவுள் ஒருவர் உளர் என்னும் உறுதி ஏற்பட்டாலன்றி, மக்களுக்கு ஒரு நிலை அமைப்படாது. கடவுள் இல்லையெயன நாத்திகம் பேசுவோரும் அரிய பெரிய குணங்கள் சிலவற்றைத் தமது கொள்கைகளாகக் கொண்டு அவற்றிற்கு இசைய ஒழுக வேண்டுமென்பர். இதனால் பெறப்படுவது யாது? கடவுளென ஒரு தலைவரைக் கொள்ளுதலோ அன்றிச் சில தலைமைப் பண்புகளை தமது ஒழுகலாற்றுக்கு அமைத்துக் கொள்ளுதலோ ஆகிய இவ்விரண்டனுள் யாதேனும் ஒன்று இன்றி மக்கள் உயிர் வாழ முடியாதென்பது தெளிவாகும்.

இனிச் சமயங்களோ பல. இவை ஒன்று உரைக்குமாறு மற்றொன்று உரைத்தல் இல்லை. ஒவ்வொரு சமயத்தினரும் தம் தம் மதங்களே அமைவதாக ஆற்றி மலைவர். எல்லாருக்கும் தனித்தனி மறைகளும் மறை மொழிகளும் உண்டு; எல்லாருக்கும் கொள்கைகள் உண்டு; எல்லாச் சமயத்தும் அற்புதங்கள் நிகழ்ந்த துண்டு; எல்லாருக்கும் இறைவன் திருவருள் புரிந்த கதைகள் அளப்பில உண்டு. இவ்வாறாயின் இவற்றுள் எச்சமயம் மெய்ச்சமயம், எப்பொருள் மெய்ப்பொருள், எந்நூல் மெய்ந்நூல்? என்பன தெளிதற்பாலன. ஒரு சமயத்தார் மற்றொரு சமயத்தைப் பொய்யெனக் கண்டித்து விடுதல் அரிதன்று. எச்சமயத்தாரும் தமது சமயத்தை மெய்ச்சமயம் எனக் கருதுதற்கும் கூறுதற்கும் உரிமை யுள்ளவரே; ஆனால் அப்படிக் கூறிக் கொள்ளுவதனாலேயே ஒருசமயம் மெய்ச் சமயமாகத் திகழ்தல் கூடுமோ? ஒரு சமயம் பொய் யெனற் கூடுமேல் மற்றொரு சமயத்தை மட்டும் மெய்யெனல் எவ்வாறு? ஒன்றற்குப் பொருந்துங் காரணமே மற்றொன்றற்கும் பொருந்தும்.

பின்னை வழிதான் யாது என்றால், எல்லாச் சமயங்களும் மெய்ச் சமயங்களே. பொய் என்பதும் மெய் என்பதும் ஒன்றை ஒன்று ஒற்றித்து நோக்கும் நோக்கத்தான் கூறப்படுதலே அன்றித் தனித் தனியே யாதும் பொய்யுமன்று; மெய்யு மன்று. ஒரு சமயம் அதனைக் காட்டினும் சிறந்த அறிவும் பேராற்றலும் படைத்தவர்களுக்கே அறியப்படும் நிலையில் விளங்கும் வேறொரு சமயத்தை நோக்கப் பொய்ச் சமயம் என்று வழங்கப்படும்; அவ்வாறே ஒவ்வொரு சமயமும் ஒன்றை ஒன்று நோக்க மெய்யும் பொய்யுமாகத் திகழும். எல்லாச் சமயங்களும் இறைவன் அருளாலே அன்றி உலகில் நிலை பெறமாட்டா; அவை ஒவ்

வொன்றும் ஒவ்வொரு திறத்தினருக்கு ஒவ்வோர் காலத்தே வேண்டப்படுவனவே. ஒவ்வொரு சமயமும் படிப்படியாக மேனிலையிற் கொண்டு செலுத்தும் பான்மை உடையன வாம். இதனால் எச்சமயத்தையும் இகழ்தல் நன்றன்று. சமயத்தை இகழ்தல் தெய்வத்தை இகழ்தலே ஆதலின் 'தெய்வ மிகழேல்' எனத் தமிழ் மூதாட்டியாரும் பணித் தார். இக்கருத்தை மிக விளக்கமாக அழகு ததும்பத் திருவருட்பா ஆசிரியர்,

'பெருகியபேர் அருளுடையார் அம்பலத்தே நடிக்கும்
பெருந்தகைஎன் கணவர்திருப் பேர்புகலென் கின்றாய்
அருகர்புத்த ராதிஎன்பேன் அயனென்பேன் நாரா
யணனென்பேன் அரனென்பேன் ஆதிசிவ னென்பேன்
பருகுசதா சிவனென்பேன் சத்திசிவ மென்பேன்
பரமமென்பேன் பிரமமென்பேன் பரப்பிரம மென்பேன்
துருவுசுத்தப் பிரமமென்பேன் துரியநிறை வென்பேன்
சுத்தசிவம் என்பன்இவை சித்துவிளை யாட்டே.'

என்றும்,

'சிற்சபையில் நடிக்கின்ற நாயகனார் தமக்குச்
சேர்ந்தபுறச் சமயப்பேர் பொருந்துவதோ என்றாய்
பிற்சமயத் தார்பெயரும் அவர்பெயரே கண்டாய்
பித்தரென்றே பெயர்படைத்தாற் கெப்பெயர் ஒவ்வாதோ
அச்சமயத் தேவர்மட்டோ நின்பெயரென் பெயரும்
அவர்பெயரே எவ்வுயிரின் பெயரும்அவர் பெயரே
சிற்சபையில் என்கணவர் செய்யும்ஒரு ஞானத்
திருக்கூத்துக் கண்டளவே தெளியும்இது தோழி.'

என்றும் அருளிச் செய்த சுவைத்தொறும் இனிக்கும் செய்யுட்களால் எடுத்து விளக்கி யுள்ளது காண்க. இப் பேருண்மையினை எல்லாச் சமயமும் ஒப்புக்கொள்கின் றனவா ? இல்லை, இல்லை. ஆனால் நமது சைவ சித்தாந்

தம் இவ்வுண்மையினை முற்றும் ஏற்றுக் கொண்டு விட்டது; இதுதான் உண்மை என்றும் உலகிற்கு வெளிப்படையாக நிலையிட் டுரைத்தது.

'இயல்பென்றுந் திரியாமல் இயமம் ஆதி
எண்குணமுங் காட்டிஅன்பால் இன்பம் ஆகி
பயனருளப் பொருள்கள்பரி வாரமாகிப்
பண்புறவுஞ் சோபான பட்சங் காட்டி
மயலறுமந் திரஞ்சிட்சை சோதி டாதி
மற்றங்க நூல்வணங்க மௌன மோலி
அயர்வறச்சென் னியில்வைத் திராசாங்கத்தில்
அமர்ந்தது வைதிகசைவம்-அழகி தந்தோ.'

எனவரும் செம்புலச் செல்வராகிய தாயுமான சுவாமிகள் அருமைப் பாடலால் இஃது உள்ளங்கை நெல்லிக்கனி யென விளங்கும்.

இனி ஒவ்வொரு சமயமும் ஒவ்வொரு வகையான நிலையிலே யுள்ள மக்கட்கே அன்றி உண்மை வேட்கை கொண்ட மக்கள் ஒரே நிலையினராயினும் ஒவ்வொரு காலத்திலே அவருக்கும் இன்றியமையாத தாகும். இதனை இன்னும் சிறிது விளக்குவோம். முதல் முதல் இவ்வுலகுக்கு முதற்கடவுள் ஒருவர் உண்டா இன்றா என்னும் ஆராய்ச்சி இன்றியே ஒழுகும் ஒருவன் நாத்திகனாவன்; பின்னர் ஆராய்ந்து முடிவாக மற்றொருவன், "கடவுள் என்றொரு அறிவுப்பொருள் இல்லை; ஆனால் உலகத்திலே நாம் ஒருவருக்கும் தீமை செய்யாது நன்மை செய்து வாழ்தல் வேண்டும்; இவற்றை விட வேறொன்று மில்லை; அறத்தை அறிதலே சாலும். அவ்வறங்களின் வழி திறம்பாது ஒழுகுதலே கடைப்பிடி," என்று இங்ஙனம் கூறுவானாயின் அவன் நாத்திக சமயத்தானாவான். ஏனெனின் இவன் கட

வுள் உண்மையைக் கருத்திற் கொள்ளாவிடினும் தனக்கென அறம் ஒன்றை வைத்துக்கொண்டு அவ்வழி யொழுக உடன்பட்டு ஒரு நிலையில் நிற்கின்றான். ஆதலின் இவன் 'அறத்தான் வருவதே இன்பம்' என்பது கொண்டு அவ்வாயிலானே அவ்வின்பத்தை நுகர்வதற்கு அவா வுடையவனாய் அவ்வளவிலே நின்றுவிடுவன். வேறொருவன், "அற்றன்று ; அறமே இறைவன் ; அறத்தை அறிதலே இறைவனை உள்ளபடி உணர்தல் ; அறத்தின்வழி ஒழுகுதலே இறைவனைத் தொழுதல் ; மறமனைத்தும் சிறிது சிறிதாக நீங்கி அறத்திற்கே உடல் பொருளாவியை இன்பத்துடன் விடுதலே முடிவான பேரின்பம்," என அறத்துக்கு உயிர் கொடுத்துக் கூறி முடிப்பன்.

இனி, ஒரு சாரார், "கடவுட் பொருள் ஒன்றுண்டெனற்கும் இல்லை ; இல்லை யெனற்கு மில்லை. ஆனால் நாம் இயற்கையைக் காணுந்தோறும் நமது அறிவு அதன் அளப்பரும் பேரழகிலே ஈடுபட்டு இன்பம் துய்த்தல் யாவரும் கண்கூடாக் கண்டது. அவ்வியற்கையே இவ்வுலகைப் படைத்தும் காத்தும் அழித்தும் வரும் ; அதனோடு ஒன்றுபட்டு வாழ்தலே நாம் செயற்பாலது," எனத் துணிவர். இத்தகையார் இயற்கையிலே விளங்கி நமது புலன்களைக் கவரும் அழகு ஒன்றையே நோக்கி நோக்கி வியந்து வியந்து அதனால் வரும் இன்பத்தைப் பெற்று அவ்வளவிலேயே அமைவோ ராவர். இவர், அழகே கடவுளின் வடிவெனக் காண்பர். பிறிதொரு சாரார், நாம் எல்லாவற்றையும் அறிதற்கும் அறிந்தவற்றை அடைதற்கும் கருவியாவது அறிவே ; இவ்வறிவு மேன்மேலும் முறுகி வளருந்தோறும் அதனான் வரும் இன்பம் உடன் வளர்ந்து வருவதாதலின் முற்றறிவு பெறுதலே அமையும் ; அவ்வறிவே பரம்பொருள் என்பு.

இன்னும் ஒரு சாரார், "அங்ஙனம் அன்று; எல்லா உயிர்களும் இன்பத்தைப் பெறவே முயலுதலும் அதனைச் சிறிது பெற்றதும் ஆறுதலடைதலும் காண்கின்றோம். அதுவே எல்லா உயிர்களின் மாட்டும் ஒத்து நிகழும் உணர்ச்சி; அஃதன்றிப் பிறிதில்லை. பெற்றோர் தாம் பெற்ற அருமை மகவை அணைத்து, உச்சி மோந்து முத்தமிட்டுக்கொள்ளும் போதும் காதலர் இருவர் கருத் தொருமித்துத் தேனினும் இனிய அன்பு மொழிகளைக் கலந்து பேசுந்தோறும் கடவுள் வெளிப்படுவர். இவையிற்றால் விளையும் இன்பம் இறைவனுடன் இசைந்த இன்பமே," என்பர். இவ்வாறன்றி ஒரு திறவர், "இவை யனைத்தும் பொருள் அல்ல; எவ்வுயிருக்கும் அன்பு செலுத்தவே அமையும்; அன்பே இறைவன்; அன்புள்ள இடத்தே இறைவன் உண்டு; இன்பமும் உண்டு. இதனினுஞ் சிறந்தது யாதொன்று மில்லை," என விடுப்பர்.

இவர் கூறுவன வெல்லாம் உண்மையே. ஒவ்வொருவரும் ஒவ்வொரு பகுதியை மட்டும் விரித்து விளக்குகின்றனரே அன்றி எல்லாவற்றையும் ஒருங்கே தெரிந்து கூறும் ஆற்றல் இவர்பால் காணப்படவில்லை. இங்ஙனமே மக்கள் வழிபடும் ஒவ்வொன்றும் இவற்றுள் ஒன்றோ அல்லது இரண்டு மூன்று கலந்தோ காணப்படும். நமது நாட்டிலேயும் மேனிலைக்கட் செல்வதாய சமய வொழுக்கங்களிற் செல்லுவோரும் கன்னிகை, பூவாடை எனச் சிறு தெய்வ வழிபாடுகளையும் ஊடேயூடே செய்து போதருகின்றனர். கன்னிகையாக இறந்துபோன பெண் கட்டழகும் கட்டிளமையும் வாய்ந்தவளாக இருந்தலாலும் அவள் மணம்புரிந்து கொள்ளாமையான், அவள் உலகத்தே வெறுந் தூய்மையின் இழப்பாகக் கருதப்படும் மணவாழ்க்கை அவட்கு இன்மை

யானும் அவ்வாற்றானே உள்ளம் கவரப்பட்டு அவ்வழிபாடு புரியலாயினர். அங்ஙனமே பூமணத்துடன் கணவனுக்கு முன் இறந்த பெண் கைம்மைத் துன்பத்தை இழத்தலான் அவளது திருவை வியந்து மக்கள் கொண்டாடியதே பூவாடை வணக்கமாகும். இவ்வாறே மேலே காட்டப் பட்ட அறம், அழகு, அன்பு, இன்பம் முதலிய பண்புகள் சிலவும் பலவும் ஒருவரிடத்தே காணப்படுமாயின் அவரைப் பாராட்டி அவர் உயிருடன் இருக்கும்போதே வியந்து தொழுவதும் இறந்த பின்னரும் அவரை நினைந்து வழிபடுவ தும் மக்கள் மாட்டுக் காணப்படுவதோர் இன்றியமையா ஒழுக்கமாம். இதனையே வீரவழிபாடு என்ப. வீரர் வெறும் உடல் வலியான் மட்டும் முதல் முதல் பெரியாராகக் கருதப் பட்டுப் பின்னர்க் கல்வி, அறிவு, ஒழுக்கம், அன்பு, கொடை முதலியவற்றானும் சேர்த்துக் கருதப்படுவோ ராயினர். ஆதலால், புலவர் கல்வி வீரரென்றும், வள்ளியோர் கொடை வீரர் என்றும் இங்ஙனம் வழங்கப் பெறுவா ராயினர்.

இதுபோன்றே மக்கள் அளக்கலாகாப் பெருமையும் தோற்றமும் உடைய மலைகளையும், பரந்து ஆழ்ந்த கடலையும், முன்னர் வெளிப்படாது, கடைந்த வழித் தோன்றும் நெருப்பையும், பரிய மரங்களையும் பெரிய மாட கூடங்களை யும் ஒரு நொடியில் அழிக்கவல்ல ஆற்றல் வாய்ந்த காற்றை யும் அண்ணாந்து நோக்குந்தோறும் விரிந்து அகன்ற நீல வானத்தையும் வழிபடுவா ராயினர். இன்னும் விடியற் காலத்தையும் செக்கர் வானத்தையும் பிறைமதியையும் முழு மதியையும் செங்கதிர்ச் செல்வனையும் வழிபட்டு வருவர். உலக முழுவதும் காணக் கிடக்கும் அநாகரிக மாக்கள் முதல் நாகரிகம் முதிர்ந்த மக்கள் ஈறாகக் கொள்ளப்பட்டு வரும் வழிபாட்டு முறைகள் யாவும் இக்கூறியவற்றுள் ஏதேனும்

ஒன்றன்கண் அடங்கிவிடு மென்பதை ஆராய்ந்து தெளிக. மதக் கொள்கைகள் மாறி மாறி வருவதற் கேற்பவே அவ் வம்மதக் கடவுளருடைய இயல்புகளும் அருட் பண்புகளும் மாறி மாறி வரும்.

உண்மை இங்ஙனமாயின், எம்மதத்தை நாம் சம்மத மாகக் கொள்வது? என்பதே தேர்தற் குரியது. எல்லா மதங்களும் ஒவ்வொரு நிலைக்கு வேண்டப்படுவதேல் எல் லாச் சமய உண்மைகளையும் ஒருவன் கைப்பற்றி ஒழுகுவதா? அன்றி ஒவ்வொரு சமயத்துப் புகுந்து புகுந்து வெளியேறு வதா? என்னின் அற்றன்று; எச்சமயம் எல்லாச் சமய உண்மைகளையும் தன்னகத்தே கொண்டு மிளிருமோ அச் சமயம் ஒன்றனையே கைக்கொண்டு அவ்வாறு ஒழுகின் அதுவே பெறத் தக்க பேற்றை அளித்துவிடும் என்பது. அற்றேல் எல்லாச் சமய உண்மைகளும் ஒரு சமயத்தே காணப்படுமாயின் அச்சமயம் ஒரு தனிச் சிறப்பை அடைய மாட்டாது; ஏனெனின் அதற்குத் தனக்கென ஒன்று மின்மையின்; அங்ஙனம் உண்டெனப்படினும் பல சமயங் களோடு ஒன்றாகும் எனின், அற்றன்று; எல்லாச் சமயங் களையும் தன்னகத்தே அடக்கிக்கொள்ளும் வியாபக இலக் கணமும் எச் சமயத்தையும் இஃது ஆகும் அஃது ஆகாது என்று கூறும் பிணக்கு இன்மையும் பலவேறு சமயங்களை யும் தனக்குச் சோபன மார்க்கமென ஏற்றுக்கொள்ளுதலும் இச்சமயங்களால் அறியப்படாத நுண்பொருள்களை அறிந்து அவற்றை மேற்கொண்டிருத்தலும் ஆகிய இத்தகைய சிறப் பியல்புகளால் அஃது எச்சமயத்துக்கும் மேலாகச் சிறந்தது மாய்ப் பல சமய சமுதாயமு மின்றாய்த் தனிப் பெருஞ் சிறப்பு வாய்ந்த பேருண்மைச் சமயமாம் என்பது தெளியப் படும். இவ்வுண்மையினைத் தலைசிறந்த சைவ சித்தாந்த

சாத்திரங்களுள் ஒன்றாகிய சிவஞான சித்தியாரின்கண் வரும்,

‘ஓதுசம யங்கள் பொருள் உணரும் நூல்கள்
ஒன்றோடொன் றொவ்வாம லுளபலவும் இவற்றுள்
யாது சமயம் பொருள்நூல் யாதிங் கென்னின்
இதுவாகும் அதுவல்ல தெனும் பிணக்கதின்றி
நீதியினால் இவையெல்லாம் ஓரிடத்தே காண
நின்றதியா தொருசமயம் அதுசமயம் பொருள் நூல்
ஆதலினால் இவையெல்லாம் அருமறை ஆகமத்தே
அடங்கிவிடும் அவை இரண்டும் அரனடிக்கீழ் அடங்கும்.”

என்னும் அருமைச் செய்யுளானும் இனிதுணர்க.

இந்து சமயத்தின் சிறப்பியல்புகளென மேனாட்டு வித்தகராகிய மாக்ஸ்மூல பண்டிதர் அவர்கள் தாம் எழுதிய நூலிலே குறிப்பிட்டவை அனைத்தும் சைவ சமயத்துக்கு உரிய கொள்கைகளாக அச்சமய சாத்திரங்களிலும் தோத்திரங்களிலும் முழங்கப்பட்டிருத்தல் நோக்கற்பாலது. இந்து சமயம் எனக் கூறப்படுவதொரு சமயம் இன்றெனினும் எல்லாச் சமய உண்மைகளையும் பொதுவாகக் கொண்டு பார்ப்பின் அதனை இந்து சமயமெனக் கொள்ளலாமெனப் பிற்காலத்து ஞானியாராகிய விவேகானந்தர் முதலியோர் கூறிய இலக்கணம் எல்லாம் சைவ சமயத்திலே அடங்கி இருத்தலின் இதனையே ‘இந்து சமயம்’ எனக் கூறல் இழுக்குறாது என்க. இப்பெற்றி இதற்குண்மை அறிந்தன்றே, அருணந்தி சிவனார் இதனைச் ‘சமயம்’ என்றே மேலைத் திருப்பாசுரத்திலே அடைமொழி ஒன்றும் இன்றி அருளிச் செய்வாராயினர். இக்கருத்துப்பற்றி யன்றே தாயுமானவரும் ‘சைவ சமயமே சமயம்’ என்றும் அதனையே ‘சன்மார்க்கம்’ என்றும் ‘சமயாதீதம்’ என்

றும் 'சமரசம்' என்றும் வாயாரப் புகழ்ந்துரைத்தனர். அவருக்குப் பின் விளங்கிய இராமலிங்க சுவாமிகளும் இச் சமயத்தினையே 'சமரச சன்மார்க்கம்' எனப் பன்முறையும் பாடியும் அதன் பொருட்டு ஒரு சங்கம் நிறுவியும் பல வன்கையாகத் தமது கொள்கையை யாண்டும் பரப்பினர்

தாண்டகச் சதுரராம் திருநாவுக்கரசு சுவாமிகள், 'விரிவிலா அறிவினார்கள் வேறொரு சமயஞ் செய்தே, எரிவினாற் சொன்னாரேனும் எம்பிராற் கேற்ற தாமே' என்றருளிச் செய்ததனால் சமயங்கள் எல்லாம் குறுகிய அறிவுடன் ஒரோவொரு தன்மை பற்றி ஒவ்வோர் காலத்தே எழுந்தன என்பதும் ஒரு சிலர் மன எரிவினாற் சமயத்தைப் படைத்துக் கூறினும் அங்கும் எங்கும் உள்ள பரம்பொருளை இன்றிப் பொருள் இன்மையின் அதுவும் அவனுக்கு இசைந்ததே என்பதும் பெறப்படும். இங்ஙனமே,

'யாதொரு தெய்வங் கொண்டீர் அத்தெய்வ மாகி யாங்கே
மாதொரு பாகனார்தாம் வருவர் மற்றத் தெய்வங்கள்
வேதனைப்படும் இறக்கும் பிறக்கும் மேல்வினையுஞ் செய்யும்
ஆதலான் இவைஇலாதான் அறிந்தருள் செய்வன் அன்றே.'

எனவரும் திருப்பாடலால் மற்றச் சமயத்தார் கூறும் கடவுளர் இறப்பு பிறப்பு வீட்டங்களிலே சுழன்று இன்னல் உழக்குமென அவர் தாமே உரைத்தலின், அவை ஒன்றும் தனக்கில்லாத முழு முதல் இறைவனே வழிபடுவோருக்குத் தக்க பயன் அளிப்பனென்பது அறியப்படும் என்க.

இப்பொதுத் தன்மையினைச் சைவ சமயத்தினர் வெறும் உரையால் மட்டும் விளக்கியவ ரல்லர்; செய்கையிலும் அழியாத வகையில் வெளிப்படையாகச் செய்துகாட்டி யுள்ளார். சிவாலயம் ஒன்றிலே சென்று ஆய்ந்தோய்ந்து பார்த்தால் இவ்வுண்மை யெல்லாம் செவ்வனம் அறியப்

படும். சிவாலயத்திலே அயன், திருமால், சூரியன், சந்திரன், இந்திரன், வருணன் முதலான எல்லாத் தேவர்களுடைய உருவங்களும் நிலைநிறுத்திப் பூசனை செய்யப்பட்டு வருதல் கண்கூடாம். சிவபூசை செய்வோரும் விஷ்ணு பூஜை செய்வர். இச்சீரிய உண்மை முற்றும் வெளிப்படையாக விளங்கித் தோன்றும் திருத்தளி, சிதம்பரமாதலின் அன்றே அது தலங்களில் முதலாகத் திகழ்வதாயிற்று. இங்கே ஒரு சமயம் இல்லை; எல்லாச் சமயத்தாராலும் ஒப்புக்கொள்ளப்பட்ட ஞானசபையே காணப்படுகிறது. இதனை மறுப்பார் தமது சமயங்களையே மறுத்தவராவார். இதனைக் கண்ட துணையானே உண்மைச் சமய வாதிகள் யாவராயினும் தமது மார்க்கம் அங்கே வெளியாக இருத்தலைக் கண்டு வணங்குவர் என்றும் அப்பெருமையை நினைந்த மாத்திரத்தே தமது கன்மனமுங் கரைந்துவிட்டதெனவும் தாயுமான சுவாமிகள் பின் வரும் அழகிய பாட்டை அருளிச் செய்தனர்:

‘சன்மார்க்க ஞானமதின் பொருளும் வீறு
சமயசங்கே தப்பொருளுந் தான்ஒன் றாகப்
பன்மார்க்க நெறியினிலுங் கண்ட தில்லை
பகர்வரிய தில்லைமன்றுட் பார்த்த போதங்
கென்மார்க்கம் இருக்குதெல்லாம் வெளியே என்ன
எச்சமயத் தவர்களும் வந்திறைஞ்சா நிற்பர்
கன்மார்க்க நெஞ்சமுள எனக்குந் தானே
கண்டவுடன் ஆனந்தங் காண்ட லாகும்!’

இதுகாறுங் கூறியவாற்றான் சைவமே சமரச சமயம் என்பது தெள்ளிதிற் புலப்படும் என்க.

சைவ சித்தாந்தப் பயில் கழகம் சேலம்.

# 6. முப்பொருள்

உலகத்திலே தத்துவ ஆராய்ச்சி செய்யத் தலைப்படுவோர் எவரேனும் உலகம், உயிர் கடவுள் என்னும் முப்பொருள்களைப் பற்றியே முடிவு கட்டவேண்டும். எல்லாம் இம்மூன்றனுள் அடங்கிவிடும். இவற்றுள் அடங்காத பொருள் ஒன்று மில்லை. இதுவரை உலகத்திலே தோன்றிய தத்துவ நூல்களும் இம்மூன்றைப்பற்றியே விளம்பின. இனி வருவன தாமும் இவற்றைப் பற்றித்தான் இயம்ப வேண்டும். 'பல கலை ஆகம வேதம் யாவையினும் கருத்துப் பதி பசு பாசம் தெரித்தல்' என்றார் உமாபதி சிவனாரும். பதி - கடவுள், பசு - உயிர் - பாசம் - உலகம் என்ப. சைவசித்தாந்திகள் பதி பசு பாசம் என இவற்றை வழங்குவர். வைணவர் சித்து, அசித்து, ஈசுவரன் என்றும் ஸ்மார்த்தர் ஜகம், ஜீவன், பரம் என்றும் பரிபாஷை கொள்வர். சைவசித்தாந்தம் பதி என்னும் கடவுட் பொருளைப் போன்றே பசுவாகிய எண்ணிலாத உயிர்களும் பாசமும் நித்தியப் பொருள்கள் என்று கூறும். என்று இறைவன் உண்டோ அன்றே உயிர்களும் உண்டு என்பது சைவ சித்தாந்தக் கொள்கை. கடவுள் இயல்பை மிக நுட்பமாக எடுத்துக் காட்டிய ஸ்மார்த்தம் அப்பொருட்கு வேறாக ஒன்றுமில்லை என்று கூறிக் கடவுள் இலக்கணம் பிறழப் பின் பலவற்றைக் கூறிக் குழப்பியது. கடவுட் பொருட்குப் பிறப்பு இறப்புக்களைக் கொண்டு வந்து புகுத்தி இடர்ப்படுத்தியது வைணவம். உயிர் இலக்கணத்தைச் சைவசித்தாந்தம் சுருதி, யுக்தி, அநுபவங்கட்கு இசைய எடுத்துக் காட்டியது போல வேறெச் சமயமும் தெளித்துரைத்ததில்லை. கிறிஸ்து, இஸ்லாம் முதலான சமயங்களோ இவ்விஷயங்களுள் நுழையவே இல்லை. பௌத்தம், சமணம் என்பவை கடவுளைப்

பற்றியே கருதவில்லை. சமய அரசாய்த் துலங்குஞ் சைவ சித்தாந்த முடிபே பொது அறிவிற்கும் அனுபவத்துக்கும் அன்பு நெறிக்கும் நனி பொருந்துகின்றது.

பதி, பசு, பாசம் என்னும் முப்பொருள்களும் ஒருபடித்தாக நித்தப் பொருள்களானால், பதியாகிய கடவுட்கு யாது சிறப்பு உண்டு? என்பர் சிலர். அற்றன்று; இம்மூன்றும் அநாதிப் பொருள்களானாலும் பதி எல்லா வல்லமையும் எல்லா உரிமையும் எங்கும் நிறைந்ததுமாகிய அளவிலாப் பேராற்றல் படைத்த தனிப்பொருள் ஆதலானும், உயிர்களும் பாசமும் அவ்வாறின்மையானும் நித்தியப் பொருள் ஆதல் ஒன்று பற்றியே அவை மூன்றும் ஒப்பாதல் இல்லை என்க. கடவுள் ஆனந்தப் பொருளாக இருப்ப உயிர்கள் பாசத்தால் கட்டுப்பட்டுத் துன்ப முழக்கும் பொருள்களாக உள்ளன. உயிர்கள் கடவுளைப்போல் எங்கும் வியாபகமாக உள்ளனவும் அல்ல. அவை எவ்வுடம்பை எடுத்ததோ அவ்வுடம்பு அளவே வியாபகம் உடையன. உயிர் அறிவுடைப் பொருளேனும் அது முதல்வன் அறிவிக்க அறியுமே அன்றித் தானே ஒன்றையும் அறியமாட்டாது. ஆதலால் இவை தம்முள் வேற்றுமை பெரிது என்பது அறிக.

உயிர்கள் எண்ணிறந்தன என்று சைவம் கூறும். இவ்வுயிர்கள் யாவும் அநாதியிலேயே பாசத்தால் கட்டுப்பட்டுக் கிடக்கும். அஃது எதுபோல் எனின் செம்பிற் களிம்பு எங்ஙனம் இயற்கையிலேயே உண்டோ அதுபோல் என்க. கடவுள், படிகம் எங்ஙனம் இயற்கையிலேயே தூய்மையாக உள்ளதோ அதுபோலத் தூய்மையாக உள்ளார். ஆன்மாக்களை அநாதியிலேயே பற்றி அவைகளுடைய அறிவை மறைத்துக் கொண்டிருக்கும் பாசம், ஆணவமலம் என்று சொல்லப்

படும். ஆணவம் என்னும் பெயர் பசுக்களை அணுத்தன்மை செய்தலினால் அதற்கு வழங்கிய காரணப் பெயர். அறிவை மயக்குதலால் மலமெனப் பட்டது.

இந்த ஆணவமலம் கடவுளைப் பற்றுமோ என்றால் பற்றாது. ஏனெனில் கடவுள் தனிப் பேரொளிப் பொருள் ஆகலின், சூரியன் முன் இருள் நில்லாதவாறுபோல் அது நிற்கலாற்றாது என்க.

இனி, இம்மூன்று பொருள்களும் எவ்வாறிருக்கின்றன எனின் கடலிலே நீரும் நீரிலே உப்பும் கலந்து நிற்றல் போல இருக்கின்றன எனக் கொள்க. கடல் எனப்படுவது நீரை அடக்கிக்கொண் டிருக்கும் இடம் அல்லது ஆகாயம் ஆகும். அதுபோலக் கடவுள் வியாபகம். . அக்கடற்குள் நீர் பாவி நிற்றல் போலக் கடவுட் பொருட்குள்ளே பல கோடி உயிர்களும் அடங்கிக் கிடக்கின்றன. அந்நீரினுள் யாண்டும் நீக்கமற நிறைந்திருக்கும் உப்பைப் போல ஆணவ மலம் உயிர்கடோறும் பொதிந்து கிடக்கின்றது. உயிர்க ளெல்லாம் இறைவன் அகண்ட வியாபகத்திலே அடங்கி நிற்றலானன்றே 'படியை மடியகத் திட்டான்' 'மன்னிய வேலையுள் வான்திரைபோல, நின்னிடை எழுந்து நின் னிடை ஆகியும், பெருகியும் சுருங்கியும் பெயர்ந்துந் தோன் றியும் விரவியும் வேறாய் நின்றனை' என்னும் ஆன்றோர் திருவாக்குக்கள் எழுவன வாயின.

இனி, பொருள் ஒன்றேதான் இருத்தல் வேண்டும்; பல இருத்தல் ஆகாது என்று சிலர் கூறுவர். இவர்க்கு இந்த அறிவு யாண்டிருந்து உதித்தது என்று ஆராய்தல் வேண்டும். ஒன்றே கடவுட் பொருள் என்பது உண் மையே. ஆனால் உயிர்களும் பாசமும் ஒரே காலத்திலே

இருத்தல் ஆகாது என்பதற்குக் காரணம் யாதெனத் தமக்குத் தோன்றுமலே கூறிக்கொண் டிருப்பது ஓர் உண்மை யாகாது. கடவுள் உண்டு என்னும் உணர்ச்சிக்கும் வேறொரு பொருள் வேண்டு மன்றே. அன்றியும் உயிர்களாகிய நாம் இருக்கின்றோம். நாம் இல்லை என்று கூறுவோமாயின் இல்லை என்ற அறிவுடைய பொருள் ஒன்று உண்டு என்பது அது கொண்டே துணியப்படும் அன்றே.

இனி இயற்கையிலேயே ஆணவ மலத்தாற் கட்டுண்டு இருட்டறையிலே கண்ணிலாக் குழவிபோலக் கிடந்த உயிர்களை நோக்கி அருள் சுரந்து கடவுள் அவைகட்கு அறிவைத் தரும் பொருட்டு உலகத்தையும் உடம்பையும் படைத் தருளினன். உடம்பைப் பெற்ற உயிர்கள் அறிவு சிறிது விளங்கப்பெற்று உலகத்திலே வாழ்வனவாயின. இவ்வாறு உயிர்கள் சிறிது சிறிதாக அறிவு விளங்கப்பெற்று இறுதியில் இறைவன் திருவருளால் பாசம் நீங்கிக் கடவுளிடத்திலே இரண்டறக் கலந்து பேரின்பத்தைத் துய்க்கும்.

பாசம் நித்தப் பொருளாயின், அஃது உயிரை விட்டு ஒரு காலும் நீங்குமாறில்லையே எனின், அது நீங்காது; ஆயினும் அப்பாசம் வறுத்த விதைபோலத் தனது ஆற்றல் கெட்டுச் செயலின்றிக் கிடக்கும், ஆதலின் அதுபற்றி உயிர் பேரின்பத்தை நுகர்தற்குத் தடையில்லை எனக் கொள்க. சைவசித்தாந்தம் முத்தியினும் மும்முதலும் உண்டு என்றே வலியுறுத்தும்.

‘சுத்த அநுபோகந் துய்த்தல் அணு, இன்பங் கொடுத்தல் இறை, இத்தை விளைவித்தல் மலம்’ என்பது காண்க. இனி முத்தி நிலையை அடைந்த உயிர் முதல்வன் போலப்

படைத்தல், காத்தல் அழித்தலாய தொழில்களை இயற்றுதோ என்றால், சைவ சித்தாந்தம் முத்தி நிலையிலும் உயிர் உயிரே; சிவம் சிவமே என உரைக்கும். 'உம்பர்பிரான் உற்பத்தி யாதிகளுக் குரியன், உயிர் தானுஞ் சிவாநுபவம் ஒன்றினுக்கே உரித்தே' என்றருளினார் அருணந்தி சிவம். இன்பத்து ளாழ்ந்திக் கிடத்தலே உயிர்க்கு வேண்டப்படுவதன்றி ஐந்தொழில் இயற்றல் வேண்டுமென்பது கிடையாதென்க. உயிரும் கடவுளும் ஒன்றாய்க் கலந்தால் என்னை; அப்பொழுது இன்பஞ் சிறக்குமன்றோ எனின், அற்றன்று? உயிரும் கடவுளும் ஒன்றாய்க் கலந்து விட்டால் இன்பம் துய்ப்பது ஒன்றில்லை, ஆகலின் உயிர் ஒன்றாய்க் கலத்தல் கூடாது. அன்றேல் உயிர் கடவுளுக்கு வேறாக இருந்து இன்பந்துய்க்க எனின், வேறாயின் உயிரின்கண் உள்ள குற்றம் ஒழியுமா றில்லை; கலப்பும் இல்லை. அதனால் அது நிரதிசய இன்பமாக மாட்டாது. ஆகலின் சைவசித்தாந்தம் உயிர் பாசம் நீங்கிப் பசுத்துவம் கெட்டுச் சிவமேயாகிச் சிவத்துடன் இரண்டறக் கலந்து இன்பம் நுகரும் என யாப்புறுத் தோதும்.

இனி உயிர்கள் பளிங்கு போலச் சார்ந்ததன் வண்ணமாக இருத்தலினால் மலத்தோடு சார்ந்தவழி மலமாகவே நிற்றல் போலச் சிவத்தோடு சார்ந்த பொழுது சிவமாகவே நிற்கும் என்க.

இப்பெற்றி உயிருக் குண்மையைச் சைவசித்தாந்தம் நன்கு தெளிந்து கொண்டது. இதுவே எல்லாச் சிக்குக் களையும் அறுக்க வல்லதாக உள்ளது.

இதுகாறும் கூறியவாற்றால் சைவசித்தாந்தத்தின்படி பதி, பசு, பாசம் என்னும் முப் பொருள்களும் நித்தப்

பொருள்கள் என்பதும் அவற்றுள் பதி எல்லா வறிவும் எல்லா ஆற்றலும் வாய்ந்த தலைமைப் பொருள் என்பதும் அஃது இயற்கையிலேயே தூய்மையுடைய பேரொளிப் பிழம்பாக உள்ளது என்பதும் அதன்முன் பாசம் நில்லாது என்பதும் பசுக்கள் எண்ணிலாதன என்பதும் அவை இயற்கையிலேயே செம்பிற் களிம்புபோலப் பாசத்தாற் கட்டுண்டு மயங்கிக் கிடக்கின்றன என்பதும் அவைகளின் பாச வீக்கத்தை ஒழிக்கும் பொருட்டே கடவுள் அவைகட்கு உடம்பு முதலியவற்றைப் படைத்துக் கொடுத்து அறிவு விளங்கச் செய்து பின்னர் அவற்றின் பாசத்தைக் கெடுத்துத் தன் திருவடி யின்பத்தை அளிப்பன் என்பதும் பாசம் ஆன்மாக்கள் அறிவு முதலியவற்றை மயக்குதலினால் மலம் எனவும் பெயர் பெறும் என்பதும் அது நித்தப்பொருளாதலின் அது வலிகெட்டு முத்தி நிலையில் அடங்கு மென்பதும் அஃது இறைவனை உயிர்கள் அடைந்தால் தலை காட்டாமல் மறையும் என்பதும் ஒருவாறு பெறப்பட்டன.

'பதிபசு பாசம் எனப்பகர் மூன்றிற்
பதியினைப் போற்பசு பாசம் அநாதி
பதியினைச் சென்றணு காபசு பாசம்
பதியணு கிற்பசு பாசம் நிலாவே'

---

## சமய ஆராய்ச்சி

சமயம் என்பது தத்துவம், ஆசாரம், சடங்கு என்னும் முப்பகுதிகளைப் பெரும்பான்மையும் உடையது. தத்துவம் கடவுள், உயிர், உலகம் என்னும் முப்பொருள்களின் இயல்புகளையும் அவை ஒன்றற்கொன்று இணங்குமாறும் பிணங்குமாறும் தெளிய எடுத்துரைக்கும் சிவஞான போதம் முதலிய அறிவு நூல்களான் கூறப்படும் பகுதி. ஆசாரம் சம

யத்தார் தத்தமக்கு நன்றெனக் கொண்ட ஒழுக்கங்களின் வழுவாது நின்று ஒழுகுதல். சடங்கு சமயத்தை முன்னிட்டுக்கொண்டு ஓர் உயிர் கருத்தரிப்பது முதல் அஃது இறந்த பின்னரும் செய்யப்பட்டு வரும் பலவகைச் செயல்கள்.

இவற்றுள் முதலாவதாகிய தத்துவப் பகுதி காலந் தோறும் பெரிதும் வேற்றுமை யடைய மாட்டாது; ஆசாரமும் சடங்கும் அவற்றைக் கைக்கொள்ளும் மக்கள் அறிவு வளர்ச்சி, நாகரிகப் போக்கு முதலியவற்றிற்கு இசைந்தவாறு விரிந்தும் சுருங்கியும் திரிந்தும் வரும். தத்துவம் ஒன்றேபற்றி மக்கள் ஒழுகலாறு இன்னதென்று அறிதலாகாது. தத்துவம் மட்டும் உணர்ந்து ஏனை ஆசாரம், சடங்கு முதலியவற்றுள் ஒன்றையும் கைக்கொள்ளாதார் சமயத்தார் என்று கூறப்படார். ஏனெனில் சமயம் என்பது சடங்குகளிலும் சமயாசாரத்திலும்தான் காணப்படுவது. ஆனால், தத்துவப் பகுதி ஒன்றை மட்டும் போற்றிப் பிறவற்றைத் தள்ளுவோர் சமயத்திற்கு மேற்பட்ட ஞானநிலை அடைந்தவராகவாதல் அன்றிச் சமய ஞானத்தால் ஆகிய நன்மையினை அடையாதவராகவாதல் இருத்தல் வேண்டும். ஒருவர் எத்தகைய கொள்கையை உடையவராக இருப்பினும் அக் கொள்கைக்கு ஏற்றவாறு செய்கைகள் உடையவராக இருந்தாலன்றி அக் கொள்கையின்படி அவர் ஒழுகியவராக மாட்டார்; அதனால் அவர் எய்திய ஞானம் ஏட்டுச் சுரைபோல அவருக்கு உறுபயன் தரமாட்டாது. சமயம் ஒன்றைக் கொண்டோர் எத்தகையினரேனும் சில ஒழுக்கங்களையும் சில சடங்குகளையும் அனுட்டித்தே தீரல் வேண்டும். இன்றேல் தமது கொள்கை உறுதிப்பட்டு வளர்ந்தோங்கி விழுப்பயன் பயத்தல் எஞ்ஞான்றும் இல்லை. கடவுளை அடையும் நெறியாகிய சமயத்தால் உணரக் கடவதாகிய இசைவு

நிலை எவ்வாற்றானும் உணரலாகாது; உணரப்படாது போகவே அது நுகரப்படுதலும் இல்லை.

இக்காலத்தே பெரும்பான்மையான மக்கள் சமயாசாரங்களை நெகிழவிட்டுள்ளார். அவற்றில் அவருக்கு நம்பிக்கையும் இல்லை. சமய ஒழுக்கம் தாழ்ந்த மக்களுக்கு வேண்டப்படுவதே அன்றி உயர்ந்த தமக்கு அஃது அப்பாற்பட்டது என்பர். சமயச் சடங்குகளாகக் கருதப்படும் தீக்ஷை முதலியவற்றிலும் பலருக்கு நம்பிக்கை குறைந்துளது. மணம், சீமந்தம், உத்தரகிரியை, சிரார்த்தம் முதலியவற்றிற்கும் பலருக்குப் பொருள் தெரியாது; அவருக்குத் தெரிந்து கொள்ள விருப்பமும் இல்லை; ஆனால் பழக்கம் என்ற ஒன்றைக்கொண்டே பெரும்பாலும் சாத்திரத்திற்கும் சம்பிரதாயத்திற்கும் பொருந்தாமலே யாதோ ஒரு வகையில் செய்து முடித்து மகிழ்கின்றனர். மணச்சடங்குக்குச் சிறந்த இலக்கினம் வேண்டுமென்று எத்துணையோ முயன்று தெரிந்தெடுத்துப் பின் அந்த இலக்கினம் தவறியே மண முடித்தவர் பலப் பலர். சடங்குகளைச் செய்வோரிடத்தும் சமயாசாரங்களில் ஒழுகுவோரிடத்தும் யாவும் ஒழுங்காக நடைபெற முடியாதெனின் மற்றையோரைப் பற்றிக் கூற வேண்டுவ தில்லை.

இத்தகைய நெகிழ்ச்சியினால் மக்கள் சமய ஒழுக்க வழக்கங்களைப் பற்றி ஆராயத் தலைப்பட்டுள்ளார். ஆராய்ச்சி வேண்டாம் என்போர் அறிவைக் கொன்றவராவார். ஆராய்ச்சி எப்பொழுதும் வேண்டற்பாலதே. ஆனால் ஆராய்ச்சி செய்வோர் எதைப் பற்றி ஆராயத் தொடங்குகிறாரோ அதைப் பற்றிய விஷயங்களை நன்கு தெரிந்து கொண்டு ஒரு நிலையில் நின்று ஒழுங்காக ஆராய வேண்டும். அம்முறையை விட்டு ஒன்றோடொன்றைக் கலந்து எடுத்துக்

கொண்டு ஒன்றை விட்டு மற்றொன்றின்மேல் தாவிச்செல்லு தல் ஆராய்ச்சிக்குப் பொருந்தாது. சமய ஆராய்ச்சி செய்வோர் சமய நூல்களிலே கூறப்பட்ட விஷயங்களையே சமயம் என்ற பெயரால் எடுத்துக்கொள்ள வேண்டுமேயன்றிச் சமய நூல்களிற் கூறப்படாமல் மக்கள் வழக்கத்திலே அறியாமை காரணமாகவோ வேறு எக்காரணமாகவோ நுழைந்திருக்கும் சிறு சிறு விஷயங்களை எடுத்துச் சமயப்பேரால் கண்டிப்பது பொருந்தாது. இத்தகைய மூட நம்பிக்கைகளைத் தனியே எடுத்து ஆராய்தல் வேண்டும். மக்கள் பெரிதும் உயிரின் கண் மிக்க ஆசை வைத்துக்கொண்டிருத்தலினாலும் அது பற்றி இறப்பை நினையுந்தோறும் அச்சம் பெரிதுடையராதலினாலும் எங்நாட்டிலும் அச்சம், விருப்பம் ஆகிய இவையிற்றின் காரணமாகப் பல மூட நம்பிக்கைகள் உடையராக இருக்கின்றனர். மேனாட்டாரிடத்தும் மிகப் பெரிய மூட நம்பிக்கைகள் உள.

சமய ஆராய்ச்சி செய்வோர் சமயத்தார் ஒருவருக்கும் வருத்தம் உண்டாகாதபடி மெல்லிய சொற்களாலும் மதிப்புக் குறைவில்லாமலும் பேசுதலும் எழுதுதலும் வேண்டும். ஒருமை வாசகத்தை யாண்டும் பெய்துரைத்தலாகாது. இங்ஙனம் எழுதுதல் தமக்குச் சிறுமை யாதலோடு எடுத்துக் கொண்ட காரியத்துக்கும் இடையூறாகும். இஃது ஆராய்ச்சிக் காலம் என்று சொல்லலாம். மேனாட்டார் தமது சமய தத்துவத்தையும் ஆசாரங்களையும் சில நூற்றாண்டுகட்கு முன்னரே எத்தனையோ வகையாக மாற்றிக் கொண்டனர். அவர்கள் வேதமாகிய பைபிலும் பழைய ஏற்பாடு புதிய ஏற்பாடு என இருவேறு தன்மைகளை அடைந்தது. ஜான் ஸ்டூவர்ட் மில் (John Stuart Mill) முதலான நுண்ணறிவாளர் எவ்வளவோ அரிய பொருள்களை ஆராய்ந்து வெளி

யிட்டார். அத்தகைய காலம் நமக்கு இப்பொழுதுதான் வந்திருக்கிறது ; ஆனால் இங்கே ஆராய்ச்சி யென்று பறை யறைவோர் ஒரு நிலையிலே நின்று பொறுமையாகவும் பொருத்தமாகவும் எதையும் கூறுகின்றார் இல்லை. பல விஷயங்களைக் கதம்பமாகக் கூட்டிக் குழப்பித் தலை தடு மாற்றமாக ஏதேதோ மொழிகின்றனர். உதாரணமாக ஒரு சிலர், 'இந்து சமயம் என்பது ஒன்றில்லை ; அதனால் நாம் அதைப் பற்றிப் பேசுவ தெல்லாம் பொய்' என்பர். 'இந்து சமயம்' என்னும் சொற்றொடர் பொருந்தாதெனக் கொள்ளி னும் அதனால் சைவம், வைணவம் என்பனவும் பிறவும் பொய்யாதல் யாங்ஙனம்? வேறு சிலர், 'மனுஸ்மிருதி ஒரு குலத்துக்கு ஒருநீதி வகுப்பதால் அது சுட்டெரிக்கற் பாலது' என்பர். இன்னும் சிலர், 'பத்துப்பாட்டிலே புலா லுண்ணலைப் பற்றி வருவதால் அப் பகுதிகளை நீக்கி அதனை அச்சிட வேண்டும்' என்பர். மற்றுஞ் சிலர், 'திருமுரு காற்றுப் படையிலே மறியறுத்தல் யாரோ ஆரியர் ஒருவரால் தமிழரை இழித்துக் கூறுவதற்காக நுழைக்கப் பட்டது' என் பர். பிறிதொருவர் 'ஸ்மிருதிகளிலே ஊனுணவு சிரார்த்த மந்திரங்களிலும் காணப்படுவதால் தமிழரே பண்டுதொட்டுப் புலா லுண்ணுதார்' என்பர். ஒருவர், 'திருஞானசம்பந்தர் வேதியரானதால் சமணரைக் கழுவேற்றினர் ; அவர் எமக்கு வேண்டாம் ; நாவுக்கரையரே நமக்குத் தெய்வம்' என்பர். இக்கூற்றுக்கள் ஒரு நெறியின்றிக் குலம், ஒழுக்கம், இக்கால நாகரிகம் என்னும் எல்லாம் சேர்ந்து பலதிறப்பட்டுச் சன் னல் பின்னலாக முரணிக் கிடத்தல் அறிஞர்க்கு இனிது விளங்கும். இவ்வாராய்ச்சியாளர் தமக்குள் ஓர் ஒற்றுமை காணப்படா விட்டால் பெருமக்கள் இவற்றை எங்ஙனம் உணர்வர் ?

இக்காரணத்தால் ‘ இவ்வாராய்ச்சியாளர்கட்கு ஒன்றுந் தெரியாது ; இவர்கள் நாத்திகர்கள் ; நாமோ சைவர்கள் ; வைதிகர்கள்,’ என்று சொல்லிவிடுதல் சாலாது. அதனால் பெருக் கெடுத்து ஓடும் வெள்ளத்தை ஒருவர் இருவர் அணைகோலித் தடுத்து விடுதலும் இயலாது. ஆனால் சமயத்தார் இவையிற்றை ஓர் ஒழுங்கான முறையில் அமைக்க வேண்டுவது அவர் தமக்கு இன்றியமையாத கடமையாம். இடையிடையே புகுந்த தீய வழக்க வொழுக்கங்களையும் குற்றங் குறைகளையும் பரிகரிக்க வேண்டும். சமயாசாரம் சமயச்சடங்கு முதலியவைகளை அறிவுக்குப் பொருந்துமாறு திருத்தி அமைத்துக் கொள்ளல்வேண்டும். அது செய்யா மல் இருந்தால் சமயக் குழப்பம் விரைவிலே ஏற்பட்டு விடும்.

இனி ஆராய்ச்சி செய்வோர் சில சிறு உண்மைகளை யேனும் தெரிந்து கொள்ள வேண்டும். சமய நூல்கள் இவை இவை எனவும் இவற்றிற்கு இதுதான் இடமென்றும் அறிந்து கொள்ளல் வேண்டும். ஒரு துறையில் நின்று ஒரு முறையாக ஆராய்ந்து ஒருவர் மனமும் நோவாமல் உண்மையினை உரைத்தல் வேண்டும். சமய சம்பந்தமாகச் சிலவற்றை நாம் இங்கே கூற விரும்புகின்றோம். சமய நூல்கள் எல்லாம் ஒரே காலத்திலே தோன்றியவை அல்ல ; தோன்றிய காலத்தே அவை மக்களால் ஒப்புக் கொள்ளப் பட்டன. அவற்றுள் சில பொருள்கள் இப்போது அரு வருக்கத் தக்கன வாயும் உள்ளன. இந்நூல்கள் அவ்வக் கால இயல்புக் கேற்றவாறே எழுதப் பட்டவை என்பது உள்ளங்கை நெல்லிக் கனியாம். ஆராய்ச்சி இன்னும் குழ விப் பருவத்திலேயே இருக்கிறது. ஒரு நூலிலே ஒரு குறை கூறிவிட்டாலும் அதனோடு அந்நூலே போய் விட்ட

தாக நம்மவர் நினைக்கின்றனர். எல்லா ஆசிரியர்களும் குற்றங் குறையில்லாத தெய்வப் பிறவிகளென்றே கருதுகின்றனர்; எல்லாவற்றையும் மதத்தோடு முடிபோட்டுக் கொள்கின்றனர். சுத்தம், சுகாதாரம் முதலியவற்றைக் கூறினும் மதத்தைக் கொண்டு வந்து அச்சுறுத்துகின்றனர். பற்கொம்புக் கொள்ளுவதிலும் ஆச்சிரமபேதம் ஏற்பட்டு விடுகிறது. தமிழ்ப்பாட்டு வகையிலும் வருணபேதம் வந்து விடுகிறது. மலங்கழிப்பதற்கும் திக்கு வேண்டும்; உண்பதற்கும் திக்கு வேண்டும். இங்ஙனமெல்லாம் பலபடியாகவும் மிகுதியாகவும் எழுதி யெழுதி நூல்களிலே வைத்துவிட்டார்களேயல்லாமல் இவற்றுள் எவ்வெவை அறிவுக்குப் பொருந்தும், எவ்வெவை எம்மட்டும் செய்கைக்கு வரும் என்ற விஷயங்களைப் பலர் உணர வில்லை. இவைகளுள் நூற்றுக்கு ஒரு பங்கு மக்கள் அநுபவத்துக்கு எக்காலத்தும் வந்திருக்க இயலாது. அநுபவத்துக்கு வாராமல் எடுத்ததற்கெல்லாம் 'மதம் பறந்தது; நாத்திகம் சிறந்தது' என்ற போலியுரைகளே இப்பொழுது தோன்றியுள்ள ஆராய்ச்சி இயக்கத்துக்கு அடிப்படையாக வுள்ள காரணம்.

இது தக்கவாறு தக்கவர்களால் வரய்பு கோலி முறைப்படுத்தப்படுமாயின் இதனை நற்கால மென்றே நவிலலாம். எதிர்ந்துவரும் குறையை அஞ்சி 'நாத்திகம், நாத்திகம்' என்று பதறிக் கதறிச் சிதறி ஓடுவோர் சமயத்துக்கு நன்மை செய்தவ ராகமாட்டார். நம்மனோர் மனப்பான்மையினை ஒரு சிறு உதாரணத்தால் விளக்கி இக்கட்டுரையினை முடிப்போம். 'இராவணனுக்குப் பத்துத் தலை இல்லை' என்று ஒருவர் கூறினால் உடனே மற்றொருவர், 'அப்பொழுது கம்பராமாயணம் பொய்; தேவாரம் பொய்; வான்மீகி முனிவர் பொய்; சமயம் பொய், தெய்வம் பொய்' என்று ஆவேசம்.

கொண்டு பேசுகிறார். இராவணனுக்குப் பத்துத் தலை என்றது பொருந்தாதெனத் தோன்றியே ஒரு சிலர் அவனுக்கு ஒரே தலையென்றும் அது விசித்திரமாக அமைக்கப்பட்ட அரியணையிலே இருக்கும் கண்ணாடியினால் பத்துத் தலையாகப் பார்ப்பவருக்குத்தெரியும் என்றும் அக்காலத்தும் அவன் அறிவிற் சிறந்தவனாகையினால் அவ்வாறு அலங்காரமாகக் கூறப்பட்டான் என்றும் இக்காலத்து வேறு சிலரும் கூறுகின்றனர் என்றால், கம்பர் காளி வரப்பிரசாதம் பெற்றவராயிற்றே அவருக்கு அது தெரியாமற் போயிற்றோ ? என்றும் அப்பர் அருள்பெற்றும் அவருக்கு அது விளங்கவில்லையோ? என்றும் நமக்கு மட்டும் இத்தகைய நுண்ணறிவு வந்துவிட்டதோ,' என்றும் இகழ்ந்து நகையாடிச் செல்கின்றனர்.

இவ்வொரே உதாரணத்தைக் கொண்டு நாம் சிலவற்றை நன்கு உணரலாம். சமய நூல்கள் காலந்தோறும் தோற்றியபடியால் அக்காலத்து மக்களுடைய அறிவுப் பகுதி அறியாமைப் பகுதி என்னும் இரண்டையும் அவை உடையவையாகவே உள்ளன. அறியாமை இருப்பதனால் ஒருவர் தாழ்ந்தவரென்று நினைக்கவே கூடாது. செந்தமிழ்ப் புலமை நிறைந்த ஒருவர்க்கு வடமொழி வாராது என்றால் அஃது அவர்க்கு இழுக்காதல் கூடாது. புராணங்களில் பல உண்மைகள் சிலவற்றை எடுத்துக் கூறவந்த கட்டு நூல்கள். சில முழுப்பொய்; சில பொய்யும் மெய்யும் கலந்தவை; சில மெய் வரலாறுகள்; சில புனைந்துரைகள். இவற்றை முன்னர்த் தெளிந்து கொள்ளல் வேண்டும். எந் நாட்டாரிடத்தும் கட்டுக் கதைகளும் பொய்க் கதைகளும் உண்டு. அது போலவே நமது நாட்டிலேயும் உள. நமக்கும் அவர்கட்கும் வேற்றுமை யாதெனில் நாம் அவற்றை மதத்தோடு கலந்து வைத்துக்கொண் டிருக்கிறோம். அவர்கள்

அவை யெல்லாவற்றையும் ஒழுங்காகப் பிரித்து இவை பொய்க் கதைகள், இவை மெய் வரலாறுகள், இவை செய்யுள் நூல்கள் என வகுத்துக்கொண்டு அறிவிலும் ஆராய்ச்சியிலும் ஓங்கி வருகின்றனர். நம்மவரோ இன்னும் அங்ஙனம் பிரித்து அமைக்கவில்லை. ஆனால் இவை யனைத்தும் நம்முன்னோருக்கோ அல்லது இப்போதுள்ள பெரியோர்களுக்கோ தெரியாதெனச் சிறிதும் எண்ணலாகாது. தெரிந்தமையினாலேதான் வியாக்கியானங்கள் காலந்தோறும் வேறுபட்டன; அதனாற்றான் அந்தரார்த்தங்கள் கிளம்பின; அது பற்றியே ஸ்தூல தருமம், சூக்ஷ்ம தருமம் என்னும் பாகுபாடுகள் வந்தன; அது பற்றியே ஆத்ம புராணங்கள் எழுந்தன.

இங்ஙனமெல்லாம் குறுக்கு வழியாக எழுதுவதினும் பேசுவதினும் நேரே இவைகளின் நிலையினை வரம்பிட்டுக் கூறிவிடுதல் சாலச் சிறந்தது. வேதத்துள்ளும் விதிவாக்கியம் என்றும் துதிவாக்கியம் என்றும் உண்டு. வன்மை மென்மை கூறுபாடுகள் எல்லா நூல்களுக்கும் உள.

நாம் இவற்றையெல்லாம் என்று வரையறுத்து ஒழுங்கு செய்து கொள்வோமோ அன்றுதான் நாம் நாகரிகமுடைய மக்களாகத் திகழ்வோம். இங்கே ஒன்று கூறுதற்கு ஞாபகம் வருகிறது. இராமாயணம் முற்றும் ஆன்மா பரம்பொருளை நாடுவதையே கூறுவதென்றும் வள்ளிநாயகியார் திருமணம் சிவஜீவ சம்பந்தம் காட்டுவதென்றும் முப்புரமென்பது மும்மலகாரியம் என்றும் அணுபக்ஷம் சம்புபக்ஷம் என்றும் கற்பபேதம் என்றும் கூறப்படுவன எல்லாம், சில பொருள்கள் பொருந்தாமைக்குக் காரணங் காட்டிப் பொருத்துதற் கெழுந்த சூழ்ச்சிகளேயாம்.

மேலே காட்டிய உதாரணத்துள் இராவணனுக்குப் பத்துத்தலை என்பது வழங்கிய கதை என்று விடுத்தால் வரக்கடவதாகிய இழுக்கு என்னை? கம்பரோ அப்பரோ அதனை அவ்வாறே ஏன் பெய்துரைக்க வேண்டுமெனின் அவர் புலவர் பெருமக்களாதலின் வழக்காற்றைச் செய்யுளுள் வைத்துப் பாடுதலே யன்றி அவர் வேறென் செய்வர்? அதனால் அவருடைய புலமைக்கோ அருளுக்கோ வரும் ஏதம் என்னை? பாட்டுக்குப் பொருளாகப் பொய்ப் பொருளையும் எடுத்துக் கூறலாமோ வெனின், பாட்டின் நேர்பயன் மகிழ்ச்சி ஊட்டல் அன்றோ? இன்றேல் பாட்டைப் படிப்பார் யார்? எமக்கு நம்பிக்கை இல்லாத ஒரு கதை, சில உண்மைகளைக் கூற இடந்தருமேல் அதனை யாம் காப்பியமாகச் செய்யலாகாதோ! அதனால் நாம் அதனை நம்பினோம் என்பது எங்ஙனம் கொள்ளப்படும்? பஞ்சதந்திரக் கதை பொய் என்று யாவருக்குந் தெரியும். இருப்பினும் அதனைப் படித்து இன்புறுதார் இல்லை. கதை பொய்யாக இருப்பதனால் அதனிற் காணப்படும் உலக உண்மைகள் பொய்யாய் விடுமோ?

இங்ஙனமே புதுக்கதைகளைப் படிக்கின்றோம். ஒவ்வொருவரும் ஒவ்வொரு கதையைப் படைத்து விடுகின்றனர். அக்கதை பொய் என்பது எல்லாருக்கும் தெரியும். இருப்பினும் அந்நூலிலே வரும் பாத்திரங்களைப் புலவன் குறித்தபடி உணர்ந்து நாம் மகிழவில்லையா? அத்தகைய பாத்திரங்கள் உலக அனுபவத்திலே இருத்தல் உண்மையாக இருத்தலி னன்றே நமக்கு மகிழ்வு வருகின்றது. இம்முறையிலேயே நாம் புராணங்கள் பலவற்றை ஆராய்ந்து தெளிய வேண்டும். இத்தெளிவு நமக்கு வேண்டுமே அன்றி நூல்களையோ அல்லது சில பாகங்களையோ கொளுத்துவதும் வேண்டாம்; மாற்றுவதும் வேண்டாம். மக்களிற் பலர்

அக்காலத்திலே புலானுண்ட காரணத்தால் நூலிலே அப் பொருள் பெய்துரைக்கப்பட்டது. அதனால் நமக்கு என்ன சிறுமை ? பெருமை சிறுமை உணர்ச்சி காலத்துக் கேற்ற படி அன்றே அமையும்.

இதுகாறும் கூறியவாற்றால், ஆராய்ச்சி செய்வோர் தக்க வகையில் ஒழுங்கான முறையில் நின்று சமய ஆராய்ச்சி செய்ய வேண்டுமென்றும் நூல்களின் பெற்றியையும் அருளின் பெற்றியையும் உணரவேண்டும் என்றும் வற்புறுத்துகின்றோம்.

---

## சமய வாழ்க்கை

சமய வாழ்க்கை இன்னதென யாவருக்கும் இனிது விளங்குமாறு தெளித்தெழுதல் வேண்டுமென நமது நண்பர் சிலர் எம்மை வேண்டினர். அவர் தம் வேண்டுகோளுக் கிணங்கி இக் கட்டுரையினை ஈண்டு வரைகின்றோம். “சமயத்திலே கூறப்படும் பொருள்கள் யாவும் நனி சிறந்தன. என்பதற்கு ஐயம் சிறிது மில்லை. ஆனால் அவையிற்றை யெல்லாம் அநுபவத்திலே கொண்டு வருதற்கு எமக்கு இயலவில்லையே ; யாம் என செயக் கடவேம் ? உதாரணமாக, ஒரு பெரியவர் தமது உரையிலே ‘யாக்கை ஒழிவது ; இளமை கழிவது ; செல்வம் அழிவது ; மனைவி மக்கள் சுற்றம் எல்லாம் நிலையற்ற பொருள்கள்,’ என்றும், ‘உலகம் பொய் ; கடவுள் ஒருவரே மெய்’ என்றும் சோனமாரி போலப் பொழிந்தார். அவரைப் பற்றித் தலைவரும் ‘இவர் விரிவுரை சருக்கரைப் பந்தரிலே தேன் மாரி பொழிந்தாற் போலக் கேட்டார் செவிகளைக் குளிர்வித்தன,’ என்று முழக்கஞ் செய்தார். ஆனால் கேட்ட மக்கள்

அனைவரும் பெண்டு பிள்ளை பண்டு பதார்த்தங்களை உடைய வர்கள், இல்லறம் கைக் கொண்டொழுகுவோர்; அவர் கட்கு இப்பொருளுரையால் ஆய பயன் யாது? உடனே அன்னோர் துறவறம் அடுப்பரோ? மனைவி மக்களிடம் உள்ள பற்றை முற்றும் விடுப்பரோ?" என நுண்ணறிவுடைய நண்பர் ஒரு சிலர் கருதுகின்றனர். இவர் கூறுவது முற் றும் உண்மையே; இதனை ஒருவரும் மறுக்க இயலாது. ஆனால் இத்தகைய சொற்பொழிவுகளால் உண்டாம் பயன் ஒன்றே. அஃதாவது உலக நெறி ஒன்றே பற்றி அதன்கண் சுழன்று வருவோர்க்கு இதனினும் சிறந்ததும் என்றும் அழியாததும் மிகப் பேரின்பம் தர வல்லதுமான பொருள் வேறொன்றுண்டு என்பதைத் தொட்டுக் காட்டி உள்ளே உள்ள நல்லுணர்ச்சியைத் தட்டி எழுப்புவதேயாம். ஆனால் அதனால் உடனே வாழ்க்கையிலே கொண்டு வரப்படும் ஒழுக் கம் இத்தகையோர்க்கு இல்லை என்பதும் உண்மையே. துற வுள்ளம் உடைய ஒருவனுக்கு அது பயன்படக் கூடும் எனி னும் பெரும்பான்மையோருக்கு இத்தகைய விரிவுரைகள் விழுப்பயனைத் தரமாட்டா என்பது திண்ணம். ஓர் உபந்நி யாசத்தில் யாதாயினும் ஒரு விஷயமேனும் முடிக்கப்பட்ட பொருளாகவும் கேட்பவர் பலருக்கும் பயன்படற் பாலதாக வும் இருத்தல் வேண்டும். இன்றேல் சொல்லினவருக்கு உழைப்பும் கேட்டவர்க்குச் சலிப்புந்தான் பயனாகும்.

நம் நண்பர் விழைந்தவாறு இல்லறத்திலே ஒழுகும் பல நிலையினரும் சமய வாழ்க்கையை நடத்தலாம் என்பதையும் அவ்வாழ்க்கையினாலே உள்ளந் தூய்மை அடைந்து உணர்வு விரிந்து அன்பு பெருகி எவ்வுயிரையும் தம்முயிர்போல எண்ணி, நித்தியானந்த நிமல வாழ்வை எய்தலாம் என்பதை யும் ஒருவாறு விளக்கிக் காட்டுவாம்.

இந்நிலவுலகத்திலே மக்கள் எல்லாரும் ஒரு திறமுடையர் அல்லர். அவர் பல வேறு அறிவு வேற்றுமையும், குண பேதமும், தொழில் வேறுபாடும், சுவை மாறுபாடும் உடையர். ஒருவர் தீஞ்சுவை அமிழ்தெனச் சுவைக்கும் ஒரு பொருள் வேறொருவர்க்குக் கொல்லும் நஞ்செனவெறுப்புத் தருவதாக உள்ளது. ஒருவர்க்கு ஒரு செயல் எளிதில் முடிவதாக மற்றொருவர்க்கு அதுவே எத்துணை முயலினும் முடியாததாக உளது.

இதனால் பலருக்கும் பயன்படுமாறு பலதிறப்பட்ட நெறிகள் நூல்களிலே காணப்படுகின்றன. இந் நெறிகள் பலப்பலவாக விரிந்து கிடத்தலைத் தொண்டர் புராணத்துள்ளே காணலாம். அறுபான்மும்மை நாயன்மாருள் எத்துணை நெறிகள் காணப்படுகின்றன? இவற்றுள் யாதாயினும் ஒன்றை அவரவர்க்கு இசைந்த வகையில் மேற்கொள்ளலாம். இல்லறம், துறவறம் ஆகிய இரண்டும் வீடடைவிக்கும் நெறிகளே. இல்லறத்தாருக்கு நன்ஞானம் பெறுதற்கு எவ்வளவு தடைகள் உண்டோ அவ்வளவு தடைகள் துறவறத்தாருக்குப் பொறிகளை அடக்கி ஆளுதலில் உண்டு. இல்லறத்தான் மனைவி மக்களாகிய சுற்றத்தோடு வாழ்தலால் அத்தொடர்பு காரணமாக வரும் துன்பங்களிலே உழக்க வேண்டியவனாகின்றான். துறவறத்தான் அத்தொடர்பு நீங்கி வாழ்தலின் அதனுடைய நலங்களை இழந்து வெயிலிலும் பனியிலும் கிடந்து துன்பம் உழக்கின்றான். இருவரும் நெறிவழுவாது ஒழுகினாலன்றிப் பயனடைதலிலர். ஆதலின் இவ்விருவோரும் மனந்தூய்மை யுடையராய், எல்லா உயிர்க்கும் அன்பு பூண்டு, தம் நலம் பேணாது, மன்னுயிர் தாங்கி அருள் நெறி நிற்பரேல் இருவரும் ஒரே தன்மையராய் வீடு பேற்றை எய்துவர் என்பது யாவர்க்கும்

ஒத்த துணிபேயாம். திருத்தொண்டருள் எத்தனைபேர் இல்லறத்தின் கண்ணே நின்றோர்? ஆற்றுவார் ஆற்றல் பசியாற்றலெனப் பசியாற்றுதல் ஒன்றனையே இளையான் குடிமாறர் கொண்டார்; ஒருவர் ஓடு கொடுத்தார்; ஒருவர் துணி துவைத்துத் தந்தார் இங்ஙனமே ஒவ்வொருவரும் தத்தமக் கியைந்த ஒன்றையே கைக்கொண் டொழுகினர். வீடுபெறு அடைவதற்கு ஆண்பெண் என்ற பால் வேற்றுமையும் பிராமணன், க்ஷத்திரியன் என்ற திணை வேற்றுமையும், சிறியவன், பெரியவன் என்ற பருவ வேற்றுமையும் இல்லை என்பதை எமது பெரிய புராணம் அன்றோ தெள்ளத் தெளிய எடுத்துரைப்பது? சில நூல்கள் பெண் பாலாருக்கு வீடு பேறு இல்லை என்றும் வாய் கூசாது பேசுகின்றன.

இல்லறம் துறவறம் ஆகிய இரண்டு நெறிகளும் வீடு பயத்தற்கண் ஒரே பான்மை உடையன என்னும் பேருண்மையினை முற்றத் துறந்த பட்டினத் தடிகளார் கட்டுரையினன்றே கண்டு களிக்கூத்தாட வேண்டும்? அவர் செறிந்து நிறைந்த வாக்கின் அருமை பெருமைகளை என்னென்பேம்! அடிகளார் அணிபொதிந்த மணிமொழிகளைப் பின்வரும் அடிகளிற் காண்க:

‘மலர்தலை உலகத்துப் பலப்பல மாக்கள்
மக்களை மனைவியை ஒக்கலை ஒரீஇ,
மனையும் பிறவுந் துறந்து, நினைவரும்
காடும் மலையும் புக்குக் கோடையில
கைம்மேல் நிமிர்த்துக் காலொன்று முடக்கி
ஐவகை நெருப்பின் அழுவத்து நின்றும்,
மாரி நாளிலும் வார்பனி நாளிலும்
நீரிடை மூழ்கி நெடிது கிடந்தும்,
சடையைப் புனைந்தும், தலையைப் பறித்தும்,

உடையைத் துறந்தும், உண்ணு துழன்றும்,
காயுங் கிழங்கும் காற்றுதிர் சருகும்
வாயுவும் நீரும் வந்தன அருந்தியும்,
களரிலும் கல்லிலும் கண்படை கொண்டும்,
தளர்வுறும் யாக்கையைத் தளர்வித்து, ஆங்கவர்
அம்மை முத்தி அடைவதற் காகத்
தம்மைத் தாமே சாலவும் ஒறுப்பர்.
ஈங்கிவை செய்யாது யாங்கள் எல்லாம்
பழுதின் றுயர்ந்த எழுநிலை மாடத்தும்
செந்தாது உதிர்ந்த நந்தா வனத்தும்
தென்றல் இயங்கும் மன்றல் அகத்தும்
தண்டாச் சித்திர மண்டப மருங்கிலும்
பூவிரி தரங்க வாவிக் கரையிலும்
மயிற்பெடை ஆலக் குயிற்றிய குன்றிலும்
வேண்டுழி வேண்டுழி ஆண்டாண் டிட்ட
மருப்பின் இயன்ற வாளரி சுமந்த
விரிப்புறு கட்டில் மீமிசைப் படுத்த
ஐவகை அமளி அணைமேற் பொங்கத்
தண்மலர் கமழும் வெண்மடி விரித்துப்
பட்டினுட் பெய்த பதநுண் பஞ்சின்
நெட்டணை அருகாக் கொட்டைகள் பரப்பி
பாயல் மீது பரிபுர மியற்ற

..................................

காலன் வேலும் காம பாணமும்
ஆல காலமும் அனைத்தும் இடமைத்த
இரண்டு நாட்டமும் புரண்டுகடை மிளிர்தர
மதியென மாசறு வதனம் விளங்கப்
புதுவிரை அலங்கல் குழல்மிசைப் பொலியும்
அஞ்சொல் மடந்தையர் ஆகம் தோய்ந்தும்
சின்னம் பரப்பிய பொன்னின் கலத்தும்
அறுசுவை அடிசில் வறிதிருந் தருந்தாது

ஆடினர்க் கென்றும் பாடினர்க் கென்றும்
வாடினர்க் கென்றும் வரையாது கொடுத்தும்
பூசுவன பூசியும் புனைவன புனைந்தும்
தூசின் நல்லன தொடையிற் சேர்த்தியும்
ஐந்து புலன்களும் ஆர ஆர்ந்தும்
மைந்தரும் ஒக்கலும் மனமகிழ்ந் தோங்கி
இவ்வகை இருந்தோம் ஆயினும் அவ்வகை
மந்திர எழுத் தைந்தும் வாயிடை மறவாது
சிந்தை நின்வழி செலுத்தலின் அந்த
முத்தியும் இழந்திலம் முதல்வ அத்திறம்
நின்னது பெருமை அன்றோ என்னின்
வல்லான் ஒருவன் கைம்முயன் றெறியினும்
மாட்டா ஒருவன் வாளா எறியினும்
நிலத்தின் வழாக் கல்லே போல்
நலத்தின் வழார் நின்நாமம் நவின்றோரே.'

இதனால் எவரும் ஒவ்வோர் வகையினைக் கடைப்பிடித்துச் சமய வாழ்க்கையை நடத்தலாம் என்பது தெள்ளிதிற் புலப்படும். இனிச் சமய வாழ்வை நாடும் நண்பர் கீழே வரும் இன்றியமையாத சிலவற்றைத் தம் உள்ளத்தே பதிய வைத்துக் கொள்வாராக :

சமயம் கடவுளை அடையும் நெறி என்பதும், கடவுள் ஒருவர் உண்டு என்னும் உணர்ச்சி உறுதிப்பாடும், தாமொரு பொருள் உண்டு என்பதும், தமக்கும் கடவுட்கும் உள்ள ஆண்டான் அடிமைத் திறத்து உறைப்பும், கடவுள் எத்துணையும் பெரியர் என்பதும், தாம் எத்துணையும் சிறியர் என்பதும், கடவுளை அடைவது தூய அன்பினாலே ஆவது என்பதும், அக்கடவுளிடத்துப் பெறு மின்பமே அழிவில்லாத மெய்யின்பம் என்பதும், அவன் அருட்செல்வத்தை இம்மையிலும் பெற்று இன்புறலாம் என்பதும், போலிக்

கொள்கைகளிலும் வீண் ஆரவாரங்களிலும் பயனற்ற கட்டுப்பாடுகளிலும் தம்மை அகப்படுத்துக் கொள்ளுதலால் அறிவு விரிதலும் அன்பு பெருகலும் இல்லையென அவற்றை நீக்கி ஒழுகலு மாகிய இன்னோரன்னவற்றை ஒவ்வொருவரும் உணர்ந்து அவற்றிற்கு இசையத் தம்மிடத்தும் பிறரிடத்தும் பிற உயிர்களிடத்தும் ஒழுகுதல் யாவர்க்கும் பொருந்துவதேயாம்.

### ஓர் உபதேசம்

'ஒன்றென்றிரு தெய்வம் உண்டென்றிரு உயர்செல்வம் எல்லாம்
அன்றென்றிரு பசித்தோர் முகம்பார் நல்லறமும் நட்பும்
நன்றென் றிருநடு நீங்காமலே நமக் கிட்டபடி
என்றென் றிரு மனமே உனக்கே உபதேச மிதே.'

---

## 9. இறப்பச்சம்

இந்நிலவுலகிலே வாழும் மக்கள் அனைவரும் இறப்பு என்ற சொல்லைக் கேட்ட துணையானே அஞ்சி விதிர்விதிர்க்கின்றனர். முற்றத் துறந்த முனிவரும் இறப்பை அஞ்சிப் பாடிய பாட்டுக்கள் எண்ணிறந்தனவாகக் காணப்படுகின்றன. பழுத்த பழங்களாகவும் நரை திரையோடு கூடியவர்களாகவும் தள்ளாடித் தள்ளாடி விழுகின்றவர்களாகவு முள்ள முதியோரும் மரணபயம் உடையவராக உளர். அங்கமெலாம் குறைந்தழுகு தொழு நோயரும் உண்ணக் கூழுக்கும் உடுக்கக் கந்தைக்கும் ஏக்கற்றுக் கிடக்கும் வறியோரும் சாக்காட்டை விரும்பி ஏற்கின்றார் இல்லை. ஒரு சிலர் தற்கொலை புரிந்து கொள்ளினும் அவர் அதனை விழைந்து கொள்ளுகின்

றார் என்று கூறல் இயலாது. இதற்குக் காரணம் யாது? நாம் ஏன் மரணத்துக்குப் பயப்பட வேண்டும்?

மரணம் அடைந்தபின் நமது நிலை இன்னதெனெ நமக்குப் புலப்பட வில்லை. நாம் இப்பொழுது காதலித்து வரும் மனைவியையும் மக்களையும் சுற்றத்தாரையும் நண்பரையும் காண்பதற்கும் அவர் இனிய மொழிகளைக் கேட்பதற்கும் இயலாதவர்களாய் விடுகின்றோம். இதனால் நமக்கு இறப்பிலே அச்சம் இயற்கையாக உண்டாகிறது. இறப்பை அஞ்சியே பலர் இளம்பருவத்திலே துறவு பூண்டனர்; அதன் பொருட்டே பலர் உலக வாழ்க்கையை வெறுத்தனர். சிலர் இறப்பை எஞ்ஞான்றும் எண்ணியெண்ணித் துன்புறுகின்றனர். இறப்புத் துன்பம் ஒருவருக்கு ஒருமுறை வருவதாகவும் பலர் பலமுறை அதனை எண்ணுவதனால் பன்முறை அத்துன்பத்தை எய்துகின்றனர். சான்றோர் நம்மை என்றும் இறப்பை எண்ணவேண்டுமென ஆங்காங்கு அறிவுறுத்தியும் வருகின்றனர். உலக நெறியிலே படிந்து கிடந்து தன்னலம் பற்றியே வாழ்வோர் பெரும்பான்மையும் பட்டிமை பயின்றொழுகுதற்கும் உரியர் ஆதலின் ஆன்றோர் அடிக்கடி நமக்கு உடல் நிலையாமை முதலியவற்றை வற்புறுத்திக் காட்டுகின்றனர். ஆனால் மரண பயம் வேண்டுமா? வேண்டாமா? என்று ஆராய்ந்து பார்ப்பின் அது வேண்டற்பாலதன்றென்ற முடிவே இக்காலத்துப் பொருந்துமெனத் தோன்றும். ஏனெனில் மரணபயம் உடைய ஒருவன் எவற்றையும் செவ்வனம் செய்ய மாட்டுவான் அல்லன். அவனுக்குக் கற்றற்கும் கேட்டற்கும் மனவெழுச்சி உண்டாதல் இல்லை. அவன் எப்பொழுதும் ஏங்கி நிற்கின்றான். அவனுக்கு நாளடைவில் உடனுக்குடன் தோன்றும் அச்ச உணர்ச்சியினால் நெஞ்சுரம் அழிந்துவிடும். அப்பால் தொட்

டவற்றிற்கெல்லாம் திகிலடைந்து உயிர் துறப்பான்; அவன் வாழ்க்கை அளிக்கத் தக்கதாக உளது. எத்துணையோ பலர் தம் மகவுக்குச் சிறிது நோய்வரின் தட்டுக் கெட்டுத் தடு மாறித் தமது நிலை குலையப் பெறுகின்றனர்; தமக்கு நோய் சிறிது அணுகப் பெறின் அஃது உடனே முதிர்ந்து தமது உயிருக்கு உலைவைத்துவிடுமெனக் கருதி ஆகாயக் கோட்டை கட்டி அறி விழக்கின்றனர். அந்தோ! வாழ்க்கை இத் தகைய அச்சத்தால் எவ்வளவு பெருந் துன்பத்திற்குக் காரணமாக உளது. இந்நிலையில் நகரத்திலே வாழ்வோர் தன்மை பெரிதும் இரங்கற் பாலது. 'கண்டது பாம்பு கடித் தது மாங்கொட்டை' என்றும் 'காட்டிற் புலியால் இறந் தவர் சிலர்; வீட்டிற் கிலியால் இறந்தவர் பலர்' என்றும் போந்த கட்டுரைகளால் அச்சத்தால் விளையும் அருங் கேடு கள் இனிது விளங்கும்.

அச்சமே மக்கட்கு உள்ள எல்லாப் பகைகளினும் பெரி யது; அச்சம் காரணமாகவே பெரும்பாலும் பைத்தியம் பிடிக்கிறது. அச்சம் உடையவர்களே தமது காரியங்களைச் சிக்கறச் செய்யும் ஆற்றல் இல்லாதவராகக் காணப்படுகின் றனர். அச்சம் பற்றியே தற்கொலை செய்து ஆவி துறக் கின்றனர். அச்சம் உள்ளவரே எல்லாவற்றிற்கும் தாழ்ந்த நிலையை அடைவர். எல்லாத் துணிவிற்கும் அடிப்படையாக உள்ளது இறக்கத் துணிதலே யாகும். இறப்பை அஞ்சாத ஒருவனை உலகம் அஞ்சும். அவனே எல்லாரினும் மேம்பட் டவ னவான். உடம்பின் மேலிருக்கும் பற்றை விட்டு நன் னெறிக் கண்ணே நாடோறும் செல்கின்ற பெரியோனைக் காட்டினும் சிறந்த செல்வன் யார்? அவனைப் பணியாத உயிரும் உண்டோ? அவன் அஞ்சத் தக்க பொருளும் உளதோ? அவன் அஞ்ச வருவதும் ஒன்றுமில்லை. அவனே

நமனை அஞ்சாதவன்; அவனே பேரின்பப் பெருவாழ்விலே திளைப்பவன்.

ஒருவர் உலக நிலையாமையை எண்ணி மனைவி மக்களை விட்டுக் காட்டிலே சென்று குகையிலே ஒதுங்கி வாழ்ந்தார். அங்கே அவருக்குப் புலி புறப்படுமோ? அரிமா வருமோ? பாம்பு கடிக்குமோ? பேய் பிடிக்குமோ? என்னும் அச்ச உணர்வுகள் பிறந்தன. பின்னர் அவரிடம் பலர் வருதற்குத் தொடங்கினர். வருபவரிடம் வாதிப்பதும் தமது கொள்கையைச் சாதிப்பதும் அவருக்கு வேலைகளாக முடிந்தன. அப்பால் இஃது ஒரு குடும்பமேயாம் என உற்றுணர்ந்து அக்குகையை விட்டு ஓடினார். அங்ஙனம் ஓடியவரைக் குறுக்கிட்டான் ஒரு தறுகண் மிக்க கொலைஞன். அவன் துறவி; யாவரையும் துரும்பெனக் கருதுபவன்; கொலையே விளையாட்டாக உடையவன்; கள்ளிலே களியாட் டயர்பவன்; காமமே பொருளெனக் கொண்டவன். அவன் இத்துறவியைக் கண்டதும் எதிரே நின்று வாளோச்சினான். துறவி நடு நடுங்கி அஞ்சி அவன் அடியிலே விழுந்து உயிர்ப் பிச்சைக் கேட்டு ஓடி ஒளிந்தார். பின்னர்த் தனியே இருந்தும் துறவியின் மனத்திலே கொலைஞன் வாளோச்சி வருதல் அடிக்கடி தோன்றலாயிற்று. அதனால் அவருக்கு அச்சமும் அவலமும் உண்டாகி அவரைத் துன்புறுத்தலாயின. இத்துன்பம் அவர் உயிரைச் சிறிது சிறிதாக அரித்துத் தின்னத் துவங்கியது. இங்ஙனம் இருப்புழி ஒருநாள் துறவி பின் வருமாறு சிந்திக்கலானார்: "என்னே! என்னே! ஒருநாள் கண்ட கொலைஞன் காட்சி உடனுக்குடன் என் நெஞ்சிலே தோன்றி என் அறிவையும் ஆற்றலையும் அழித்து என் உயிரைக் கொள்ளை கொள்கின்றது? நான் நினையாத முன்னும் என் எண்ணம் இடைவிட்ட

பொழுதெல்லாம் இடையிட்டுத் தடை செய்கின்றது. எல்லாரும் ஒரு நாள் இறப்பர்; நானோ ஒவ்வொரு நாளும் இறந்து வருகின்றேன். இல்லைத் துறந்து வந்த நான் பொருளை வெறுத்தேன்; பொங்கெழில் வாய்ந்த நங்கையை வெறுத்தேன்; பான்மண மருக் கான் முளையைவிட்டேன்; குடியிருந்த வீட்டுக்குக் கொள்ளி வைக்கக் கருதிய பட்டினத்தாரினும் மேன்மையுடையவன் போல வருந்திப்பெற்ற அருந்தவத் தாயையும் சிந்தை நொந்த தந்தையையும் விட்டு நீங்கினேன்; அறவுபதேசம் கேட்க வந்த நண்பரையும் அகல நீங்கினேன். இத்துணையும் துறந்த யான் வெறும் மயக்கத்தினால் கண் முன்னே வாராத ஒருவனை வந்தவனாகவும் புலி பாம்பு முதலியன போந்தனவாகவும் நினைந்து அந்தோ! அல்லலுழக்கின்றேன். இஃது எற்றினாலாயிற்று? இக்கேட்டிற்கெல்லாம் காரணம் நான் எல்லாம் துறந்தும் ஒன்று துறந்திலேன். அஃதாவது உடற்பற்றே ஆகும்; அதனை இன்றே துறப்பேன்; நான் இன்றே இறப்பினும் நன்றே; அது பற்றி இனிச் சிறிதும் அஞ்சேன்; பாம்பு கடிக்கினும் கடிக்க; புலி பாயினும் பாய்க; கொலைஞன் கொல்லினும் கொல்லுக," என்ற உறுதி பிறக்கப் பெற்றவராய் இருந்தார். அன்று முதல் அவர் நெஞ்சம் அச்சம் இன்றி இன்ப நிலையிலே நின்றது. இன்பவெள்ளம் அவர் உள்ளத்திலே ஊற்றெடுத்து ஓடியது. அவர் அவ்வுண்மையினை அனைவருக்கும் எடுத்துரைக்கப் போவாக் கொண்டனர். அப்போது ஒருநாள் வனத்திலே யாதொரு குறிகோளுமின்றித் திரிந்து வருகையில் அவருக்குத் தாம் முன்னே பார்த்த கொலையாளி ஞாபகம் திடுமென வந்து விட்டது. வந்ததும் அவர், "நல்லது; அக்கொலைஞன் இன்று என் முன் வரின் அவனுக்கு அவன் அடாத செயல்களைப்பற்றிக் கழறுவேன்; அறத்தைப் புகட்டுவேன். ஐயோ! அவன் வீணை கெட்

டழிகின்றான்; அவன் வாளோச்சலையும் மருட்டலையும் அணுவளவும் அஞ்சேன்! அஞ்சேன்!" என்று தமக்குள் முணுமுணுத்துக் கொண்டு எறிட்டுப் பார்த்தார். உடனே தம் எதிரே ஒரு வீரன் வாட்படையுடன் பரிமா இவர்ந்து விரைந்து வருதலைக் கண்டார். அவன் அவர் முன்னர்த் தோன்றிப் புன்முறுவல் செய்தான். துறவி துணுக்குறாது எதிர் நின்று அவனை நோக்கிக் கையமர்த்தி, "வீரனே, நீ நின்றோ?" என்று பெருமிதமாகக் கூறி இளநகை அரும்பினார். வீரன் அவரை நோக்கி, "ஐயா என்னைக் கண்டதும் அரிமாவைக் கண்ட நரிமாவைப் போல நடுங்கும் நீர் இன்று இத்துணைத் துணிவுடன் எதிர்த்து நிற்பதன் காரணம் என்னை?" என்றான். அதற்குத் துறவி, "அப்பா, இனி நான் யாருக்கும் அஞ்சேன், உலகத்துக்கு அப்போது அடிமையாக இருந்தேன்; இப்போது உலகம் எனக்கு அடிமையாகி விட்டது. உனக்கு உன் தீய செயல்களைப் பற்றி எடுத்துச் சொல்லிக் கண்டித்து நல்லறிவுச் சுடர் கொளுத்த எண்ணினேன். நீயும் நல்ல வேளையாக எதிர்ப்பட்டாய்; இனி இத்தீமைகளைச் செய்யாமல் எல்லா உயிர்களிடத்தும் அருள் உடையவனாய் இனிது வாழ்வாயாக," என்றார். வீரனுக்குக் கோபம் பொங்கி எழுந்தது; புலி போலச் சீறினான்; அவன் விழிகள் தீயை உமிழ்ந்தன; மீசை துடித்தது; "யாது சொன்னாய்? நேற்றுக் கோழை போல அபயம் பெற்றுச் சென்ற நீ இன்று வீரனாகிய நம் முன் அஞ்சாது போந்து அறம் உரைக்கின்றனையோ? இதோ ஓரே வீச்சில் உன்னை எமனுலகுக்குக் குடியேற்றுகின்றேன்," என்று கூறித் தனது வாளை ஓச்சினான். துறவியும் இம்மியும் துணுக்குறாமல் அவன் வெட்டை எதிர்த்து நின்றார். அவனுக்கு ஒன்றும் தோன்றவில்லை. வாளை உறையிலே இட்டான்; வாளாது குதிரையைச் செலுத்திக்

கொண்டு விரைந்து பறந்தான். துறவி உண்மையைக் கண்டார். என் உயிருக்கு அஞ்சிய பொழுதெல்லாம் நான் ஓடினேன்; அதற்கு அஞ்சாத பொழுது கொலைஞனும் ஓடினன். இனி என்னினும் உயர்ந்தார் யார்?'' என்று கருதிச் செம்மாந்து சென்றனர்.

இக்கதையினால் மரண பயத்தினின்றும் விடுபடுவதனால் விளையும் நலங்கள் இவை என நமக்குப் புலப்பட வில்லையா? ஆகவே ஒவ்வொருவரும் இறப்பச்சத்தை அறவே விட முயலல் வேண்டும். தன் உடம்பிலே உள்ள பற்றை விட்ட ஒருவனுக்கு மனைவி மக்கள், பொருள் முதலியவற்றிலே பற்று ஒழிதல் சாலவும் எளிது. ஆனால் இஃது அருளாலன்றி வாய்க்காது என்றும் அவ்வருள் எளிதிலே வாராதென்றும் கூறிச் சிலர் நெகிழ்கின்றனர். அருள் எப்பொழுது கிடைக்கும்? நாம் மேலே கூறிய மனப்பான்மையினை அடைந்த பின்னரே யாம். அப்பொழுது எல்லாம் தாமே வந்தடையும்.

இதனால் உலக வாழ்க்கையிலே வெறுப்புற்றுக் கிடக்க வேண்டும் என்றுதல், மனைவி மக்களிடம் கொஞ்சிக் குலாவுதல் கூடாது என்றுதல், பொருளை யீட்ட லாகாது என்றுதல் நாம் கூற வில்லை. உலகத்திலே நன்கு வாழலாம்; மனைவியைப் பாராட்டலாம்; மக்களைச் சீராட்டலாம்; நண்பரைக் கூட்டலாம்; பொருளை நல்வழியிலே ஈட்டலாம். ஆனால் எத்தொழிலைச் செய்தாலும் தனக்கென்றே வரைந்துகொள்ளாமலும் பிறர் நலத்தைக் கெடுக்காமலும் தன் கடமையினைச் செய்துகொண்டு பிறவற்றை யெல்லாம் கடவுள் திருவருள் என இருத்தலே செய்யத் தக்கதாம். உதாரணமாக, குழந்தைக்கு நோய் வந்ததெனக் கொள்ளுவோம். அதற்குச் சிறிதும் மனந்தளராமல் தக்க மருத்துவரைக் கொண்டு

பரிகாரம் செய்யலாம்; அக் குழவிக்கு யாது வருமோ என அஞ்ச வேண்டுவது இல்லை. கடமையை முற்றும் கருத்துடன் செய்து பிறவற்றைப் பற்றி நாம் எண்ணுமல் இருத்தல் வேண்டும். இங்ஙனமே எல்லாவற்றிலும் உள்ளத்தைத் திருத்திக்கொள்ள நாடோறும் பாடுபடல் வேண்டும். தீய எண்ணங்களைத் தியானத்தினால் ஒழித்து நல்லெண்ணங்கள் ஓங்கி வளரும்படி செய்தல் வேண்டும். மெல்லிய இனிய சொற்களைப் பேசப் பழக வேண்டும்; இறப்பை அஞ்சாதவனும் தீவினை செய்தலை அஞ்ச வேண்டும். தனக்காகச் செலவு செய்தலைக் குறைத்துக்கொண்டு பிறருக்கு நன்மை செய்ய முன்வர வேண்டும். பிறருக்கு நன்மை செய்பவன் நல்லவனே யன்றித் தன்னளவில் அமைந்து யாருக்கும் தீமை செய்யாதவன் நல்லவனாக அறிஞரான் எண்ணப்படான். உணவு, துயில், இணைவிழைவு முதலான எவற்றினும் பத்தியத்தைக் கைக்கொள்ள வேண்டும். துயிலுக்கும் இணைவிழைச்சுக்கும் உண்டியே காரணமாக இருத்தலின் அதனையே முதற்கண் ஒழுங்குற அமைத்துக் கொள்ளல் வேண்டும்.

---

## 10. உலகம் தேடுவது யாது

உலகம் தேடுவது யாது என்னும் வினாவிற்கு விடையிறுப்பது சாலவும் எளிது. உயிர்களெல்லாம் எவ்விடத்தும் எக்காலத்தும் இன்பத்தையே நாடி நிற்கின்றன. கண் வியக்கத் தக்க காட்சி எங்கே யென்றும், காது நயக்கத் தக்க ஓசை எங்கே யென்றும், நா, சுவைக்கத் தக்க உணவு எங்கே யென்றும், உடம்பு மகிழத் தக்க சேக்கை எங்கே யென்றும், மூக்கு மோக்கத் தக்க நறுமணம் எங்கே யென்றும் இவ்வைம்புல நுகர்ச்சியும் ஒருங்கே பொருந்தியுள்ள

இடம் எங்கே யென்றும் ஒவ்வொரு கணத்தும் உயிர்கள் தேடி யலேவதைக் காண்கின்றோம். இன்பம் இன்பம் என விரும்புகின்றனரே யன்றி மக்கள் நிலைத்த இன்பம் யாண்டுள தென்றும், அதனைப் பெறுகின்ற வழி யாதென்றும் அறியாது தத்தளிக்கின்றனர். உலகம் தோன்றிய நாள் தொட்டு இன்று வரை இவ் வினவை எழுப்பாத மக்கள் எந் நாட்டினு மில்லை. ஒரு சிலர் உலகம் துன்பத்துக்கே நிலைக் களமென்றும், அதனால் இன்பத்தை யெய்துதல் என்றும் இயலாதென்றும் முடிவு கட்டினர். வேறு சிலர் உலகத்தில் எய்துவது சிறிது பொழுது நிகழும் இன்ப மாதலின் சிற்றின்பமென்றும், அவ்வின்பத்தை விழைவோர் அதனான் வரும் துன்பத்தையும் நுகர்ந்தே தீரவேண்டு மென்றும், இக்காரணம் பற்றி இன்ப துன்ப மிரண்டும் அற்று நிற்றலே அடுத்த செயலாகு மென்றுந் துணிந்தனர். மற்றுஞ் சிலர் உலக வின்பம் சிற்றின்ப மாதலின் அதனை வெறுத்துச் செம்பொருளாகிய கடவுளின் திருவடி யின்பம் பேரின்ப மாதலின் அதனையே அவாவி இருத்தல் வேண்டு மென்றும், அது காரணமாகச் சிற்றின்பத்துக்கு அடிப்படையாகிய மனைவி, மக்கள், சுற்றம், பொருள் ஆகிய எல்லாவற்றையும் துறந்து தவங் கிடத்தல் வேண்டு மென்றும் எண்ணினர். இன்னுஞ் சிலர் பற்றற்ற ஒருவன், வீட்டிலே நின்று அறங் காத்தாலும் காட்டிலே சென்று தவம் நோற்றாலும் ஒன்றே யென்றும், அதனால் பற்றறுதலே செயற்பாலதென்றும் கருதினர். பின்னுஞ் சிலர் இளமையிலேயே உலகத்தைத் துறந்து தவஞ் செய்தும் விரதங் காத்தும் மனமாசு தீர்ந்து மெய்யுணர்வடைந்து அவா நீக்கி அந்நிலையே வீடுபேற்றை யடைய வேண்டு மென்று வற்புறுத்தினர். இன்னோ ரெல்லாம் உலகத்திலே பெரும்பான்மையான மக்கள் ஒழுகத் தக்க சிறந்த முறையை எடுத்துக் காட்டினாரெனக் கூறுதற்

கில்லை. இத்தகைய அரிய பெரிய ஒழுக்கங்கள் 'தவமுந் தவமுடையார்க் காகும்' என்னும் அமுத மொழிக் கிணங்க யாரோ ஒரு சிலரால் மட்டும் ஒழுகற்பாலனவாம். இவற்றையே மீண்டும் மீண்டும் நாம் கற்றுங் கேட்டும் வருதலால் விழுப்பயன் யாது மில்லை. பட்டினத்தடிகள் துறந்தாரென்றால் அவரைப் போல எத்தனை பேர் துறக்க முடியும்? அதனா னன்றோ

'பாரனைத்தும் பொய்யெனவே பட்டினத்துப் பிள்ளையைப் போல்
ஆரும் துறக்கை அரிதரிது'

என்றார் தாயுமானவரும்.

புத்தர் அரச போகத்தைத் துறந்தாரென்றால் எத்தனை பேர் அவரைப்போல் போகத்தைத் துறக்க வல்லவ ராவர்? இளங்கோவடிகள் எத்தனைபே ருளர்? ஜனகராஜனைப் போலும் தெய்வப் புலமைத் திருவள்ளுவ நாயனாரைப் போலும் இளையான் குடிமாறர், இயற்பகையார், திருநீலகண்டர், சிறுத்தொண்டர் முதலான அருட்பெருஞ் செல்வர்களைப் போலும் அகப்புறப் பற்றுக்க ளொழிந்து மனையறத்தைக் கடைப்பிடித் தொழுகு மாற்றல் எத்துணையார்க்குள்ளது? பேரின்பத்தையே நாடிக்கொண்டு சிற்றின்பத்தை வெறுத்து மனைவாழ்க்கை செலுத்துவதும் யாவர்க்கு மியல்வ தன்று.

இன்னோரன்ன காரணங்களால் மக்கள் இம்மையிலேயே தூய இன்பத்தைப் பெறவேண்டிய நல்வழிகளைக் கண்டறிந்து அவ்வாறு ஒழுகவேண்டுவது இன்றியமையாத தாகும். பொருளில்லை யானால் உலகத்தில் அறத்தை வளர்த்தற்கும் இயலாது. அன்பை வளர்த்தற்கும் இயலாது. அருளென்னுங் குழவியும் மெலிந்து சோரும். அருளுக்கே பொருள் வேண்டுமானால் அறத்துக்கும் இன்பத்துக்

கும் பொருள் வேண்டு மென்பது சொல்ல வேண்டுவதில்லை. இக் கருத்தை நமது பொய்யில் புலவர்,

‘ அருளென்னு மன்பீன் குழவி பொருளென்னுஞ்
செல்வச் செவிலியா லுண்டு ’

என்னும் அழகு ததும்பும் இனிய திருக்குறளால் எடுத்து விளக்கினர். ஈண்டு அருளைக் குழவியாகவும் அன்பை நற்றா யாகவும், பொருளைச் செவிலித்தாயாகவும் உருவகப்படுத்திக் கூறி யிருப்பதும், ‘ உண்டு ’ என்னும் வினை கொடுத்து முடித்திருப்பதும் நோக்குந்தோறும் நோக்குந்தோறும் பொருட்பேறுற்றுப் பல நுட்ப திட்பங்களைத் தெரித்துப் பொருளின் ஆற்றலை இனிது புலப்படுத்தல் காண்க. இதனுனே இம்மைக்குப் பொருள் எத்துணை வேண்டற்பாலதோ அத்துணை அது மறுமைக்கும் வேண்டற்பால தென்பது போதரும்.

இம்மையிலே நாம் வாழ்கின்ற வாழ்வைக் கொண்டே மறுமையில் நமது வாழ்வு இவ்வா றாகுமெனக் கடிதில் ஊகித்து விடலாம். இம்மையில் வறிஞனுக உள்ள ஒருவன் மறுமையில் எங்ஙனஞ் சிறந்த நிலையை அடைந்து விடுவான்? வறுமையிற் செம்மை யுடையராய் உள்ளம் நிரம்பிய உத்தமரைப் பற்றி யாம் இங்கொன்றும் கூற வில்லை. இங்குக் கூறுவன யாவும் பெரும்பான்மையான மக்கட் கூட்டத்துக்கே ஒத்தவையாம். இக் காரணங்களால் பொருளை ஒருவன் எவ்வாற்ருனும் ஈட்ட வேண்டு மென்பது முடிக்கப்பட்டது.

நன்று, பொருளை ஈட்டுதலினுலே ஒவ்வொருவரும் இன்பம் பெறலாமோ? ஒருவன் கோடிக்கணக்காக அல்வழி யிலே பொருளை ஈட்டுகின்றுன். அவன் இன்பம் துய்ப்பனே? பொய்க்கரி யுரைத்தும், புறஞ்சொற் கூறியும், ஏழை

எளியார்களை வருத்தியும், நம்பினோரை வஞ்சித்தும், ஈட்டும் பொருள் தன்னை யுடையானுக்கு எஞ்ஞான்றும் இன்பம் பயத்தல் இன்று. ஆனால் அவன் நமது தூல நேத்திரத்துக்குப் பேரின்ப முடையவன்போலத் தோன்றுவான். பளபளப்பான பட்டாடை யுடுத்தும், மின்னென மிளிர்கின்ற வயிரப் பணி பூண்டும், அழகிய அரண்மனையில் உறைந்தும், தந்தச் சிவிகையில் ஊர்ந்துஞ் செல்வானாயினும் அவன் உள்ளத்தைத் தேடிப் பார்த்தால் அங்கே ஒரு சிறு குடிலிலே உறைந்து கூழுக்கும் ஏக்கற் றிருக்கும் ஏழை ஒருவனுக்கு உள்ள இன்பத்தையுங் காண முடியாது. அவன் இன்பம் அனைத்தும் உள்ளீ டில்லாத போலி யின்பமே யாகும். பகட்டும் ஆரவாரமும் மலிந்து கிடக்குமே யன்றி அவனிடம் உண்மை யின்பம் மெலிந்து நடக்கும் என்க. ஏனெனில் அவனுள்ளம் எப்பொழுதும் ஓய்வின்றிச் சலித்துக் கொண்டும், ஊடே ஊடே தான் செய்த வஞ்சகச் செயல்களை நினைத்துக்கொண்டும் இடர்ப்பட்டுக் கிடக்கும். அவன் எத்துணை முயன்று அவற்றை அடக்கினும் அவை ஓரோ ஒரு காலத்துத் தோன்றித் துன்புறுத்தாது ஒழியா.

இனி, மற்றொருவன் நல்வழியிலேயே பொருள் தொகுத்து அரசனைப்போல வரிசையுடன் வாழ்கின்றானென்று வைத்துக் கொள்வோம். அவனுதல் சிறந்த இன்பத்தைத் துய்ப்பானோ எனின், அவனுந் துய்க்க மாட்டுவன் அல்லன். ஆனால் மேலே கூறப்பட்டவனைப்போல இவன் துன்பத்தை மட்டும் எய்த மாட்டான். அவனுக்கும் இவனுக்கும் உள்ள வேற்றுமை இதுவே. இன்பம், தன்னை வேண்டி நாடிச் செல்பவன் கைக்கு அகப்படாமல் ஓடிச் செல்கின்றது. அவனுக்கு உண்மையான இன்பம் சிக்கு

வதே யில்லை. அவன், பேய்த்தேரை நீரெனக் கருதிய ஒரு வன் அக்கணத்தே அதனை யெய்தி யுண்டதாகக் கருதி மகிழ்ந்தாற் போல இன்புறுவானே யன்றி உண்மை நீரைக் கண்டு வேட்கை தீர உண்டு களிகொண்டவனாக மாட்டான். இதனை யன்றோ முற்றத் துறந்த பட்டினத்தடிகளார் 'இன்பப் பேய்த்தே ரெட்டா தோட' என்றருளிச் செய்தனர்.

இங்ஙனமாயின் நிலைத்த இன்பத்தை ஒருவன் எங்ஙனம் எய்துதல் கூடும்? அத்தகைய இன்பம் முன்னே யுரைத்த வண்ணம் சிற்றின்பந்தானோ? அதனைத் துன்பமின்றி இம்மையிலே எய்துதல் கூடுமோ? என்னும் வினாக்கள் எழுகின்றன. இவற்றை விடுக்குமுகத்தான் சிலவற்றைக் கூறி இக் கட்டுரையை முடிப்பாம்.

நிலைபேறான இன்பத்தை ஒருவன் விழைவானாயின் அவன் அதனை நேரே அடைய முடியாது. அவன் தன்னலத்தைச் சிறிது சிறிதாக இழந்து பொது நலத்தைக் கைக்கொள்ள வேண்டும். பிறர் துன்பங் கண்டுழித் தனக்கு அத்துன்பம் வந்ததாகக் கருதி அதனைத் துடைக்க முயலல் வேண்டும். ஒரு பக்கத்திற் பொருளை ஈட்டிக்கொண்டு மற்றொரு பக்கத்தில் அதைத் தக்க வழிகளிற் செலவழித்துக் கொண்டு வருதல் வேண்டும். எங்ஙனம் வான் முகில் கடல் நீரை ஒரு பக்கத்தில் முகந்து மற்றொரு பக்கத்தில் கைம்மாறு கருதாமல் தனக்கென வரையாமலும் மன்பதைகளுய்யப் பொழிந்து வருகின்றதோ அது போலவே உலக இன்பத்தை அவாவும் பேரறிவாளன் இருத்தல் வேண்டும். இங்ஙனம் யாவர்க்கும் பயன்பட வாழ்பவன் தான் பெற்ற சிற்றின்பத்தைப் பேரின்ப மாக்கிக் கொள்கிறான். அவன் நிலையாத இன்பத்தை நிலைத்த இன்பமாக மாற்றிக் கொள்கிறான். அவன் துன்பந் தோய்ந்த புரைபட்ட இன்

பத்தை அன்பு பாய்ந்த நிறைவுற்ற இன்பமாகத் திருப்பிக் கொள்கிறான். அவ்வின்பத்தை அவன் இம்மையிலே அடைந்து திளைக்கிறான். அதனால் அவன் மறுமையைப் பற்றி நினைப்பதும் இல்லை; இறப்பைப் பற்றி அஞ்சுவதும் இல்லை. 'எங்கெழிலென் ஞாயிறு எமக்கேலோ ரெம்பா வாய்' என்றும், 'வடகோடு சாய்ந்தென்ன தென்கோ டுயர்ந்தென்ன வான்பிறைக்கே' என்றும் அருளிச் செய்த ஆன்றோர் பெருவாக்குக்களுக் கிணங்க இறப்பையும் பிறப் பையும் எண்ணாது பல்லுயி ரனைத்தையுந் தன் மக்களாகக் கருதி வாழ்பவன் அவனே. இக்கருத்தே பற்றி யன்றே 'பெற்ற சிற்றின்பமே பேரின்பமா யங்கே முற்றவரும் பரிசு உந்திபற' என்று உய்யவந்த தேவநாயனார் அருளிச் செய்ததும், 'ஜெகமீ திருந்தாலு மரண முண்டென்பது சதா நிஷ்டர் நினைவ தில்லை' என்று தாயுமானவர் அருளிச் செய்ததூஉ மென்க.

இக்கூறியவாற்றால் ஒவ்வொருவரும் தம்மை மட்டும் காதலித்தலினால் நிலையாத சிற்றின்பத்தையே இம்மையிலே யடைவ ரென்பதும், மன்னுயிரனைத்தையுந் தன்னுயிரென அன்பு செய்தலினால் அருள் முறுகி வளர நிலைத்த பேரின் பத்தை இம்மையிலே அடையப் பெறுவ ரென்பதும் கொள் ளப்படும். பொதுநலங் கருதிப் பொருளீட்டக் கருதுவோர் அப்பொருட் செல்வத்தையும் எளிதில் பெறுவாரென்பது திண்ணம். எல்லாச் செல்வமும் அவரைத் தேடிச் செல் லும். இவ்வுண்மை நம் நாட்டார் நன் குணர்ந்ததேனும் இம்மையிலே அது பயன்படுதலை அவர் கருதுதல் இல்லை. இத்தகைய நெறியிலே செல்வோர் அனைவரும் மறுமை ஒன்றையே கருதி இம்மையிலே எய்தற்பாலதாகிய இன்ப வாழ்வை இழக்கின்றனர். அதனால் இல்லறத்தை வெறுக்

கின்றனர். இயற்கைக்கு மாருக இன்பத்தை மறுக்கின்ற னர். இவற்றை யெல்லாம் மேளுட்டு வித்தகர் இம்மை மறு மைக்குப் பயன்படுத்திக் கொண்டு நல்லறம் வளர்த்தும், பொதுநலம் புரிந்தும், அன்பைப் பெருக்கியும் அருளற வாழ்க்கையிலே வீறு நிற்கின்றனர். ஆதலால் அன்பைப் பெருக்கி இன்பைப் பெருக்குவோ மாக. பொருளை யீட்டி அருளை வளர்ப்போமாக. அன்பே சிவம், இன்பே சைவம். சைவரென்போர் பேரின்பங் கொள்வோர். பேரின்பம் அன் பாகிய சிவத்தால் எய்தற் பாலது. அன்பை யடைந்தோர் சிவத்தை யடைந்தோர். அவ்வன்பு ஒருகாலத்து ஓரிடத்து ஒரு சார் உயிர்களிடத்து ஒரு சார் மக்களிடத்து மட்டும் கட்டுப்பட்டு நிற்கும் சிறிய அன்பு அன்று. அஃது எக்கா லத்தும் எவ்விடத்தும் எல்லா உயிர்களிடத்தும் தட்டுத் தடையின்றி மடையுடைந்து ஓடும் வெள்ளம்போல உள் ளத்தி னின்றும் ஊற்றெடுத்துப் புறப்பட்டு ஓடிப் பாய்வது. அதனைச் சைவராகிய நாம் பெறுதற்குப் பல்லாற்ருனும் அவனருளை முன்னிட்டு முயல்வோ மாக.

‘அன்பு சிவம்இரண் டெனபர் அறிவிலார்
அன்பே சிவமாவ தாரு மறிகிலார்
அன்பே சிவமாவ தாரு மறிந்தபின்
அன்பே சிவமாய் அமார்திருப் பாரே.’ —திருமூலர்.

---

## 11. வேதாந்த சித்தாந்தம்

வேதாந்தமென்னும் வடமொழித் தொடர் வேதம்+ அந்தம் எனப் பிரிந்து, வேதத்தின் முடிவு எனப் பொருள் படும். வேதம் அனைவர்க்கும் பொது. அஃது இந்து சம யத்தினர் எல்லாருக்கும் பரமப் பிரமாணமாகிய நூலாம்.

அது கன்மத்தையே பெரிதும் எடுத்துக் கூறுதலால் கன்ம காண்ட மெனப் பெயர் பெறும். வேதாந்த மென்றது உப நிடதங்களைக் குறிக்கும். உபநிடதங்கள் ஞானபாதத்தை விதந்தோதுதலின் ஞானகாண்ட மெனவும் கிளந்தோதப் பெறும். ஞானம் கன்மத்தினும் சிறந்த தென்னும் முறை பற்றியும், கன்மம் பற்றுக்கோடாக ஞானம் பிறக்கு மென்னும் தொடர்பு பற்றியும், வேதம் போலவே மலங்கழன்ற முனிவர்கள் அதிட்டானமாக இறைவன் உபநிடதங்களை அருளிச் செய்தமையானும், அவை வேதங்களின் முடிபாகக் கொள்ளப்பட்டன. அத்தகைய உபநிடதங்களாகிய வேதாந்தங்கள் நூற்றெட்டு. அவற்றுள் சாலச் சிறந்தன பத்து. அவற்றுள் சில பலவற்றிற்கு உரை வகுத்தார் பலர். அவ்வுரைகள் ஒன்றற் கொன்று பெரிதும் மாறுபட்டு நடை பெறுகின்றன. உரை வகுத்தாருள் மிகச் சிறந்தவர்களாய்த் தமது மக்கட் பாட்டானும் கல்வி யறிவு ஒழுக்கங்களானும் பிற ஆற்றல்களானும் மேம்பட்டோரா உரையைத் தழுவி மத வேறுபாடுகள் உண்டாயின. ஆனால், இந்து சமயத்தினர் எல்லாரும் வேதோபநிடதங்களைப் பிரமாணமாகக் கொண்டவர்களே. உரையான் மட்டும் வேறுபாடுகள் கூறுவரே யன்றி, வேதோபநிடதங்களுக்குப் பிரமாண்யம் கூறுதலில் யாவரும் ஒருமைப்பாடுற்றவரே யாவர். ஆதலால், வேதத்தைத் தழுவிய சமயங்களெல்லாம் வைதிக சமயங்களென்று கூறப்படுவதுபோல, வேதாந்தங்களை அல்லது உபநிடதங்களை அவலம்பித்தார் யாவரும் வேதாந்திகளெனவே அழைக்கப்படுவர்.

இஃதிவ்வாறாகவும், ஏகான்மவாதம் சாதிக்கு மொரு சாரார் தம்மை மட்டும் வேதாந்திக ளென்று கூறி ஆரவாரித்தும், ஏனைய சற்சமய உத்தமர்களை வேதாந்திகளல்ல ரென்

றும் உண்மை நெறி திறம்பிப் பழித்துரை யாடுகின்றனர். இவர் கூற்றுக்களால் வேதாந்தங்க ளனைத்தும், ஏகான்மவாதக் கொள்கையே எடுத்துரைப்பன வென்னும் உண்மை வெளிப்படுமோ? அங்ஙனம் அவர் கூறுதல் உபநிடதங்களிலே நன்மதிப்புடைய ஒரு சிலரைத் தம் வயப்படுத்தச் செய்யும் சூழ்ச்சியே யாகும். அவர்தம் சொல் வலையில் மூதறிவுடைய நல்லோர் ஒருகாலும் அகப்படார். இதனால் வேதாந்த மென்னும் உபநிடதங்கள் அனைவர்க்கும் பொதுவாதல் தெளியப்படும். இக்கருத்தையே ஏகான்மவாத பிரசாரணருள் தலைசிறந்து விளங்கிய ஸ்ரீவிவேகானந்தரும் ஓர் உபந்நியாசத்தில் நன்கெடுத்து மொழிந்தனர்.

இனி, சித்தாந்த மென்னும் சொற்றொடரை ஆராய்வோம். சித்தாந்த மென்பது சித்தம்+அந்தம் எனப் பிரிந்து, முடிந்த முடிபு எனப் பொருள்படும். பிறன் கூறும் பக்கத்தை ஏதுக்களால் மறுத்தவழிப் பெறப்படும் முடிபே சித்தாந்த மெனப்படும். சித்தாந்த மென்பது தனித்து வழங்கும்போது ஒரு பொருளையுங் குறியாது, இன்னதின் சித்தாந்த மென்புழி இன்னதின் முடிபு என்று பொருள்பட்டு நிற்குமேனும், வழக்காற்றின் வலியால் சைவ சித்தாந்தத்தையே குறிக்கும். இங்ஙனமே வேதாந்த மென்றதும், யோகரூடம் அல்லது காரண இடுகுறியாக ஏகான்மவாதக் கொள்கையைத் தழுவுமாலோ வெனின், தழுவும். அங்ஙனம், அவர்கள் தம்மைக் கூறிக்கொள்ளுதலால் ஏனைச் சமயத்தாருக்கு வாக்கடவதோர் இழுக்கில்லை. ஆனால், மற்றைச் சமயத்தாரை வேதாந்திக ளல்லரெனக் கூறும் வெற்றுரையே ஈண்டுக் கண்டிக்கப்படுவதென வறிக. சைவ சித்தாந்திகள் ஏகான்மவாதிகளை, ஏகான்மவாதிக ளென்றேனும், மாயாவாதிக ளென்றேனும் வழங்க ஒருப்படுவர். ஏகான்ம

வாதிகளோ சைவ சித்தாந்திகளைச் சித்தாந்திக ளெனவே அழைத்து அங்ஙனம் அழைத்தலினால் தாங்கள் பூர்வபக்கிக ளாதலையும் நோக்காது, தமக்குத் தாமே இஷ்டவிகாதம் செய்துகொள்வர். வேதாந்த மென்னும் தொடரை வைணவாச்சாரியர் பலரும் பொதுவாக வழங்குதலை அன்னோர் இயற்றியுள்ள நூல்களானும் உரைகளானும் தெளிக.

இனி, அவர் (ஏகான்மவாதிகள்) அம்மட்டோ? அத்துவித மென்னும் சொல் வேதோபநிடதங்களில் வழங்கப்பட்டிருத்தலின், அதனை ஒரு பெரும் பற்றுக்கோடாகக் கொண்டு, சமய வாதிகள் பலரும் சொல்லாராயும் நெறி பொருளாராயும் நெறிகளால் நெறிப்படுத்து ஆராய்ந்து, ஒவ்வொரு முடிபைக் கூறித் தாம் அதனின் வேறுபட்டவ ரல்லரெனப் பல்லாற்றானும் எடுத்து விளக்கி யிருப்பவும், உண்மை காணும் விழைவின்றித் தாம் மட்டுமே அத்துவிதிக ளென்றும் ஏனையோர் அத்துவிதிகளல்ல ரென்றும் வாய்ப்பறை யறைந்து செருக்கி நிற்பர். சைவ சித்தாந்த மெய்ஞ்ஞான பானுவாகிய மெய்கண்டதேவர் அத்துவித மென்னும் சொல்லைச் சிவஞான போதத்துள் நான்கு இடங்களில் எடுத்தாண்டு, அச் சொற்பொரு ளின்னதுதானென வேதோபநிடதங்களின் ஆதாரங் கொண்டு தெளித்துக் காட்டி யிருத்தலை அவர் நோக்கிலர். அமையம் வாய்ப்புழி அவற்றை எடுத்து விளக்குவோம்.

வேதப் பொருளைத் தெளித்துரைக்கும் பாடியங்கள் போன்ற சிவாகமங்கள் சிவ சம்பந்த முடையனவாதல் பற்றிச் சைவ மென வழங்கப் பெறும். அவைதாமே பிற நூல்களை மறுத்துச் சிவ சமயத்தை நிலையிட் டுரைத்தலினால் சித்தாந்த மெனவும் கூறப்படும். வேதம், வேதாந்தமென வழங்கப்படுதல் போலச் சைவம், சைவ சித்தாந்த மெனவும்

வழங்கப்படும். வேதமும் சிவாகமங்களும் தம்முள் வேறு பாடுடையன வல்ல; ஒன்றற்கொன் றபேதமே என்ற உண்மையை ஸ்ரீ நீலகண்ட சிவாசாரியர் பிரம்ம சூத்திரத்திற்கு எழுதிய உரையானும்,

'வேதமோ டாகம மெய்யா மிறைவனூ
லோதுஞ் சிறப்பும் பொதுவுமென் றுன்னுக
நாத னுரையிவை நாடி லிரண்டந்தம்
பேதம தென்பர் பெரியோர்க் கபேதமே.'

என்ற திருமூல யோகிகள் திருவாக்கானும் இனிதுணரப் படும்.

இனி, வேதத்திற் சிறந்தது வேதாந்த மென்பதுபோல வேதாந்தத்திற் சிறந்த சித்தாந்தத்தை வேதாந்ததர மென்றும் வழங்குவர். இவ்வுண்மைகளை யெல்லாம் பின்வரும் அருணந்திசிவாசாரியர் அமுத வாக்கின்கண் நன்குணர்க.

'வேதநூல் சைவநூ லென்றிரண்டே நூல்கள்
வேறுரைக்கு நூலிவற்றின் விரிந்த நூல்க
ளாதிநூ லநாதியம லன்றருநூ லிரண்டு
மாரணநூல் பொதுசைவ மருஞ்சிறப்பு நூலாம்
நீதியினு லுலகர்க்குஞ் சத்திநிபா தர்க்கு
நிகழ்த்தியது நீண்மறையி னொழிபொருள்வே தாந்தத்
தீதில்பொருள் கொண்டுரைக்கு நூல்சைவம்
பிறநூல் திகழ்பூர்வஞ் சிவாகமங்கள் சித்தாந்த மாகும்.'

வேதாந்த மென்ற சொற்கேட்ட துணையானே ஏகான்ம வாதமெனக் கொண்டு உலகவழக்கிலும், செய்யுள் வழக்கிலும் இடர்ப்படுவோர் பலர் உளராதலின் அவற்றைக் குறித்து ஒரு சில கூறுவாம். செம்புலச் செல்வராகிய ஸ்ரீ தாயுமான சுவாமிகள் திருவாக்கின்கண் ஆண்டாண்டுக் காணப்படும் 'வேதாந்த சித்தாந்த சமரச நன்னிலை' என்

னுந் தொடர் வேத சிவாகமங்கள் அபேதமுடையன என்னும் பொருளையே பயக்கும். அவை அன்ன ஆதல் முன்னர்க் காட்டப்பட்டது. ஆதலின், வேதாந்தமென்புழி ஏகான்மவாதமெனப் பொருள் கொண்டு கூறும் கூற்றுக்களனைத்தும் வெறும் போலியாதல் காண்க. வேதாந்தமாகிய உபநிடதங்களின் சாரமே சைவ சித்தாந்தம் என்னுங் கருத்தை 'வேதாந்தத் தெளிவாஞ் சைவ சித்தாந்தத் திறன்' என்னும் உமாபதி சிவாசாரியர் திருவாக்கினும், 'தானென்னும் வேதாந்தம் தானான சித்தாந்தம்' என்னும் திருமந்திரத் திருமொழியினும்,

> 'ஓரும் வேதாந்தமென் றுச்சியிற் பழுத்த
> ஆரா வின்ப அருங்கனி பிழிந்துஅதன்
> சாரங் கொண்ட சைவ சிததாந்தத்
> தேனமு தருந்தினர் சிலரே.'

என்னும் குமரகுருபரர் திவ்வியம் பழுத்த வாக்கினும் புலப்படுத லறிக.

இதுகாறும் கூறியவாற்றான் வேதம், உபநிடதம் ஆகிய இரண்டும் எல்லாச் சமயத்தாராலும் ஒப்புக்கொள்ளப்படும் பொது நூல்களா மென்பதும், சிவாகமங்கள் சைவருக்கே உரிய சிறப்பு நூல்களா மென்பதும் அவ்வாறாயினும் அவை வேதத்தோடு ஒத்து நடப்பனவே என்பதும், அவ் வேதங்களின் ஞான காண்டப் பொருளை யோதும் வேதாந்தமாகிய உபநிடதங்களின் பொருளைத் தெளித்துரைக்கும் சிறப்புடையன வென்பதும், அங்ஙனமே அத்துவிதம் என்னும் வழக்கும் அனைவர்க்கும் பொது வென்பதும், அதனை ஒரு திறத்தார் மட்டும் கூறிக்கொள்ளுதல் அறியாமை பற்றி வந்த வழக்கென்பதும், ஆகவே வேதோபநிடதங்களைப் பிரமாணமாகக் கொள்வோ ரனைவரும் வைதிகர், வேதாந்திகள், அத்

வைதிகள் எனக் கூறிக் கொள்ளுதல் வழக்கே யென்பதும், சைவர்கள் சிவாகமங்களைத் தழுவுதலின் ஏனையோரினும் மேற்போந்த சிறப்பினால் சைவரென்றும், சித்தாந்திகளென்றும், சைவ சித்தாந்திக ளென்றும் சிறப்புப் பெயர்களால் தம்மை யழைத்துக் கொள்ளுதல் பொருந்து மென்பதும் ஒருவாறு தெரிக்கப்பட்டன.

## 12. மெய்கண்ட தேவர்

### அவதரித்த காலம்

**சை**வசித்தாந்தம் என்பப்படும் அரிய பெரிய தத்துவ ஞானத்தைச் சுருதி யுக்தி அனுபவங்களுக்குப் பொருந்து மாறு செந்தமிழ் மொழியில் அளந்துரைத்த பெரியார் மெய் கண்ட தேவரே. இவர் தெய்வத்தன்மை கைவரப்பெற்ற பரமாசாரியர். செந்தமிழ்ப் பெருநாட்டுக்கும் சைவத் திரு நாட்டுக்கும் இவர் செய்த உதவி அளப்பரியது. வரம்பிட்டு அறியலாகா முழுமணிகளை ஒத்த இவர் திருவாக்குக்கள் மக் கள் உள்ளத்தே பொதிந்து கிடக்கும் அறியாமையாகிய இருளை ஓட்டுதல் திண்ணம். சுருங்கிய வாய் பாட்டால் மிக விரிந்து பரந்த பொருளைத் தெள்ளத் தெளிய எடுத்துக் காட்டும் வன்மையில் இவருக்கு ஒப்பாவார் தெய்வப் புல மைத் திருவள்ளுவர் ஒருவரே. இவர் அருளிச் செய்த சிவ ஞான போதம் என்னும் திப்பிய நூலுக்கு ஒப்பாயது வட மொழி தென்மொழியாகிய இரண்டு மொழிகளிலும் இல்லை. சில் வாழ்நாள் பல்பிணிச் சிற்றறிவுடைய மக்கள் நன்ஞானங் கற்று வீடு பெறுதற்குச் சொற் சுருக்கமும் பொருட் பெருக்கமும் வாய்ந்த நூலே சாலச் சிறந்ததாம். இதனை

லன்றே பொய்யில் புலவராகிய திருவள்ளுவ நாயனார் குறள் வெண்பாவால் நூல் செய்ததூஉம் களவியலுடையார் சூத்திர வடிவமாக நூலியற்றியதூஉம் என்க.

செந்தமிழ் வளநாட்டிலே சமணசமய விருள் கவிந்து, சைவ ஒளி மழுங்கி இருந்த காலத்து எல்லாம் வல்ல முழு முதற் செழும்பொருளாகிய சிவபெருமான் திருவருளால் திருஞான சம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரர், மாணிக்கவாசகர் என்னும் நால்வரும் அவதரித்துச் சைவசமயத்தின் பெருமையை நிலைநாட்டினார்கள். சைவசமயத்திற்கு வேதம் பொதுவாகவும் சிவாகமங்கள் சிறப்பாகவும் பிரமாண நூல்களாகும். வேதம் கருமகாண்டம், ஞானகாண்டமென இரு வகையாகப் பகுக்கப்படும். கருமகாண்டம் கருமங்களையும் உபாசனைகளையுமே விரித்து மிகுத்துக் கூறும். ஞானகாண்டமெனப்படும் உபநிடதங்களோ ஞானத்தைக் குறிப்பாகவும் கதாரூபமாகவும் சரித்திர வாயிலாகவும் கூறுவன. இவை வேதாந்தங்கள் எனப் பெயர்பெறும். கருமத்தினும் ஞானஞ் சிறந்தது என்னும் பொருள் நோக்கத்தால் இவை வேதத்தினுஞ் சிறந்தனவாகக் கருதப்பட்டு வேதாந்தங்களெனப் பெயர் பெற்றன. இவற்றினும் பொருட் திட்பம் வாய்ந்து சைவசமயத்திற்கே சிறப்பு நூல்களாய்ச் சரியாபாதம், கிரியாபாதம், யோகபாதம், ஞானபாதம் என்னும் நால்வகைகளையும் செவ்வனம் வகுத்து விளக்கி ஆலயவமைப்பு, அநுஷ்டான பத்ததிகள், தீட்சாக்கிரமம் முதலிய எல்லாப் பொருள்களையும் தம் அகத்தே கொண்டு தெளித்துரைப்பன சிவாகமங்கள். இவை இத்துணைத்தென வரையறுக்கலாகாத் தெய்விகம் உடைமையின் திவ்யாகமங்கள் எனவும் வழங்கப்பட்டன. இச் சிவாகமங்கள் தம் ஒப்புயர்வற்ற மாட்சியினால் வேதாந்தங்களினும் சிறந்தன ஆதல்

பற்றி வேதாந்ததரமென்றும் கிளந்தோதப்பெறும். இவை சிவபெருமானையே முழுமுதற் கடவுளாகக் கூறுவதால் சிவ சம்பந்தமுடையன என்னும் பொருள்படச் சைவம் என்றும் வழங்கப்படும். சிவாகமங்கள் தோன்றிய காலத்து ஒருசாரார் அவற்றை வேதங்களோடு ஒப்பக் கருதாமல் அவற்றிற்கு அப் பிரமாண்ணியங் கூறுவாராயினர். பழமை பாராட்டுவோர் எக்காலத்தும் புதியனவற்றை அவை நல்லன இனியன எனத் தமக்குள் தோன்றினும் அவற்றை ஏற்றுக் கொள்ள அஞ்சுதலும் பின்வாங்குதலும் கூசுதலும் இவ்வுலக இயல்பே. ஆனால் நாளேற நாளேறச் சிவாகமங்கள் தம்பொருட் பொலிவினாலும் தத்துவஞான நுட்பத்தாலும மக்கள் மனங்களைக் கவர்ந்து அவர்களால் பெரிதும் போற்றப்படுவன ஆயின. அக்காலத்தே வியாசமுனிவ ரெழுதிய பிரம்மசூத்திரத்திற்கு விரிவுரை வரைந்த ஆசிரியர் நீலகண்டனார் தம் உரை முகத்தே சிவாகமப் பிரமாண்யத்தை நன்கு விளக்கித் தீட்டியுள்ளார். தவச்சக்கிரவர்த்தியாகிய திருமூலமாமுனிவரும் தாம் திருவாய் மலர்ந்தருளிய ஞான விநோதக் களஞ்சியமாகிய நூலின்கண்,

'வேதமோ டாகமம் மெய்யா மிறைவனூல்
ஓதும் பொதுவுஞ் சிறப்பு மென்றுன்னுக
நாத னுரையிவை நாடி லிரண்டந்தம
பேதம தென்னிற் பெரியோர்க் கபேதமே.'

என்று இனிது உரைத்தருளுவாராயினர்.

இத்துணைப் பெருநூல்கள் இந்து சமயத்தில் சிறந்திருந்தும் பௌத்த சமயமென்னும் பெருங்காற்றினாலும் சமண சமய மென்னும் பேரலைகளாலும் இந்துசமயம் தட்டுண்டுப்பட்டு நின்றது. அக்காலை வடமொழி நான்மறைகள்போலப் பொருளமைதி பெற்று, எல்லாருக்கும் எளிதாகப் பயப்பா

டுடைமை, மிக விரைவிலே உணர்ந்துகொள்ளப் படுதல், முயற்சி யின்றிப் பாடப்படுதல், துவிஜரேயன்றி ஏனேர்க்கும் பயன்படுதல், பொற்கலத்துட் பெய்த அமுதம் நிகர்த்தல் ஆய இன்னேர் அன்ன தன்மைகளால் அவ்வடமொழி நான்மறைகளினும் மிக்க விழுப்பம் வாய்ந்து திகழும் செந்தமிழ் நான்மறைகளைச் சைவசமய குரவர்களாகிய திருஞான சம்பந்தர் முதலிய நால்வரும் அருளிச் செய்தும், செயற்கரிய அற்புதங்களைச் செய்து காட்டியும், சைவசமயத்திற்குச் சிறிதுங் குறை நேராத வண்ணம் பாதுகாத்துக் கொண்டனர். தேவார திருவாசகங்கள் தோத்திர ரூபமாக அமைந்து, பக்திரசம் பொழியும் தீஞ்சுவைத் தமிழ்ப்பாசுரங்க ளாகும். இவை கடவுள், உயிர், உலகம் என்னும் பதி பசு பாசங்களி னியல்பையும், இவற்றிற்கு ஒன்றற்கொன்றுளதாய தொடர்பையும் குறிப்பாகக் கூறுவன அன்றி நெறிப்படுத்து வகுத்துரைப்பன அல்ல. வேதோபநிடத சிவாகமங்கள் வடமொழியி லிருத்தலால் வடமொழியாளர்க் கன்றிப் பிறருக்குப் பெரிதும் பயன்படுவன அல்ல. வடமொழி கற்றோர்க்கும் ஓராற்ருன் அரிதில் பயன்படுவனவாய் இருந்தனவே அன்றி எல்லார்க்கும் எப்போதும் எளிதில் பயன்படுவன அல்ல. மக்கள் அறிவு மெய்ஞ்ஞான உணர்ச்சியில் தலை தூக்கி உறைத்து நின்றமையால் அனைவரும் ஆன்மபோதம் பெறுதற்கு வேணவாக்கொண் டிருந்தனர். வடமொழியில் சாங்கியம், தர்க்கம், மீமாஞ்சை முதலிய ஆறு தரிசனங்களும் சங்கர ராமானுஜ நீலகண்ட பாஷ்யங்களும் பெரிதும் பரவி ஒரு பெருங் கிளர்ச்சியைச் செய்துகொண் டிருந்தன. நம் தமிழ் மொழியில் இவை எல்லாவற்றுக்கும் ஈடு கொடுக்கத்தக்க ஓர் அரிய பெரிய தத்துவஞான நூல் மிகுதியும் வேண்டப்படுவ தாயிற்று. முற்றத்துறந்த பட்டினத்தடிகளார், நற்றவச் செல்வராம் திருமூலயோகிகள் முதலானேர்

அருளிச் செய்த நூல்களும் தத்துவஞானத்தை வித்தகம்பட மொழிவனவேனும் தருக்கநெறி பிறழாது பொருள் வகுத்துக் கூறும் சாத்திரங்கள் அல்ல. அக்காலத்தில் செந்தமிழ் முதுமக்கள் பெரிதுங் கவன்று ஒரு செந்தமிழ்த் தெய்வ ஞானநூல் என்று கிடைக்குங்கொல்லோ? என்றும், அதனை இயற்றி அருளும் குருமணியார் எம் கண்காணத் தோன்றுவரோ? யாங்கள் எல்லாரும் விழுமிய ஞானத்தின் கெழுமிய சுவையை எளிதில் உணர்ந்து உறுதி அடையுங் காலம் என்றோ என்றும், ஞானசம்பந்தரைத் தோற்றுவித்த பரதெய்வம் தத்துவ ஞானத்தை இனிதுணர்த்தும் தெய்வப் பெரியாரையும் தோற்றுவிக்குங் கொல்லோ என்றும் எண்ணி எண்ணி உருகுவார் ஆயினர்.

'எண்ணியார் எண்ணியாங் கெய்துப எண்ணியார்
திண்ணிய ராகப் பெறின்.'

என்னும் பொருளுரையின்படி இக்குறை யெல்லாம் ஒழியவும் தமிழ்நாடு தனிச் சீர்த்தி பெறவும் சைவசமயச் சீர்த்தி யோங்கி நிலவவும் உலகமே உய்திகூடவும் நம் தெய்வ ஞானப் பெருங் குரவரும் சைவசித்தாந்த முதலாசிரியரும் ஆகிய பொய்கண் டகன்ற அத்துவித மெய்கண்டார் அவதரித்தருளினர்.

## சரித்திர உணர்ச்சி

இனித் தமிழ்நூலை ஆராயப் புகுந்து, அதன்கண் ஊறிச் சுரக்கும் இன்பவெள்ளத்தில் படிவோரும், ஆங்காங்குக் காணப்படும் திட்ப நுட்ப ஒட்பங்களை உணர்வோரும், இத்தகைய பெருஞ் சிறப்பு வாய்ந்த அரிய நூலை இயற்றின கல்விச் செல்வர் எந்நாட்டில் எம்மரபிலே உதித்தனர்? என்றும், எவ்வாறு தம் வாழ்க்கையை நடாத்தினர்? என்றும்,

அவருடைய மேதக்க அறிவு எவ்வெவ்வாறு ஆக்கமுற்று விரிந்து பொலிந்ததெனவும், அவர் தம் இளமைப் பருவத்தில் எவ்வாறு திகழ்ந்தனரென்றும், அவருடைய விருப்புவெறுப்புக்கள் யாவை என்றும், அவர் ஆர்வத்துடன் கற்றநூல்கள் எவை? என்றும், அவர் புறக்கணித்து ஒதுக்கிய பொருள்கள் யாவை? என்றும் அறிய வாயூறி நிற்பர். இன்னோரன்ன பொருள்களை அறிவதனால் நாம் பெருமகிழ்ச்சி எய்துகின்றோம்.

செம்புலச் செல்வர் வரலாறுகளைப் படிப்பதைக் காட்டிலும் பெருஞ்சுவை வேறொன்றினும் உண்டாதலில்லை. அவர்கள் அவ்வப்போது நடந்துகொண்ட வகையும் பாடியருளிய திருப்பாட்டுக்களும் என்றும் தெவிட்டாத இன்பத்தைத் தருவனவாகும். சரித்திர உணர்ச்சியின்றிச் சில நூல்கள் கற்கப்படா. அவ்வாறு கற்பினும் அதனால் இன்சுவை மிகுதி விளையுமாறில்லை. ஆதலின், சரித்திரத்தை உணர வேண்டுவது நமக்கு இன்றியமையாத கடப்பாடாகும்.

சரித்திரத்தை உணர்வதனால் அக்காலத்தின் இயல்பும் அக்காலத்தில் தம்மைச் சூழ்ந்திருந்த பொருள்களின் வன்மை மென்மையும் செங்கோன் முறையும் மன்பதையின் ஒழுக்க வழக்கங்களும் தெள்ளத் தெளியப் பளிங்கெனவிளங்கும். அப்போது நூலின் பொருள் முற்றும் ஐயந்திரிபற விளங்குதலோடு நயமும் நோக்கும் சுவையும் மிகுதியும் உடைத்தாய்ப் பெருமையில் விஞ்சும். இதனை ஓர் உதாரணமுகத்தான் விளக்குவோம். ஆசிரியர் திருவள்ளுவநாயனார் தாம் அருளிச் செய்த தெய்வஞான நூலாகிய திருக்குறளின்கண்,

‘ அவிசொரிந்து ஆயிரம் வேட்டலின் ஒன்றன்
உயிர்செகுத்து உண்ணாமை நன்று.’

'மறப்பினும் ஒத்துக் கொளலாகும் பார்ப்பான்
பிறப்புஒழுக்கம் குன்றக் கெடும்.'

'மழித்தலும் நீட்டலும் வேண்டா உலகம்
பழித்த தொழித்து விடின்.'

என்று அருளிச் செய்துள்ளார்.

முதற் திருக்குறள் வேதம் விதித்தபடி செய்யப்படும் ஆயிரம் வேள்விகளை வேட்டலினால் வரும் பயனைக் காட்டிலும் ஒன்றன் உயிரைக் கொன்று அதன் ஊனை உண்ணு திருத்தல் நன்மை பயக்கும் என்று கூறுகின்றது. வேள்வியாவது பசு அல்லது ஆடு முதலிய உயிர்ப் பொருள்களை மந்திர பூர்வமாகச் சடங்கு இயற்றி நெருப்பில் கொல்லுதலேயாம். அக் கொல்லப்பட்டவைகளை வேள்வி வேட்டாரும் பிறரும் தின்னுதலும் செய்வர். அவ்வாறு வேட்டற்கு அவி முதலிய சாமக்கிரியைகளும் வேட்போர் முதலிய வேதவித்துக்களும் பிறரும் பிறவும் எல்லாம் வேண்டப்படும். பொருட் செலவும் மெய்வருத்தமும் அதிகம். அன்றியும் காலவிசேடமும் கருதப்படும். இவ்வாறெல்லாம் இடர்ப்பட்டு ஆயிரம் வேள்வி வேட்டலைக் காட்டிலும் ஒருயிரைக் கொன்று அதன் ஊனை உண்ணுதிருத்தல் நன்றென்று கூறியது வேள்விகளை மக்கள் இயற்றலாகா தென்னும் கருத்தை யாப்புறுத்தற்கே யாம் என்பது தெளிவாம்.

வேள்வி உயிர்க்கொலையும் புலாலுண்ணலுமன்றி வேறன்மையான், ஒன்றன் உயிர் செகுத்துண்ணாமை நன்று என்ற ஆசிரியரின் கருத்து அவ்வேள்வியைக் கண்டித்தலே ஆகுமென்பது வெள்ளிடை மலைபோல் விளங்கும். அற்றேல் வள்ளுவனார் தாம் விரும்பிய கருத்தை வெளிப்படையாக ஏன் உணர்த்தலாகா தெனின்; அது காலத்தினியல்பு பற்றியதே ஆகும். யாங்ஙன மெனிற் கூறுதும்: வேள்வி

வேட்க வென வேதத்துள் கூறப்பட்டது. அவ்விதியைக் கடைப்பிடித்து அனைவரும் வேட்கலாயினர். வேட்டலின் மிருதி கூறவே ஆயிரக்கணக்கான வேள்வி வேட்பின் அள வற்ற சிறப்புக்கள் உண்டாமென்பது மக்களுக்குக் கருத்தா யிற்று. அவ்வொழுகலாறே நெடுநாட்களாக நடைபெற்று வந்தது. பின்னர்க் கௌதம சாக்கியரென்னும் புத்தர் அவ தரித்தார். அவரோ மந்தை மந்தையாகப் பேதைப் பிராணி களாகிய ஆடுகளையும் சாந்தப் பிராணிகளாகிய பசுக்களையும் யாகம் செய்வான் வேண்டி ஓட்டிக் கொண்டு போவதைக் கண்ணுற்றுக் கண்ணீர் உகுத்து உள்ள முருகி இத்தீச் செயலை ஒழித்தல் வேண்டுமெனத் துணிந்து அதன் பொருட்டு ஆண்டாண்டுச் சென்று அற்புத பிரசங்கமாரி பொழிந்து, அதனைத் தடுப்பாராயினர். அதனால் அக்கா லத்து மக்களிற் பெரும்பான்மையோர் அவருக்குத் திரு வடித் தொண்டராயினர்.

இவருக்குப்பின் இந்து சமயத்திலே சிற்சில பேதங்கள் ஏற்பட்டன. இவற்றையெல்லாம் கண்டுவைத்தும் இந்து சமயத்தை அவலம்பித்த மக்களிற் பெருங்கூட்டத்தினர் வேள்வியை வேட்டும், அதற்கு மாறாகக் கூறும் கூற்றுக்களை ஏற்றுக் கொள்ளார் ஆயினர். எவரேனும் அஞ்சாமல் எடுத் துச் சொல்வாராயின் அவரைத் தம்மதத்திற்குப் புறம்பானவ ராகவும் எண்ணுவாராயினர். அதனால் அவர்கள் சொல் செல்லாதாயிற்று. ஆதலினால் நுண்ணறிவு வாய்ந்த திரு வள்ளுவ நாயனார் உலகாநுபவ முதிர்ச்சியினால் தம் மத வொழுக்கத்தைக் கைப்பற்றி அதனின்றும் அணுவளவும் வழுவாது ஒழுகித் தம் சொல்லை இனிது செல்லு நெறியிலே அமைத்துக்கொண்டு சீர்திருத்தஞ் செய்யுங் கருத்தின ராதலின், சொல்லாமற் சொல்லிப் பயன்படுவகையால் உயிர்

செருத்து உண்ணுமையின் பெருமையைப் புலப்படுத்தி நயம்பட மொழிந்து வைத்தா ரென்க.

இரண்டாங்குறளில் வேதம் ஓதுதலை மட்டும் சிறப்பாகக் கொண்டு பிறப்பொழுக்கத்தைப் பாராமுகமாகக் கொண்ட பார்ப்பனர் சிலர் அக்காலத்து இருந்தமையால் அவருக்குப் பிறப்பொழுக்கமே அறவுஞ் சிறந்தது என்னும் கருத்தைத் தூக்கி அவர் கருத்தைத் தாக்கினுர் ஆதல் தெளியப்படும்.

மூன்றும் குறுவெண்பாட்டில் புறவொழுக்கம் மட்டும் உடையராய் அகவொழுக்கம் இலராய் மெய்யுணர்ந்தோர் மங்கையர் போகத்தை நுகர்ந்திருப்பினும் அஃது இழுக்கில்லை என்னும் கருத்து மூரிவருதலைக் கண்டு உலகம் பழிக்கத்தக்க செயலை ஒழிப்பதே சிறந்த தாவதன்றி மழித்தலினுலும் நீட்டலினுலும் யாதொரு பயனு மில்லை என்பதை யாப்புறுத்தினர்.

அன்றியும், அக்காலத்து ஞானிகள் தலையை மழித்தல் செய்தல் அல்லது தாடி முதலியவற்றை வளர்த்தல் செய்தல் ஆகிய இவ்விரண்டி லொன்றை மேற்கொண் டொழுகினுர் என்பதும் புலப்படும். இவ்வாறு நுண்ணிதாக ஆராயப்புகின் பற்பல கருத்துக்களும் அழகுகளும் தோன்றும் என்க.

---

## 13. இலக்கியம்

நமது தீவிய செந்தமிழ் வளநாட்டிலே அளவிறந்த புலவர் பெருமக்கள் தோன்றி, அரும்பெருங் கருத்துக்களையுடைய இனிய பாக்களைச் சொற்சுவை பொருட்சுவை ததும்பப் பாடி வைத்தனர். அவர் மக்கள் இயல்பை முற்றும்

தமது கூரிய சீரிய அறிவால் அறிந்து, கேட்போர் உணர்வு வயப்படுமாறு இனிது சொல்லிய திறன் பெரிதும் பாராட் டற்பாலது. செய்யுட் டிறத்தில் நம் செந்தமிழ் மொழி யிலே யாதொரு குறைபாடும் இலது. ஆனால் உரைத்திறத் திலோ எனின், இலக்கியச் செறிவு பொருந்திய நூல்கள் யாதும் இல்லை யென்றே கூறலாம். நாம் உரையைப் பல வகையானும் வளர்த்தல் வேண்டும். அப்பொழுதுதான் நமது தமிழ்மொழி பெருமக்கள் அனைவருக்கும் நன்கு பயன் படுதலாகும். நூலுரைகளாக உள்ள களவியலுரை முதலி யன உரை இலக்கியம் எனச் சொல்லப்படா. ஏனெனின், அவை நூலின் பொருளைக் கூறுகின்றனவன்றி, தாமாகவே ஒன்றைக் கூறுவன அன்மையின் என்பது. இனிப் பிற் காலத்தே தோன்றிய சிற்சில உரை நூல்களுள்ளும் இலக் கியப் பொலிவு வாய்ந்து திகழ்பவை இறப்பவும் சிலவே. ஆதலின், நாம் உரை நூல் செழுமையுற்று வளர்வதற்குப் பெருமுயற்சி செய்தல் வேண்டும். பலதிறப்பட்ட உரை நூல்களைப் புலவர்களைக் கொண்டு எழுதுவித்தல் வேண்டும். பழந்தமிழ் நூல்களை ஆராய்ந்து வெளியிடுதலும் உரையை வளர்ப்பதற்குரிய வழிகளுள் ஒன்றாகும். மேனாட்டார் உரை நூல்களில் பெரும்பான்மையன ஆராய்ச்சி நூல்களே. நாம் நமக்கு ஆரமுதம் போலச் சிறந்து விளங்கும் சிலப்பதிகாரம், சிந்தாமணி, திருக்கோவையார், பெரியபுராணம், இராமாய ணம் முதலிய நூல்களைப் பல ஆராய்ச்சி முறைகளைக் கொண்டு செவ்விதாக ஆராய்ந்து எழுதுவோமாயின், அவை உரை நூல்களாய் மிளிர்தலோடு ஆராய்ச்சி நூல்களாகவும் சிறக்கும் என்பதிற் சிறிதும் ஐயமில்லை. அத்தகைய ஆராய்ச் சிக்கு உபகாரப்படுமாறு ஆங்கில நன்மக்கள் முறைமையினை மிகுதியுந் தழுவி இலக்கியம் என்னும் பொருள் பற்றி இக் கட்டுரையை எழுதுகின்றோம். நாம் நல்லனவற்றைப் பிற

மொழிகளினின்றும் எடுத்துக் கொள்வதில் இழுக்கொன்று மில்லை. அது நம் தொல்லாசிரியர் இட்ட நல்லாணையுமாம் என்பது; 'தொகை, வகை, விரி, மொழிபெயர்ப்பு' என நான்கு வகையாக நூல் செய்தற்பாற்றென அவர் வரையறுத்துக் கூறியதனாலும் அது தெளியப்படும்.

## இலக்கியம் என்பது யாது?

இலக்கியம் என்பது யாது என முதற்கண் ஆராய்வோம். இலக்கியம் என்னுஞ்சொல் வடசொல்லின் திரிபாகும். அதற்கு வடமொழியிலே இலக்கணையால் பொருள் கொள்ளக்கிடப்பது என்று பொருள். இலக்கணை என்பது கங்கைக் கரையின்கண் வேடச்சேரி என்புழிக் கங்கை வெள்ளத்தை உணர்த்தாது அதன் கரையை உணர்த்துவதாகிய ஒரு வகை இலக்கண விதி. இது தமிழிலே ஆகுபெயரின் கண் அடங்கும். அளவை நூலார் இலக்கணத்தாற் காரியப்படுவது இலக்கியம் என்பர். தமிழ் நூலாரும் 'இலக்கியம் கண்டதற்கு 'இலக்கணம்' என்பர். சைனப்புலவரோ சீவகசிந்தாமணி, சிலப்பதிகாரம் முதலிய ஐம்பெருங்காப்பியங்களையும் இலக்கியம் என்பர். ஆசிரியர் நச்சினார்க்கினியர் பாரதம், இராமாயணம், போல்வன இலக்கியம் என்றனர். உலகவழக்கில் இலக்கியம் என்ற சொல் அந்தாதி, கலம்பகம், கோவை, உலா முதலிய நூல்கட்கெல்லாம் பொதுவாக வழங்கி வருகிறது. செய்யுள் வழக்கு, உலக வழக்கு என்னும் இருவகை வழக்கின் ஆற்றலையும் கூர்ந்து நோக்கி, இலக்கியம் என்பது இன்னதுதானென ஒருவாறு துணிவோம்.

நிகண்டு நூல்களையும் இலக்கண நூல்களையும் ஒருவரும் இலக்கியம் என்று கூறுவதைக் காண்கிலம். அதுபோன்றே

மருத்துவம், சோதிடம், சாத்திரம் முதலியவற்றையும் இலக்கியம் எனக் கூறலாகாது. ஏனெனின், இவை ஒரு பகுதியாருக்கு மட்டும் பயன்படுவன வன்றி மக்கட் பாப்பிற்கு முழுவதும் பயன்படுதல் இன்மையின் என்க.

இனி, ஆசிரியர் நச்சினார்க்கினியர் இராமாயணம், பாரதம் போல்வன இலக்கியம் என்றதை நோக்குழி இலக்கியத்தைப் பற்றி அவர்கொண்ட கருத்தும் அதுவே யாதல் துணியப்படும். அங்ஙனமே, எல்லார்க்கும் ஒப்பப் பயன்படுதல் நோக்கியே சமணப் புலவரும் ஐம்பெருங் காப்பியங்களை இலக்கியம் என்று கூறினாரதல் வேண்டும். இக்கருத்தே பற்றி அந்தாதி, கலம்பகம் முதலியனவும் இலக்கியமாவான் செல்லும்.

இதுகாறும் கூறியவாற்றான் இலக்கியம் என்பது முதன் முதல் மன்பதைக்கெல்லாம் பொதுவாகப் பயன்படுதலான பொருளை யுடைத்தாய், இனிய வகையிற் சொல்லப்படுவதாய் இருத்தல் வேண்டும் என்பது பெற்றும். சிவஞானபோதம் முதலிய சாத்திர நூல்கள் எல்லாம் அரிய பெரிய தத்துவ ஞானத்தைப் புகட்டுமேனும், அவை நிகண்டு, இலக்கணம் முதலிய கருவி நூல்களைக் கற்றுப் புலமை மிக்குப் பிறவிக்கஞ்சி வீடு பேற்றை அவாவி நிற்கும் ஒரு சிலர்க் கன்றி எல்லார்க்கும் பயன்படாமையினால் இலக்கியம் ஆகா. அவை சாத்திரம் எனவே படும். சாத்திரம் ஒருவகைப் பொருளை ஒரு சாராருக்கு உணர்த்தும் பகுதியிலே முனைத்து நிற்க, இலக்கியம் எல்லார்க்கும் ஒப்பப் பயன்படும் பொருளை எல்லார் அறிவிற்கும் எட்டுமாறு இனிய வகையில் எடுத்து மொழிவதிலேயே தலைதூக்கி நிற்கும் என வேறுபாடு கண்டு கொள்க.

இலக்கியத்திற்கு மற்றொரு தன்மையும் இன்றியமையாது வேண்டப்படும். அஃதாவது இலக்கியம், சொற்கட்டுச் சிறந்து இன்பம் பயத்தலைக் குறிக்கோளாகப் பெற்றிருத்தல் வேண்டும். நாம் ஓர் அழகிய ஓவியத்தைக் கண்டு உவகை கூர்கின்றோம். அவ்வுவகை ஏன் நமக்கு உண்டாயிற்று என்று ஆழ்ந்து நினைத்துப் பார்ப்போம். ஓவியம் ஓர் ஒழுங்கில் அமையப்பட்டதாய், எங்கெங்கு எவ்வெவ்வாறு கோடுகள் அல்லது நிறங்கள் பொருந்த வேண்டுமோ அவ்வாறு பொருந்திக் கண்ணைக் கவர்தலின், நமக்கு இன்பவுணர்ச்சி பிறக்கிறது. அதுபோலவே நல்லிசைப் புலவர் பாடிய ஒரு செய்யுள் எடுத்துக்கொண்ட பொருட் கேற்பச் செஞ்சொற்களால் முறைமையாய்த் தொடுக்கப்பட்டு யாப்பியல் வழுவாது நிற்றலின், நம் உள்ளத்தே இன்பத்தைத் தோற்றுவிக்கின்றது. இன்னோன்ன தன்மையால் இலக்கியம் எனப்பட்டவை யாவும் சொல்லின்பம் பொருளின்பங்களுக்குரிய தன்மைகள் வாய்ந்திருத்தல் வேண்டு மென்பதும் பெறுதும். எனவே, மிகச் சிறந்த பொருளும் செவ்விதாகச் சொல்லப்படாவிடின் அஃது இலக்கியம் எனப்படாது என்பது புலப்படும். ஆதலின், இலக்கியம் மன்பதைக் கெல்லாம் ஒப்பப் பயன்படும் பொருளை உடையதாய்ச் சொல் வகையில் இனியதாய்ச் சொல்வடிவம் முதலியனவற்றாற் சிறந்து இன்பம் பயத்தல் வேண்டும் என்பது துணியப்பட்டன.

## இலக்கியமும் வாழ்க்கையும்

இனி, இலக்கியங்களைக் கற்றலால் நமக்கு இன்பம் உண்டாவதற்குக் காரணம் யாதெனை ஆராய்வோம். இலக்கியம் எல்லா மக்களுக்கும் இன்றியமையாது வேண்டப்படும் உறுதிப் பொருள்களை எடுத்துக் கூறுகின்றன. அவற்றைப்

படிக்குந்தோறும் நமது வாழ்க்கையின் பல பகுதிகளையும் அறிகின்றோம். சீதா பிராட்டியார் அசோக வனத்திலே தங்கிப் பன்னெடு நாட்களாகத் துன்பமுற்று இராமபிரானைப் பற்றி யாதொன்றும் அறியமுடியாதவராய், இராமபிரான் தமது இருப்பிடத்தை அறிந்துள்ளாரோ? இல்லையோ? என்றும்; அறிந்தும் பகைவரால் கைப்பற்றப்பட்டமையின் தம்மை மீட்சி செய்தல் தகாதெனக் கருதினரோ என்றும்; பலப்பலவாறு தமது பெண்மைக் கியைந்தவாறு எண்ணி யெண்ணி மனம் புண்பட்டு, உய்யும் வகை காணாராய் உயிரைத் துறக்கத் துணிந்து, குருக்கத்திக் கொடிக்கருகே செல்லுதலும், அனுமான் இராமபிரான் நாமத்தைச் சொல்லிக் கொண்டு விரைந்து ஓடிச் சென்று, அவரை யணுகியபோது, அரக்கர் வஞ்சனைகளை யறிந்த பிராட்டியார் இவ்வாறு வருகின்றவன் அரக்கன்தானோ, அன்றி யாவனோ? என்று முன்னே ஐயுறவுகொண்டு, பின்னர்த் தம் ஆருயிர்க் காதலரின் திருநாமத்தைச் சொல்லினனாதலின் அவன் யாவனாயினும் அந்நிலையில் தம் உயிரைத் தந்த உத்தமன் ஆயினனென உவகை கூர்ந்து, அவனை யார் என வினவுதலானார் என்னும் வாழ்க்கைப் பொருளைக் கல்வியிற் பெரிய கம்பர்,

'அரக்கனே யாக வேறோ ரமரனே யாக வன்றிக்
குரங்கினத் தலைவ னேதா னாகுக கொடுமை யாக
இரக்கமே யாக வந்திங் கெம்பிரான் நாமஞ் சொல்லி
உருக்கின னுணர்வைத் தந்தா னுயிரிதி னுதவி யுண்டோ?'

என்னும் செய்யுளால் நம் உள்ளத்தே நன்கு பதியும் வண்ணம் இனிது கூறுதலின், நாம் மகிழ்ச்சியில் துளும்புகின்றோம். ஏனெனின் வாழ்க்கையின்கண் கணவனைப் பிரிந்து வருந்தும் மனைவியின் வருத்தம் முதலியன நமக்கு அனுபவமான பொருள்களாதலின் என்க. இவ்வாறன்றி உலக

வாழ்க்கையிற் காணப்படாத பொருள்களை எத்துணை ஆற்றலுடன் கூறினும் அவை நமக்கு இன்பம் பயப்பனவாகா; அவை நம் அனுபவத்துக்கு அப்பாற் பட்டவையாதலின். ஆகவே, எல்லா இலக்கியங்களும் உலக வாழ்க்கையைத் தெள்ளத் தெளிய எடுத்துரைப்பனவே யாகும். எவ்வெவ்விலக்கியங்கள் வாழ்க்கையை வழுவா வகை எடுத்துக் கூறும் கூற்றிலே சிறந்து திகழுமோ அவ்வவ் விலக்கியங்களே தலையாய இலக்கியங்கள் எனக் கருதப்படும்.

இனி, இப் பொருளையே சொல்லாற்றல் இல்லாதான் ஒருவன் கூறின், அது நமது கருத்தைக் கவர்தலின்றாகும். ஆதலின் நாப்புலமை வாய்ந்த புலவர் கலைத்திறம் பொருந்தப் பொருளைப் புகட்டுவதால் மட்டுமே நம் முணர்வு கவரப் படும் என்க. செந்நாப்புலவர்க்கே இன்ன பொருளை இன்னின்ன சொற்களால் இன்னின்னவாறு இன்னின்ன காலத்திற் சொல்லவேண்டும் என்னும் தன்மை நன்கு விளங்கும். ஏனோர்க்கு அஃது அரிதாகும். இத்தகைய குணங்களிற் சிறந்து நிற்போரே பெரும் புலவர் எனப்படுவர். அவர் தம் கவியைக் கருதியே போலும் கம்பர் பின்வரும் செய்யுளைச் சித்திரிப்பாராயினர் :

> 'புவியினுக் கணியா யான்ற பொருடந்து புலத்திற் றாகி
> அவியகத் துறைக டாங்கி யைந்திணை நெறிய ளாவிச் [றோர்
> சவியுறத் தெளிந்து தண்ணென் றொழுக்கமுந் தழுவிச் சான்
> கவியெனக் கிடந்த கோதா விரியினை வீரர் கண்டார்.'

## 14. இலக்கியத் தோற்றம்

காரணம் இன்றிக் காரியம் என்றும் நிகழ்வ தில்லை. உலகில் நடைபெறுந் தொழில்கள் எல்லாம் ஒரு காரணத்தை யுடையனவே. அங்ஙனம் இலக்கியங்கள் தோன்றும்போது

ஒரு காரணத்தை யின்றித் தோன்ரு. ஆதலின், அவற்றின் காரணங்கள் இவை யிவை என் ஆராய்தல் வேண்டும். அவ் வாராய்ச்சியினுல் இலக்கியத் தன்மைகள் பல நமக்கு இனிது புலப்படுதலோடு அவற்றின் பல்வேறு வகைப்பட்ட பாகுபாடுகளின் காரணமும் நன்கு விளங்கும். முன்னர் இலக்கியங்களுக்கும் வாழ்க்கைக்கு முள்ள இயைபு செவ்வனம் தெளியப்பட்டது. அவை வாழ்க்கைக் கூறுபாடுகளை மொழி வடிவத்தில் உணர்த்துவனவே யன்றி வேறல்ல வென்பதும் காட்டப்பட்டது. ஆதலின், அவ்விலக்கியங்களின் தோற்றத்தைக் குறித்த காரணங்களையும் வாழ்க்கையிலேயே நாம் கண்டறிதல் வேண்டும். இக்குறிகோளை வைத்துக்கொண்டு வாழ்க்கை நிலையைச் சிறிது ஆராய்வோம்.

ஒருவரோடு ஒருவர் கலந்து வாழ்தல் மக்கள் இயல்பு. தனித்துறைதல் எவர்க்கும் இயலாது. துறவிகள் அகச் சார்பு, புறச்சார்பு விடுத்துத் தனித்துறைவ ரெனின், அவரும் ஒரு காலத்தே மக்களோடு ஒன்று கலந்து வாழ்ந்தவரே யாதலின் அது கொள்ளப்படாது. மக்கள் ஒருங்கு கூடி வாழ்ந்தா லன்றிப் பொருளுணர்ச்சியும் அறிவு வளர்ச்சியும் உண்டாக மாட்டா என்பது திண்ணம். இத்தகைய இயல்பு வாய்ந்த மக்கள் தமது உணர்ச்சிகளையும் எண்ணங்களையும் பிறர்க்கெடுத்துக் காட்டுவதில் விருப்பம் உடையவராகின்றனர். ஒருவர் தமது கருத்தையோ அல்லது உணர்ச்சியையோ எடுத்துக் கூருராயின் அவருக்கு மகிழ்ச்சியும் இன்பமும் தோன்ரு. எனவே, தமது உணர்ச்சிகளையும் எண்ணங்களையும் பிறர்க்குப் புகட்டி, அவர் அவற்றை அறியும் பொழுது தம்மைப்போலவே உணர்தலும் எண்ணுதலும் செய்து மகிழ்வதைக் காணுதலினும் சிறந்த இன்பம் வேறொன்று மில்லை. இதனைத் தாயுமான சுவாமிகளும்,

'அழுதழுது பேய்போற் கருத்திலெழு கின்றதெல்லாம்
என்ன தறியாமை யறிவென்னு மிருபகுதியாலீட்டு தமிழென்
றமிழினுக்கு,
இன்னல்பகரா துலக மாராமை மேலிட்டிருத்தலா லித்தமிழையே
சொன்னவன் யாவனவன் முத்திசித்திக ளெலாந் தோய்ந்த
நெறியே படித்தீர்
சொல்லுமென அவர்நீங்கள் சொன்ன வகையிற் சிறிது
தோய்ந்த குண சாந்த னெனவே
மின்னல் பெறவே சொல்ல அச்சொல் கேட்டடிமை
மனம் விகசிப்ப தெந்த நாளோ'

என்று திருவாய் மலர்ந்தருளிய தூஉம் காண்க.

ஆதலினாலேயே, ஒவ்வொருவரும் தமதுள்ளத்தைப் பிறர்க்கு வெளிப்படுத்தி வருதலை நாம் கண்கூடாகக் காண்கின்றோம். இவ்வாறே எல்லாம் வல்ல முழுமுதற் பொருளும் தன்னைத் தானே ஞாயிறு, திங்கள் முதலிய கோள்களானும் உலகத்தேயுள்ள பொருள்கள் பிறவற்றானும் வெளிப்படுத்து வருகின்றதென அறிவு நூல்களும் முழங்கும். அன்றியும் அவ்விறைவன் தான் அருளையே தனக்குத் திருமேனியாகக் கொண்டு உண்மை நூல்களையும் உணர்த்துவன் என்றும் அவை மொழியும் என்க. இக்கருத்தே பற்றிச் சைவசித்தாந்த துவிதீய ஆசிரியராகிய அருணந்தி சிவாசாரிய சுவாமிகள்,

'ஆரண மாக மங்க ளருளினா லுருவு கொண்டு
காரண னருளா னாகிற் கதிப்பவ ரில்லை யாகும்
நாரணன் முதலா யுள்ள சுரர் நரர் நாகர்க் கெல்லாஞ்
சீரணி குருசந் தானச் செய்தியுஞ் சென்றி டாவே.'

என்று அருளிச் செய்வாராயினர்.

இதனானே மக்கள் தம்மை வெளிப்படுத்துதற்கு விரும்பும் விழைவு மிகுதி இலக்கியத் தோற்றத்திற்கு ஒரு காரணம் என்பது பெறப்பட்டது.

இனி, மக்கள் தமது கருத்துக்களை வெளிப்படுத்துதலோடு பிறர் எண்ணங்களையும் உணர்ச்சிகளையும் அறிந்து கொள்வதில் விருப்புடையவராகவும் அவர் வாழ்க்கையிலே நிகழ்வனவற்றை நோக்கி இன்புறுதலும் துன்புறுதலும் காணப்படுதலின் அவர்க்குத் தம்மை யொழிந்த பிறரிடத்துள்ள பற்றும் புலப்படும். இப் பற்றுக்கோடு காரணமாகவே காதைகள், வரலாறுகள் முதலியவற்றைக் கூறும் இலக்கியங்கள் தோன்றும் என்பது ' முத்தமிழ்ப் புலமையும் வித்தகக் கல்வியும் வல்ல ' இளங்கோவடிகள் கண்ணகி வரலாற்றைக் குன்றக் குறவர் கூறக் கேட்ட துணையானே அக் கற்பரசியின் நிலைமையை நினைந்து, நெஞ்சம் குழைந்துருகி, அவர் தம் வாழ்க்கையினால் அறிந்து கொள்ளத் தக்க பொருள்களை மூன்று கூறாக வகுத்து எடுத்துக் கொண்டு உலகுக்குப் பயன்படுமாறு ஒரு நூலியற்றுவல் என்றெண்ணி,

> ' அரசியல் பிழைத்தோர்க் கறங்கூற் றாவதூஉம்
> உரைசால் பத்தினிக் குயர்ந்தோ ரேத்தலும்
> ஊழ்வினை யுருத்துவந் தூட்டு மென்பதூஉம்
> சூழ்வினைச் சிலம்பு காரண மாகச்
> சிலப்பதி கார மென்னும் பெயரால்
> நாட்டுது மியாமோர் பாட்டுடைச் செய்யுள் '

என்று மொழிந்தருளியதை நோக்கும்போது அவர்க்குப் பிற மக்களிடத்துள்ள அன்பு இன்னதெனப் புலப்படும். அதுவே சிலப்பதிகாரம் என்னும் நூலாக வெளிப்பட்டது காண்க. இங்ஙனமே மக்களிடத்தே இருக்கும் பற்றே காரணமாகவும்

இலக்கியங்கள் எழும் என்க. பற்றொன்றே உயர்ந்த நிலையில் அன்பென்றும் மிக வுயர்ந்த நிலையில் அருள் என்றும் பெயர்பெறும் என்பது கண்டு கொள்க.

இனி, மக்கள் தாம் வாழும் இந்நிலவுலகத்தே யுள்ள பொருள்களில் தமக்குக் குறையாகக் காணப்படுவனவற்றை எண்ணி யெண்ணி வருந்தி, இக் குறைபாடுகள் அனைத்தும் நீங்கியிருக்கும் உயர்ந்த நிலைகளை நினைத்துக்கொண்டு இன்புறுதலைக் காண்கின்றோம். அங்ஙனம் மேன்மேலும் நினைத்தலினால் அவர் மனம் தாழ்ந்த நிலையி னின்றும் விலகி மேனோக்கிச் செல்லும்; செல்லவே அறிவும் அன்பும் ஓங்க இன்புறுவர். இவ்வின்பத்தைப் பிறரும் எய்துவான் நூலியற்றுவாராதலின் மனோபாவனையானும் இலக்கியங்கள் தோன்றும் என்பது உணரப்படும். இதனானன்றே 'இல்லது, இனியது, நல்லது, புனைந்துரை' எனப் புலவரான் காட்டப்பட்ட ஒழுக்கம் நான்கு எனப் பிறரும் கூறுவாராயினார் என்க. இது பற்றியே 'யான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்' என்றருளிச் செய்தார் தவச்சக்கிரவர்த்தியாகிய திருமூலநாயனாரும்.

இனி, நமக்கு இயற்கையாகவுள்ள மற்றொரு தன்மையும் உற்று நோக்கப்படும். அஃதாவது நமக்கு ஒழுங்கு, வரையறை, அழகு, பயன் முதலியவற்றிலுள்ள இன்ப உணர்ச்சியே யாம். இவ் வுணர்ச்சி காரணமாக இலக்கியங்கள் செய்யுள் வடிவமாகவே முதன் முதல் எங்குந் தோன்றின; எதுகை, மோனை முதலிய நயங்களாலும் ஓசையினிமை, சொற்செறிவு, பொருளமைதி முதலியவற்றாலுஞ் சிறந்திருப்பன அவையே யாதலின் என்க. நாம் கண்டும் கேட்டும் நுகர்ந்தும் உள்ள பொருள்களைப் பிறர்க் குணர்த்துங்கால் நமக்குப் பிறந்த இன்ப உணர்ச்சியைப் பிறருள்ளத்

தும் பிறப்பிக்க வேண்டு மாயின், சிலபல வழிகளைக் கைக் கொள்ள வேண்டுவது இன்றியமையாத தாகும். அவ்வழிக ளுள் பல யாப்பியல், அணியியல் முதலியவற்றால் நமக்கு விளங்குகின்றன. அவை பண்டைச் சான்றோர் கைப்பற் றிய திறங்களை நன்குணர்ந்து நமக்கு எடுத்திசைக்கின்றன வன்றி வேறல்ல. ஆகவே, சொல்வடிவம், பொருளமைப்பு, ஓசை யொழுக்கு முதலியன அமைந்திருத்தல் இலக்கியங்க ளுக்கு இன்றியமையாத பண்பாகும் என்பதும் துணியப் படும். இவற்றில் மக்களுக்குள்ள இன்ப வுணர்ச்சி காரண மாகவும் இலக்கியங்கள் உதிக்கும் என்பதும் அறியப்படும்.

இவ்வாறெல்லாம் இலக்கியங்கள் தோன்றும் என்பது தெளியப்பட்டமையான் அவை தோன்று முறை பற்றியே அவற்றின் பாகுபாடும் கொள்ளப்படும். முதன்முதற் கூறிய காரணமே பற்றி அகப்பொருள் புறப்பொருளைப் பற்றிய செய்யுட்கள் தோன்றின. இரண்டாவது கூறிய காரணம் பற்றியே சிலப்பதிகாரம், சீவகசிந்தாமணி, மணிமேகலை, பெரிய புராணம், முதலிய காதை நூல்கள் வெளிப்பட்டன. மூன்றாவது கூறிய காரணம் பற்றியே கோவை, கலம்பகம் போன்ற புனைந்துரை நூல்கள் எழுந்தன. நான்காவது கூறிய காரணம் இவை அனைத்திற்கும் பொது. அஃது எல்லா வற்றினும் பரவியிருப்பது. ஆதலின் அதனைப் பற்றி எடுத் துக் கூறவேண்டுவ தில்லை. எங்ஙனம் வாழ்க்கையில் பல தன் மைகள் கலந்து கிடக்குமோ அங்ஙனமே இலக்கியங்களினும் இத்தன்மைகள் பலவும் கலந்து கிடக்கும் என்ப துணர்க. இப்பகுதிகளை அறிந்து இலக்கியங்களைக் கற்பதனால் மிகுதி யும் பயன் விளையும் என்னும் கருத்துப்பற்றியே இக்கட்டுரை எழுதப்பட்டது.

# 15. நூலாராய்ச்சி

நூலாராய்ச்சி என்பது இன்றியமையாது வேண்டப்படும் ஓர் அரும்பெருந் தொழிற் றிறனும். நூலின் அருமை பெருமையை உணர்வதற்கும், அதன் உண்மை மதிப்பினைத் தெளிதற்கும் ஆராய்ச்சி ஓர் உரைகல்போல் உதவும். நூலியற்றிய புலவனது செந்நாச் செழுமையினையும் நுண்மதித் திறத்தினையும் உணர்ச்சி வகையினையும் ஆராய்ச்சி, பளிங்கென விளங்கக் காட்டும். ஆராய்ச்சி யின்றி நூல் கற்பவனைக் காட்டினும் ஆராய்ச்சியோடு கற்பவன் எவ்வாற்றானுஞ் சிறந்தவனாவான். அவனே எடுத்துக் கொண்ட நூலின் கண்ணே குணந் தோன்றினும் அன்றிக் குற்றமே தோன்றினும் பேரின்பந் துய்க்கற்பாலன். ஆராய்ச்சி யின்றி நூல் கற்பவன் எய்தும் இன்பம் சாலவுஞ் சிறியது. அவன் அறிவும் உணர்ச்சியும் விரிதலின்றிச் சுருங்கிக் கிடக்கும். எங்ஙனம் விலையுயர்ந்த ஒரு மணியின் நீரோட்ட முதலிய குணங்கள் மணித் தேர்ச்சியில் வல்லானொருவனுக்கே இனிது புலப்பட்டு, ஏனையோர்க்கு ஒளிமாத்திரையே அறியக் கிடக்குமோ அங்ஙனமே நூலின் இயல்பு ஆராய்ச்சியில்லார்க்குப் பொதுவாகப் புலப்பட்டு அதனை யுடையார்க்குச் சிறப்புவகையால் உணரப்படு மென்க. மணியின் மதிப்பை அறுதியிட் டுரைத்தற்கு அதனைப் பற்றிய அறிவு இன்றியமையா ததாதல் போல நூலாராய்ச்சி செய்தற்கு அந்நூலைப் பற்றிய அறிவு இன்றியமையாதது. சிலப்பதிகார மென்னும் பொருட்டொடர் நிலைச் செய்யுளை ஆராயப் புகுவோன் தமிழ்ப்புலமை சான்றவனாக விருத்தல் வேண்டும். அத்தகைய புலமை வாய்ப்பப் பெறுதான் அந்நூலை ஆய்தற்கு உரியவ னல்லன். புலவர் பெருமையினைப் புலவரே

யறிய வல்லார். பொது மக்கள் அவர் புலத்தின் நுண்மையினையும் திண்மையினையும் நன்கு தெரிதற்குரிய ஆற்றலுடையா ரல்லர். இக் கருத்தே பற்றிப் பழமொழி நூலாசிரியராகிய முன்றுறையரையனார் என்னும் புலவர் பெருமகன்,

'புலமிக் கவரைப் புலமை தெரிதல்
புலமிக் கவர்க்கே புலனாம்—நலமிக்க
பூம்புன லூர பொதுமக்கட் காகாதே
பாம்பறியும் பாம்பின கால்'

என்றிசைப்பா ராயினர்.

இக்காலத்துச் சிலர் ஆராய்ச்சி யென்பது குறை ஒன்றையே எடுத்துக் காட்டுவது எனப் பிறழ உணர்ந்து, ஆராய்ச்சி யென்னுஞ் சொற்கேட்ட துணையானே வெறுக்கத் தொடங்குவர். மற்றுஞ் சிலர் ஒருநூலை யாராயத் தொடங்குவோன் அந்நூலாசிரியரினும் மேம்பட்ட புலமையும் நுண்மையும் அறிவாற்றலும் பொருந்தியவனாதல் வேண்டுமெனக் கூறி விடுப்பர். இனிச் சிலர் ஆராய்ச்சியால் விளையும் பயன் யாது மில்லை யென மொழிவர். இனி, மற்றொரு சாரார் தமிழ்மறையெனப் போற்றப்படும் திருக்குறள், திருமுறை, முதலிய அருள்நூல்கள் ஒருவாற்றானும் ஆயப்படுவனவல்ல வென்ப. பிறிதொரு சாரார் நம் முன்னோர் மொழிந்தவை யாவும் பொன்னே போற் போற்றத்தக்கன வன்றித் தூக்கி ஆராயற்பாலனவன்றென்ப. இன்னோர் கூற்றுக்களை நிரலே யெடுத்தாராய்வாம்.

ஆராய்ச்சி, குற்றமே கூறுவ தென்பது தவறு. அது முன்னர்க் குறித்தவாறு குணம், குற்றம் முதலிய எல்லாவற்றையும் ஆராய்ந் துரைப்பதேயாம். குற்றமே கூறுவதாயின் அஃதோர் மறுப்பு நூலாக முடியுமே யன்றி ஆராய்ச்சி

நூலாக மாட்டாது. அல்லதூஉம் குற்றம் நிறைந்து குணம் குறைந்து காணப்படும் நூல் ஆராய்ச்சிக்கு உரித்தாவது மன்று. மேலும், அது நூலாதலு மில்லை யென்க.

ஆராய்ச்சிக்கு முன்னர்க் காட்டிய வண்ணம் புலமைப் பரப்பும், அறிவுத் திண்மையும், ஒண்மையும் இன்றியமை யாது வேண்டப்படுமேனும், நூலாசிரியர் எத்துணைப்புல மையும் அறிவு வளமையும் உடையரோ அத்துணையும் ஆராய்ச்சி யாளர்க்கு வேண்டுமென்னுங் கட்டளை யில்லை. அங்ஙனம் அமைவதும் இயலாத தொன்று. நூலாசிரியர் ஒருவர் நலத்தினையாதல், குறையினையாதல், குற்றத்தினையா தல் ஆய்வோன் எடுத்துரைப்பானாயின், அவ்வேதுவான் அவன் ஆசிரியனினும் சிறந்தோனென்பது எய்தாது. அன் றியும் இயற்றுதல் என்பது ஓர் ஆற்றல்; ஆராய்தல் என்பது வேறோராற்றல். இவை தனித்தனி குணங்க ளாதலின் ஒருங்கே யமைதலும் அருமை. இயற்றுதலிலே வல்லவர் சிலர்; ஆராய்தலில் வல்லார் சிலர். ஆதலின், ஆராய்ச்சி செய்வோர்க்கு நூல் ஆக்கியோருக்கொப்ப ஆற்றல் இருத்தல் வேண்டுவதின்றென்பதும், அதுபற்றி ஆராய்ச்சியால் பய னில்லை என்பதும் பொருந்தாமை காண்க.

இனி, அருள்நூல்கள் ஆராயப்படா என்பார் கூற்றை நோக்குவோம். ஈண்டு ஆராய்ச்சி யின்னதென்பதைச் சிறிது தேர்ந்து தெளிதல் இன்றியமையாதது. ஒரு நூலை எடுத் துக் கற்கப் புகுவோன் அதன்கண் அமைந்துள்ள சொல் நயம் பொருள் நயங்களையும் ஓசை இனிமையையும் பிற வளங்களையும் உணர்ந்து உணர்ந்து, இன்பத்தில் தேக்கித் திளைப்பன். பின்னர் அவ்வுணர்ச்சி யாவும் அவனுள்ளத்தே பதிந்து பொதிந்து கிடக்கும். அவை அழுத்தம் மிக மிக வெளிப்பட முயலும். அங்ஙனம் வெளிப்பட்ட உணர்ச்சி

வடிவங்களே ஆராய்ச்சி நூல்களாம். ஆதலின், ஆராய்ச்சி இயற்கையாக நிகழும் ஒரு நிகழ்ச்சியேயாம் என்பது தெள்ளிதிற் புலப்படும். அன்றியும், அருள் நூல்களின் அருமை பெருமைகளை எடுத்துப் பாராட்டிப் பேசுவோர் பலர் உளராதலும் அவற்றைக் கேட்போர் கழிபேரின்பந் துய்த்தலும் கண்கூடாகக் காணக்கிடத்தலின், அவற்றை எழுதிவைத்த லினுல் மட்டும் போந்த இழுக்கென்னையோ வென்பது. ஆனுல் அருள் நூல்களை உலகானுபவம், கல்வியறிவு முதலிய வற்றையே கருவியாகக் கொண்டு ஆராய்தல் கூடாது என்பது உண்மையே. அவை சிவானுபவ முதிர்ச்சியுடையார் திருவாக்குக்களாதலின் அவற்றின் உண்மையை அறிதல் அருமை யென்பதும் உண்மையே. ஆயினும், அவற்றுள் காணப்படும் சிற்சில சொன்ஞேக்கு பொருள் நோக்குக்களை யும் பெரும்பான்மையோர் அறியலாகாத பொருட்டுறைகளை யும் எடுத்துக் கூறுவதால் வரக்கடவதோர் இழுக்கில்லை யென்க.

இனி, முன்ஞேர் மொழிந்த பொருளை அவ்வாறே கொள்ளவேண்டும் என்பது பொருந்தும். ஆயினும் அம் முன்ஞேரில் பலர் ஒரே பொருள் பற்றிப் பலவேறு கருத் துடையாராயின் அப்பொழுது வன்மை மென்மை நோக்கிப் பொருள் கோடல் இயல்பே யன்ரே. அன்றியும், முன் ஞேர் எல்லாரும் ஒரே முறையில் புலமை, அறிவு முதலியன வாய்ப்பப் பெற்றவரும் அல்லர். அவருள்ளும் வேற்றுமை பலவுள ; ஆதலின், அவர்க்குள்ளே காணப்படும் ஒற்றுமை வேற்றுமைகளை எடுத்து ஆராய்வதால், அறிவு பெருகி உவகை மீதூரு மன்றி அதனுல் விளையும் தீமை யாதும் இல்லை என்பது அறிக. மேனுட்டார் ஆராய்ச்சி நூல்கள் கடல்போலப் பரந்து அவர்கட்கு நனிபல நலன்களை அளித்

தலை நாம் நேரே காண்கின்றோ மாதலால், ஆராய்ச்சி வேண்டப்படுவதே என்பது கடைப்பிடிக்க.

இனி, ஆராய்வோர்க்கு அமையும் குணங்கள் நடுவு நிலைமை, பொறை, தன் பயன் கருதாமை, ஒத்துணர்வு (Sympathy) முதலியனவாம். நடுவு நிலைமையிலார் நூலாய்வாராயின் அதனால் விளையுந் தீமை மிகப் பலவாம். அவர் குலம், சமயம், நாடு முதலியவற்றில் பற்றுள்ளம் வைத்து அதன் காரணமாக எழுதுவன அனைத்தும் உண்மையாக மாட்டா என்பது தெளிக. ஒட்டக்கூத்தர் செங்குந்தராதலின் அவருக்குக் கம்பரைக் காட்டினும் ஏற்றமிகவேண்டுமென்னுங் கருத்தினராய்ப் புலவர் சிலர் இல்லது புனைந்து எழுதியவையும், பரஞ்சோதி முனிவர் சைவ வேளாளரும், பெரும்பற்றப் புலியூர் நம்பி அந்தணருமாதலின் அக்காரணம் பற்றிப் பரஞ்சோதி முனிவரைத் தாழ்த்தி நம்பியாரை உயர்த்திப் புலவர் கூறியவையும், ஒரு நாட்டிலே தோன்றிய புலவர்களை அந்நாட்டுப் புலவர் எழுதிய நூலகத்தே எவரினும் உயர்த்துக் கூறியவையும், வடமொழி தென்மொழி என்னும் பேதம் பற்றிச் சிலர் கூறியனவும் இவற்றிற்குத் தக்க சான்றுகளாம்.

பொறை இன்றேல் உழைப்புப் பற்றி வரும் ஆராய்ச்சியும் நூலைப் பல்காற் பயின்று தேறப்படுவனவும் ஒரு நூலைப் பல நூலோடு ஒப்பிட்டுப் பார்க்குந் திறனும் அமையாவாதலின் பொறை வேண்டப்படுமென்க. இனி, தம் பயனொன்றே கருதி நூலாராய்வோரும் உண்மை எடுத்துரைத்தலின்றித் தமக்கு வேண்டியவாறு நூலையும் நூற்பொருளையும் சிதைத்தும், வலிந்தும், நலிந்தும் பொருள் கொண்டு ஆராய்ச்சி எழுதுவாராதலின் நூல் ஆராய்வதற்கு அவரும் தகுதி யற்றவரே யாவர்.

ஒரு பொருளிலோ அல்லது ஓர் ஆசிரியனிடத்திலோ விருப்பாதல் வெறுப்பாதல் உடையவரும் ஆராய்ச்சிக்கு அருக ராகார். ஏனெனின் விருப்பம் நிகழுமிடத்தே குணம் தோன்றுமே யன்றிக் குற்றந் தோன்றாது. வெறுப்பு நிகழ்வதாயின் குற்றந் தோன்றுமே யன்றிக் குணந் தோன்ற மாட்டாது. ஆதலின் இத்தகையோர் ஆராய்ச்சியானும் விழுப்பயன் எய்த லில்லை. ஆராய்ச்சிக்குக் கட்டளைக் கல்லாகப் பின்வரும் மூன்று செய்யுட்களையும் அமைத்துக் கோடலாகும் :

எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினு மப்பொருள்
மெய்ப்பொருள் காண்ப தறிவு'

'எப்பொரு ளெத்தன்மைத் தாயினு மப்பொருள்
மெய்ப்பொருள் காண்ப தறிவு'

'காய்தல் உவத்தல் அகற்றி யொருபொருட்கண்
ஆய்தல் அறிவுடையார் கண்ணதே—காய்தலின்கண்
உற்ற குணந்தோன்றா தொழியும், உவத்தலின்கண்
குற்றமுந் தோன்றாக கெடும்.'

பழமை பாராட்டிப் புதுமை விரும்பாதார்க்கும் ஒருவர் புகழப் புகழ்ந்து இகழ இகழும் சமக்கென ஒன்றிலார்க்கும் கீழ்போதரும் உமாபதி சிவனார் திருவாக்கு நல்லறிவுச் சுடர் கொளுத்து மென்க.

'தொன்மையவா மெனினு மெவையு நன்றாகா வின்று
தோன்றியநூ லெனுமெவையுந் தீதாகா துணிந்த
நன்மையினார் நலங்கொண்மணி பொதியு மதன்களங்க
நவையாகா தெனவுண்மை நயந்திடுவர் நடுவாந்
தன்மையினார் பழமையழ காராய்ந்து தரிப்பர்
தவறுநலம் பொருளின்கட் சார்வாராய்ந் தறித

வின்மையினோர் பலர்புகழி லேத்துவரே திலருற்
றிகழ்ந்தனரே லிகழ்ந்திடுவர் தமக்கெனவொன் றிலரே.

இனி, ஒத்துணர்வு நூலாய்வோர்க்கு எத்துணை இன்றி யமையாத தென்பது கருதப்படும். ஒரு நூலை ஆயப்புகுங்கால் அந்நூலாசிரியர் கருத்து இற்றெனவறிந்து அவர் வாழ்க்கை நிலை, அவர் இருந்த காலத்தின் நிலை முதலிய பலவற்றையும் ஒருங்கு வைத்து, அவர் கருத்து நூலிலே புலப்படுமாறு உணர்ந்தாலன்றி அதன் அழகினையும் நன்மையினையும் ஓர்தல் இயலாது. அவ்வவ் வாசிரியர் நோக்கு நிலையினின்று-நோக்குதலே சீரிய குணமாகும். ஒருவருக்குச் சொல் வளமையிலேயே உளம் படிந்து நிற்கும். மற்றொருவருக்குப் பொருட் பேற்றிலேயே மனம் உறைத்து நிற்கும். வேறொருவருக்கு மடக்கு, யமகம் முதலிய சொல்லணியிலே சுவை பெருகும். பிறிதொருவருக்குப் பொருளணியிலே இன்பம் பொழியும். இவையாவும் ஓராசிரியரிடத்தே விளக்கமுற்றுத் தோன்றல் அருமையே. ஆதலின் ஆராய்ச்சியாளர் இவற்றிலே ஒன்றைத் தம் நெஞ்சத்தே கொண்டு நூலின் ஏனை நலங்களைப் பாராட்டாது விடுவரேல் அந் நூலின் மதிப்பு நன்கனம் புலப்படா தொழியும் என்க. எடுத்தவற்றிற் கெல்லாம் குறை கூறுவதையே முதல் நோக்கமாகக் கொள்ளுதலும் ஆராய்ச்சி செய்வார்க்குக் கூடாது. எத்தகைய நூலேனும் அதன்கண் ணுள்ள நலனை யறிந்து இன்புறுதல் வேண்டும். அதனை யெடுத்துப் பாராட்டிச் சொல்லுதல் வேண்டும். இறைவன் படைப்பி லமைந்துள்ள ஒவ்வொரு பொருளினும் உற்று நோக்குவோர்க்கு ஓர் இன்ப உணர்ச்சி யெழுதல்போல ஆராய்வோர்க்கு எவற்றினும் ஒவ்வோர் அழகு தோன்றும். தேமாங் குயிலின் தீங்குரலின் சுவையைப் போன்றே கருங் காகத்தின் ஓசையினும் ஒரு மகிழ்வை எய்துவர் அறிஞர்.

செழுவிய மரங்க ளடர்ந்து, கொழுவிய மலர்கள் அலர்ந்து நறுமணங் கமழும் வளங்கெழு சோலையைக் கண்டு துய்க்கும் கழி பேரின்பத்தை மரஞ் செடி கொடி முதலிய யாவுமின்றித் தோன்றும் வெறும் வெளியிலேயும் எய்துவர் அறிவுப் பெருஞ் செல்வர். ஆதலின் உண்மை தேறப் புகும் நூலாய்வோன் பலபட ஆராய்ந்து நூற்பயனை உலகம் அறிய வைத்தல் வேண்டும்.

ஆராய்ச்சி பலப்பல வகையாகச் செய்யப்படு மாதலின் அதன் பாகுபாடும் பல திறப்படும். எடுத்துக் காட்டாகத் திருக்குறளை வைத்துக் கொள்வோம். திருக்குறளிற் கூறப்படும் அறம் மனுஸ்மிருதி, பராசரஸ்மிருதி, யாக்ஞவல்கியஸ்மிருதி முதலியவற்றோடு எவ்வாற்றான் ஒற்றுமை யுடைத்து எவ்வாற்றான் வேற்றுமையுடைத்து என்று மட்டும் ஆராய்ந்தறிதல் ஒருவகைப்பட்ட ஆராய்ச்சி. அதன் பொருட் பகுதியில் என்றும் உள்ளத்தில் நின்று நிலவும் உண்மைகள் எவை? எந்நாட்டார்க்கும் ஒப்ப முடியும் உறுதிகள் யாவை? எங்ஙனம் அஃது உலகத்துக்கே உவந்த மறை யாகும் எனக் கொழித் தறிதல் ஒரு வகைப்பட்ட ஆராய்ச்சி. இங்ஙனமே சரித்திர உண்மைகளை மட்டும் அறிதலும், பழந்தமிழ்ப் பழக்க வொழுக்கங்களை யுணர்தலும் வள்ளுவனார் பாவன்மை, சொல்நயம் முதலியன தெரிதலும் பிறவும் ஆராய்ச்சித் துறைகளாம். இவ்வாறெல்லாம் ஆராய்வதால் அறிவு அகன்று உணர்ச்சி விரிந்து உள்ளத்தே இன்பம் ததும்பும். இத்தகைய ஆராய்ச்சி நூல்கள் சாலப் பல கற்று வல்ல நன்மக்கள் எழுதி வெளியிடற்குத் தமிழ் நாட்டுச் செல்வர் உதவுதல் வேண்டும். இத்தகைய கலையாய அறத்தில் திருவுறை செல்வர் திவான் பஹதூர் பெத்தாச்சி செட்டியாரவர்கள் நிலை நிற்ற

லைக் கண்டு நமது நெஞ்சம் உவகையில் விஞ்சுகின்றது. ஆராய்ச்சி நூல்களால் தமிழில் உரை நூல்களும் பல்கும். உரை நடையும் சிறிது காலத்திற்குள் செவ்வி சிறந்து திருந் தும். கல்வியிலே எவருக்கும் ஒரு சுவையும் பிறக்கும். ஆதலின் ஆராய்ச்சி நூல்கள் மிகப்பல தோன்றுதல் வேண்டுமெனத் தலைச் சங்கமிருந்து தமிழாராய்ந்த முதற்பெருங் கடவுள் முழுதருளைக் கனிவு தோன்ற நினைந்து, தணிவு தோன்ற வாழ்த்திப் பணிவுதோன்ற வணங்குவோமாக.

## 16. சமயம்

இந்நில உலகத்தில் வாழும் மக்கள் அறிவு, உணர்ச்சி, சுவை முதலியவற்றால் வெவ்வேறு தன்மையுடையவராகவும் பக்குவமுடையவராகவும் காணப்படுதல் நாம் அநுபவமாகக் கண்ட உண்மை. இத் திறத்தினர்க்கு ஏற்றவாறு பலவேறு காலங்களில் பலப்பல சமயங்கள் தோன்றியிருக்கின்றன. ஒவ்வோர் சமயமும் ஒவ்வோராற்றான் உலகம், உயிர், கடவுள் என்னும் பொருள்களை விளக்குவனவே யாகும். தத்துவ ஆராய்ச்சி செய்து, உண்மையை யறியும் பகுதியில் எல்லாச் சமயங்களும் ஒரே வழியைக் கடைப்பிடித்துச் செல்வனவாயினும் பொருள்களைக் கூறுந் துறையில் அவை பெரிதும் பேத முடையன. ஆதலின், ஒரு சமயம் கூறும் வழி மற்றொரு சமயம் கூறாது. கொள்கைகளிலே ஒன்றற்கொன்று முரண்பாடுகள் பல காணப்படும். இது பற்றியே சிவானுபூதிப் பெருஞ் செல்வராய தாயுமான சுவாமிகள்,

> ‘பேதித்த சமயமோ ஒன்று சொன்னபடி ஒன்று
> பேசாது’ என்றும்,

'பூதலய மாகின்ற மாயைமுத லென்பர்சிலர்,
பொறிபுல னடங்குமிடமே
பொருளென்பர் சிலர், கரண முடிவென்பர் சிலர், குணம்
போனவிட மென்பர் சிலபேர்,
நாதவடி வென்பர் சிலர், விந்துமய மென்பர் சிலர்,
நட்டநடு வேயிருந்த
நாமென்பர் சிலர், உருவ மாமென்பர் சிலர் கருதி
நாடிலரு வென்பர் சிலபேர்,
பேதமற வுயிர்கெட்ட நிலயமென் றிடுவர் சிலர்,
பேசினரு ளென்பர் சிலபேர்,
பின்னுமுன் னுங்கெட்ட சூனியம தென்பர் சிலர்,
பிறவுமே மொழிவர்; இவ்வயாற்
பாதரச மாய்மனது சஞ்சலப் படுமலாற்
பரம்சுக நிட்டை பெறுமோ?
பார்க்குமிட மெங்குமொரு நீக்கமற நிறைகின்ற
பரிபூர ணானந் தமே.'

என்றும் அருளிச் செய்வாராயினர்.

எனினும் சமயங்கள் யாவும் அருட்பெருங் கடலாகிய தனிமுதற் கடவுளால் ஆன்மாக்களின் பக்குவத்திற் கேற்ற படி ஏற்பட்டன வென்பதே அறிஞர் துணிபு. இதனை,

'வேறுபடுஞ் சமயமெல்லாம் புகுந்து பார்க்கின்
விளங்குபரம் பொருளேநின் விளையாட் டல்லால்
மாறுபடுங் கருத்தில்லை முடிவின் மோன
வாரிதியின் நதித்திரள்போல் வயங்கிற் றம்மா.' என்றும்,

'ஆறுசம யங்கடொறும் வேறுவே றாகிவிளை
யாடுமுனை யாவ ரறிவார்.'

என்றும் அருளிச் செய்த தாயுமானவர் திருவாக்கானும், '-அறுவகைச் சமயத்தோர்க்கும் அவ்வவர் பொருளாய்'

என்றும், 'அறுசமயக் கூத்துமாடி' என்றும் வரும் பிற சான்றோர் திருவாக்குக்களாலும் அறிக.

ஒவ்வொரு சமயமும் தாம் தாங்கொண்ட கொள்கைகளே மெய்யென்றும், ஏனைச் சமயத்தார் கொள்கைகள் பொய் யென்றும், மற்றைச் சமயங்களையும் சமயக் கடவுளரையும், சமய நூல்களையும் இழித்துக் கூறும். அதனால், உண்மை விழையும் மக்கள் இன்னதுதான் பொருள் என்று துணிந்து கொள்ளுதல் கல்லில் நாருரிப்பது போலக் காணப் படுகின்றது.

ஆனால், எல்லாச் சமயங்களும் ஆன்மாக்களின் பக்குவத்திற் கேற்றவாறு முதல்வனாலும், அம் முதல்வன் அருள் வழிப்பட்ட ஆன்றோர்களாலும் தோன்றின வென்பது பொருந்தும். எனினும், முதிர்ந்த நிலையை எடுத்துக்காட்டும் சமயம் யாது? என்பதும் அறியற்பாற்று. எச் சமயம் எல்லாச் சமயங்களையும் ஒப்புக்கொண்டு, அச் சமயப் பொருள்களை யெல்லாம் தன்னகத்தே யடக்கிக் கொண்டிருக்குமோ அதுவே, முதன்மையான சமயமாம். அதுவே யாதொரு அடைமொழியு மின்றிச் சமயம் என்னும் பெயரானே அழைக்கப்படும் பெருஞ் சிறப்பிற்றும் என்னும் பேருண்மையைச் சிவஞான சித்தியாரின்கண் வரும்

'ஓதுசம யங்கள்பொரு ளுணரு நூல்க
ளொன்றோடொன் றொவ்வாம லுளபலவு மிவற்றுள்
யாதுசம யம்பொருணூல் யாதிங் கென்னின்
இதுவாகு மதுவல்ல தெனும்பிணக்க தின்றி
நீதியினா லிவையெல்லா மோரிடத்தே காண
நின்றதியா தொருசமய மதுசமயம் பொருணூ

லாதலினு னிவையெல்லா மருமறையா கமத்தே
யடங்கியிடு மவையிரண்டு மானடிக்கீ ழடங்கும்.'

என்னுந் திருவிருத்தத்தான் செவ்வனம் உணர்க.

இங்ஙனம், எல்லாச் சமயங்களின் இருப்பையும் ஒப்புக்கொண்டு, அவற்றிலுள்ள பொருள்களையெல்லாம் தனக்குள்ளே அடக்கிக்கொண் டிருக்கும் சமயம் சைவ சமயமேயாம். ஆதலின், 'சைவ சமயமே சமயம்' என்று சொல்லப்படும். இவ்வுண்மையைக் கடைப்பிடித்தே, தாயுமான சுவாமிகள் பல அரிய பாடல்களை அருளிச் செய்துள்ளார். அவரைப் போல இதனைத் தெளிவாக விளக்கிக் காட்டிய வித்தகர் ஒருவரு மிலர். சிவஞான சித்தியார் என்னும் அரிய பெரிய நூலிலே காணப்படும் உண்மைகள் பலவும் தாயுமானவர் திருப்பாடல்களில் விரித்து ஓதப்பட் டிருத்தலை யாவரும் காணலாம். அன்றியும், அவர் மற்றச் சமயங்கள் யாவும் சைவ சமயமாகிய உன்னத நிலையை அடைவதற்குரிய சோபான மார்க்கங்க ளென்றும் எடுத்துக் காட்டினர். அன்றியும், இவ்வழகிய உண்மையை நனி வியந்து பொங்கியெழுந்த பேருவகையிற் றிளைத்து, அவ் வருட்பெருஞ் செல்வர்,

'அந்தோ! ஈததிசயமிச் சமயம் போலின்
றறிஞரெல்லா நடுவறிய வணிமா வாதி
வந்தாடித் திரிபவர்க்கும் பேசா மோனம்
வைத்திருந்த மாதவர்க்கு மற்று மற்றும்
இந்த்ராதி போகநலம் பெற்ற பேர்க்கும்
இதுவன்றித் தாயகம்வே றில்லை யில்லை
சந்தான கற்பகம்போ லருளைக் காட்டத்
தக்கநெறி யிந்நெறியே தான்சன் மார்க்கம்.'

என்னும் திருப்பாட்டை யருளிச் செய்து அதனகண சைவ சமயமே யுண்மை மார்க்கமென்னும் பொருள்படச் சன் மார்க்க மென்றனர். அம்மட்டோ! அவர் சைவ சமயத்தை எல்லாச் சமயப்பொருள்களையும் உள்ளடக்கிக்கொண் டிருக் கும் சமய மென்பதனோ டமையாது, அஃது எல்லாவற்றிற் கும் மேற்பட்ட நுண்பொருளை யுடைய ஒப்பற்ற சமயம் என்பது தெளிந்து, 'சமயாதீத' மென்றும் 'சமயங் கடந்த மோன சமரசம்' என்றுந் திருவாய் மலர்ந்தருளுவா ராயினர்.

இதுகாறுங் கூறியவாற்றால் எல்லாச் சமயங்களும் இறைவனால் தோற்றுவிக்கப்பட்டன வென்பதும், அவை அவ்வப்பக்குவமுடைய ஆன்மாக்களால் சோபான முறை யாகக் கொள்ளப்படுவன வென்பதும், அவற்றிலே கூறப் படும் பொருள்கள் யாவும் சைவசமயத்தின் கண்ணே யடங் கிக் கிடக்கின்றன வென்பதும் சைவசமயம் அவ்வளவோ டமையாது மேற்சென்று பல அரிய வுண்மைகளை எடுத்து விளக்கி மகோன்னத நிலையிற் செலுத்துகின்ற தென்பதும் கொள்ளப்படும்.

இனி, சைவ சமயத்தில் எல்லாச் சமயப் பொருள்க ளும் அடங்கி நிற்குந் தன்மையையும், அஃது எவற்றினும் மேற்போந்து எடுத்துக் காட்டும் நுண்ணிய நிலையைக் குறித் தும் சிறிது ஆராய்வாம்.

முதற்கடவுளைப் பற்றிக் கூறுங்கால் வைணவ சமயம் தாம் கொண்ட முதற் கடவுளுக்கு இறப்புப் பிறப்புக்களைக் கூறுகின்றது. அன்றியும், அஃது அக்கடவுளுக்கு உயிர்க் குணங்களைக் கற்பிக்கின்றது. இது முதற்கடவுளுடைய இலக்கண மன்றென்பது யாவர்க்கும் வெளிப்படை. தத்

துவ முறையில் அச்சமயம் இருபத்துநான்கையே ஒப்புக் கொள்ளுகின்றது. சைவசமயமோ இருபத்துநான்கு தத்துவங்களுக்குமேல் பன்னிரண்டு தத்துவங்களைக் கொண்டு தத்துவங்கள் முப்பத்தாறெனக் கூறுகின்றது. இவ்விரண்டொரு காரணங்களினாலேயே சைவ சமயம் வைணவ சமயத்தின் பொருள்களை உள்ளடக்கிக் கொண்டிருத்தல் இனிது விளங்கும்.

இனி, சாங்கிய தத்துவம் முதலிய ஆறு தரிசனங்களும் கூறும் பொருள்களும் சைவசமயத்தில் அடங்கி யிருத்தலையும், சைவம் அவற்றிற்குமேல் வீறுதலையும் இரண்டொரு விஷயங்களில் காணலாம். சாங்கியர் உலகத்திற்கு முதற் காரணமாக மூலப்பகுதியைக் கொள்ளா நிற்ப, சைவ சித்தாந்திகள் மூலப் பகுதியின்மேலும் அசுத்தமாயை, சுத்த மாயை என்பனவற்றைக் கொள்ளுதலும், மீமாஞ்சகர் கருமத்தையே கொண்டு ஞானத்தை யிகழ்தலும் மாயாவாதிகள், ஞானத்தையே கொண்டு கன்மத்தை யிகழ்வதும் செய்யா நிற்ப, சைவ சித்தாந்திகள் கன்மம், ஞான மென்னு மிரண்டையுங் கொண்டு அவை தமக்கும் அவரினும் மேம்பட்டுத் திருவருளையும் இன்றியமையாத் துணையாகக் கொள்ளுதலுங் காண்க.

இனி, பௌத்தம் முதலிய புறப்புறச் சமயங்களையும் சிவாத்துவிதம் முதலிய அகச் சமயங்களையும் அவற்றின் பொருள்களையும் சைவத்தோ டொப்ப வைத்துக் கண்டு தெளிக. விரிப்பிற் பெருகும்.

சுருங்கச் சொல்லுமிடத்து, சைவ சமயத்தின் மாட்சி, அஃது எல்லாச் சமயங்களையு மேற்றுக் கொள்வதனாலும், அச் சமயப் பொருள்களை யெல்லாம் தன்னகத்தே கொண்

டிருத்தலினாலும், அச்சமயங்களுக் கெல்லாம் மேலாகச் சாலவு முயர்ந்த மிக நுண்ணிய அப்பாற்பட்ட நிலையை உணர்த்துவதனாலும், தனி முதற்பரம்பொருளின் இலக்கணத்தை வழுவின்றி ஒழுங்குற எடுத்துக் காட்டுவதனாலும் நன்கு தெளியப்படும். இவ்வாறன்றி, அபிமானங் காரணமாகச் சைவசமய மாட்சி சொல்லப்பட்டதன்றென்பதை நடுநிலையுடைய பேரறிஞர் உண்மை ஒன்றே காணும் உள்ளத்தராய், சைவசமய நூல்களைக் கற்பின், இக்கூறிய யாவும் மெய்ம்மையே யென்பது துணியப்பெறுவர் என்பதற்கு எட்டுணையும் ஐயமில்லை. பின்வரும் தாயுமானார் திருவாக்கு இக்கருத்துக்களை யெல்லாம் விளக்கும் வனப்பு எம் உள்ளத்தை வீற்றிருக்கையாகக் கொள்ளுதலின் அதனை ஈண்டெடுத்துக் காட்ட விழைகின்றேம்.

‘இயல்பென்றுந் திரியாம.லியம மாதி
யெண்குணமுங் காட்டியன்பா லின்ப மாகிப்
பயனருளப் பொருள்கள்பரி வார மாகிப்
பண்புறவுஞ் சௌபான பக்ஷங் காட்டி
மயலறுமந் திரஞ்சிக்ஷை சோதி டாதி
மற்றங்க நூல்வணங்க மௌன மோலி
அயர்வறச்சென் னியில்வைத்து ராசாங் கத்தி
லமர்ந்தது வைதிகசைவ மழகி தந்தோ.’

# 17. கம்ப சித்திரம்

கம்பர் செந்தமிழ்ப் பெரும் புலவருள் ஒருவர்; இராமாயணம் என்னும் பாரகாவியத்தை இயற்றிய செந்நாப் புலவர்; எஃகு செவியர்; நுணுகிப் பார்த்த மதிவீறுடையர். அவர் கவி நலங்களை உற்றுணர்ந்த சான்றோர் அவற்றைச் 'சூத்திரம்' என்றும் 'சித்திரம்' என்றும் மிகுத்துரைப்பாராயினர். சூத்திரம் என்னுஞ் சொல் பாட்டின் நுட்ப திட்பங்களைத் தெரிக்கச் சித்திரம் அதன் அழகு அணிகளை விளக்குவதாகும். இத்தகைய பெரும்புலவர் பலர் நம் செந்தமிழ் நாட்டிலே தோன்றி இயற்கையாகப் பாடுந் திரு வாய்ப்பப் பெற்று ஆரமுதெனச் சுவைக்கும் நூல்களை இயற்றிவைத்தும், நம்மனோருள் பலர் அவற்றைக் கற்று உறுபயன் கொள்ளாது கொன்னே காலங் கழிக்கின்றனர். மேனாட்டார் தம் நாட்டுப் புலவரைப் பற்றிப் பல்லாற்றானும் ஆராய்ந்து அறிந்தும், அவர் எழுதிய நூல்களிலுள்ள பொருட்டுறைகளைப் பாகுபடுத்து உணர்ந்தும், அவ்வவர் கருத்துக்களின் உயர்வையும் பொலிவையும் பாராட்டி ஆயிரக் கணக்கான பனுவல்களை வரைந்தும் போற்றுகின்றனர். நமது செந்தமிழ் நூல்களோ எடுப்பார் அணைப்பார் இல்லாக் குழவிகளாய்ச் சீராட்டுஞ் செருக்கு மின்றி ஒரு மூலையிலே முடங்கிக் கிடக்கின்றன. இன்று புதிது புதிதாக நாகரிக மிக்க மக்களால் குறித்துச் சிறப்பிக்கப்பெறும் பொருள்களும் பண்டைக் காலத்துத் தண்டமிழ்ப் பாக்களிலே இன்று சொல்லப்படும் கவிகளிலும் பான்மையிற் சிறந்து, ஊறும் அழகும் இனிமையும் மிகச் சொல்லப்பட்டிருத்தலைக் காணும் நடுநிலையுடையார் தலை

சாய்த்தல் உண்மை. இதனை ஓர் எடுத்துக் காட்டான் இனிது விளக்குவாம். பிரௌனிங் (Browning) என்னும் ஆங்கிலப் புலவர் ஒருவர் தமது நூலின்கண் ஓர் உயர்ந்த உண்மையினைப் புகட்டினாரென்றும் அஃது நனிபெரிதும் பாராட்டற்பாலதென்றும் பலபடப் பாராட்டி ஆங்கிலப்பனுவலாசிரியர்கள் பாரித்தெழுதியுள்ளார். அவ்வுண்மை யாதெனின், ஒருவருடைய பெருமையினை அவர் செய்த செயலானன்றிக் கருத்து நோக்கத்தால் உணரவேண்டும் என்பதேயாம். அஃதாவது பெரியோர் பெரியவற்றைக் குறிக்கொண்டு அவற்றிலே முயன்று முடியாது வீடுப்பினும் விடுப்பர்; சிறியோர் சிறியவற்றிலேயே குறிவைத்து அவற்றை முடிப்பதுஞ் செய்வர். அதனால் முடிவு ஒன்றையே கருதிச் சிறியோரைப் பெரியோராகவும் பெரியோரைச் சிறியோராகவும் கருதுதல் கூடாதென்பதாம். இது மிக அழகிய கருத்தென்பது உண்மையே. இத்தகைய நுண்கருத்தை ஆங்கில மக்களுள் ஒருவர் அண்மைக் காலத்தே புதுமையாகக் கண்டுபிடித்திருப்ப, எம் செந்தமிழ் நன்மக்களுள் பலர் ஏறக்குறைய இரண்டாயிரம் ஆண்டுகட்கு முன்னரே அதனை எழிலுற உதாரணத்துடன் விளக்கியிருப்பாராயின் யாம் எத்துணை ஏமாப்புறுதல் வேண்டுமென்பது எடுத்தியம்பற் பாலதோ? இக்கருத்துத் தமிழ் மறையாம் திருக்குறளில்,

> ‘கான முயல்எய்த அம்பினில் யானை
> பிழைத்தவேல் ஏந்தல் இனிது.’

என்றும், வேளாண் மறையாகிய நாலடியாரின்கண்,

> ‘இசையும் எனினும் இசையா தெனினும்
> வசைதீர எண்ணுவர் சான்றோர்—விசையின்

நரிமா உளங்கிழித்த அம்பினிற் றீதோ
அரிமாப் பிழைப்பெய்த கோல்.'

என்றும் காணப்படுகின்றன. இவற்றின் நுணுக்கத்தை நுனித்தறிந்து அறிஞர் களிதுளும்புவாராக. மற்றொன்று ஆசைபற்றி விரித்தாமாதலின் புலவர் பொறுக்கக் கடவர்.

இதனால் நாம் நமது நூல்களை எத்துணைப் பாராட்டிக் கற்கவேண்டுமோ அத்துணைக் கற்கவேண்டும் என்பது புலப்படவில்லையா? பாவன்மையில் தமிழ்த் திருமக்கள் எம்மொழியினருக்கும் என்றும் இளையர்தவர் என்பது உறுதியே. தமிழ்ப் புலமை சான்ற சங்கப் புலவர்களை மட்டும் எடுத்துக்கொண்டு அவர் தம் எண்ணைமட்டுங் கருதினும் எந்நாட்டுப் புலவரும் இவருக் கிணையாகார் என்பதும் திண்ணமே. செந்தமிழ் வளங்கெழுமுங் காப்பியங்களாகிய சிந்தாமணி, இராமாயணம் முதலியவற்றையும் திருக்குறள் முதலியவற்றையுங் கல்லாதாரைக் குறித்துப் பண்டைச் சான்றோர் ஒருவர் கூறிய,

'திருத்தகு மாமுனிசிந் தாமணி கம்பர்
விருத்தக் கவித்திறமும் வேண்டேம்—உருத்தக்க
கொங்குவேள் மாக்கதையைக் கேளேங் குறளொன்றுகேம்
எங்கெழிலென் ஞாயி றெமக்கு.'

என்னும் அரும் பாவை நோக்குக. இவற்றைக் கல்லாத மாந்தர் இயல்பும் ' இங்கிப்பரிசே எமக் கெங்கோன் நல்குதியேல் எங்கெழிலென் ஞாயிறெமக்கேலோ ரெம்பாவாய் ' என்றருளிச் செய்த மணிவாசகப் பெருமான் திருவாக்கால்

உணர்த்தப்படும் துறந்தார் இயல்பும் ஒன்றுகவே காணப்படு கின்றன. அஃதாவது உலகத்துக்கும் அவர்கட்கும் தொடர்பு ஏதும் இல்லை என்பதாம்.

இனி, மேலைச் செய்யுளிலே 'கம்பர் விருத்தக் கவித் திறமும் வேண்டேம்' என்ற தொடர் அவர் தம் பாவன்மை யின் பான்மையைச் செவ்வன் தெரித்தல் காண்க. இச்சிற் றுரையில் கம்பர் கவித்திறத்தைக் குறித்துத் தாலிபுலாக நயம்பற்றி இரண்டொரு செய்யுட்களைக் குறித்துக் காட்டு தும்.

பொருள், செயல் எண்ணம் முதலியவற்றுக்குப் பொருந்த நல்லிசைப் புலவர் பாக்கள் ஓசை யொழுக்குப் பெற்று நடக்கும். அவ்வாறுதலின், ஆங்கு ஓரின்பச் சுவை பிறக்கச் செவிக்கமுதாக அவை சிறப்புறுகின்றன. இத்த கைய ஓசையினை யூட்டுதல் எஃகு செவியாகிய நற்பெரும் புலவர் ஒரு சிலருக்கே வாய்த்த பேறும். சீவகசிந்தாமணி ஆசிரியராகிய திருத்தக்கதேவர் அச் செல்வத்துள் வறிஞரா கவே காணப்படுகின்றனர். பெரிய புராண ஆசிரியராகிய சேக்கிழார் அத்திருவிலே சக்கிரவர்த்திபோல் துலங்குகின் றூர். மணிமேகலை ஆசிரியராகிய சீத்தலைச் சாத்தனார் மிக ஆழ்ந்து தெளிந்த நுண்ணிய நிலையிலே கூர்ந்தறிவாருக் கன்றி ஏனையோருக்கு வேறுபாடுதோன்று நிலையில் வன்மை, மென்மை, நுண்மை முதலிய எல்லாப் பொருள்களையுந் தெரிக்கும் ஓசை நலம் நிரம்பி, அவ்வகைக் கலைத்துறையில் ஒரு தனி முதல்வராகக் காணப்படுகின்றூர். கம்பரும் ஓசை யைப் பொருட் கேற்ற பெற்றியில் நிறுத்தும் வளமையில் மிக உயர்ந்த அரச பதவியை அடைந்துள்ளார் என்பது

இராமாயணச் செய்யுட்களைத் தமிழறியாத வேற்றுமொழி மக்களிடம் செப்பினும் அவர் அவற்றைக் கேட்டு இன்புறுத லாலும் அறியப்படும்.

சூர்ப்பணகை இராமபிரான் மனத்தை எங்ஙனமேனுங் கவர்ந்து, அவர் காதலைப் பெறவேண்டுமென, எழி லெலாந் திரண்ட உருவுடையளாய் அவர் எதிரே தானுக் கெனத் தோன்றினாள். அத்தோன்றினவள் மனமோ காம மயக்கத்திலே படிந்திருத்தலின், அவள் தன் தோற்றம், பார்வை, சாயல், செயல், நடை, மென்மை, பொலிவு முதலியன வெல்லாம் ஒவ்வோர் அழகைப் புலப்படுத்தல் வேண்டுமென்னும் கருத்து, அவள் அழ கிய வடிவெல்லாந் திகழ வந்தாள் என்பதைக் கல்வியிற் பெரியார்,

'பஞ்சி யொளிர் விஞ்சுகுளிர் பல்லவ மனுங்கச்
செஞ் செவிய கஞ்சநிமிர் சீறடிய ளாகி
அஞ் சொலிள மஞ்ஞையென வன்னமென மின்னும்
வஞ்சி யென நஞ்சமென வஞ்சமகள் வந்தாள்.'

எனத் தலையாய எதுகைகளும் மோனைகளும் மெல்லின இடையின நெடில் வண்ணங்களும் வழி யெதுகைகளும் வழிந் தொழுக எடுத்த வடிவிற்கேற்ற இயற்கை நலனும் செயற்கை வினைத் திறனுந் திகழப் பாடியிருத்தலை ஒரு முறைக்குப் பன்முறை இடத்தின் நயமுணர்ந்து பாடிப் பாடிச் சுவைத்தல் வேண்டும். சுவை மிக்க வழி அச் சுவைப்பனவற்றை நாவைத் தட்டித் தட்டி உண்ணல் உலகிற் காண்டுமாகலின், அவ்வாறே சுவை யொழுகும்

இன்னிசைப் பாக்களைப் பன்முறைப் பாடிப்பாடி இன்பத்தை மேம்படுத்தல் வேண்டும்.

எத்தகைய கவிஞரேனும் உலகவியலுக்கு மாறுபடாது செய்யுள் இயற்றுதல் இன்றியமையாதது. அப்பொழுது தான் கவிக்கும் அவற்றைக் கற்போருக்கும் ஓரியைபு உண்டாம். அவ்வியைபு இருத்தலினாற்றான் சுவை பிறக்கின்றது. இன்றேல் படிப்பவருக்கு இன்பம் எவ்வாற்றானும் தோன்றுதல் இல்லை. இவ்வியல்பு எத்துணைக் கெத்துணை ஒருவரிடத்து சிறந்துளதோ அத்துணைக் கத்துணை அவர் மேன்மை அடைவர்; இஃதில்லாதார் செய்யுள், நம் கருத்தைக் கவர்தல் எஞ்ஞான்றும் இல்லை. ஆகாயப்பூ நாறிற்றென்றவழி அதனைச் சூடக் கருதுவாரும் அதனால் மனவெழுச்சி தோன்றப் பெறுவாரும் யாண்டும் இலர். மக்கள் நுகர்ச்சி அறிவானே அறியப்பட்டு உணர்ச்சி யுலகத்திலே பொதிந்து கிடக்கும் பொருட்டுறைகளைச் சொல் வகை அறிந்து சொல்லி வெளிப்படுத்துபவனே நல்லிசைப் புலவன். இத்திறன் வெளியுலகப் பொருள்களின் நுகர்ச்சியைத் தனது அறிவாற்றலால் உள்ளவாறே கவர்ந்து கொள்ளும் வன்மை உடையாருக்கே அமைவதாம். இச்சீரிய ஆற்றலும் கம்பர் பெற்றிருந்தார் என்பதை இராமாயணத்திற் பல விடங்களிலும் காணலாம்.

இன்னும் நற்பெரும் பாவலர், தாம் எடுத்துக்கொண்ட பாத்திரங்களுக் குகந்தவாறு சொற்களையும் உவமைகளையும் புணர்த்தோதுவர். இத்தன்மை ஓர் அரிய வினைத்திறனும். இது திருத்தக்க தேவரிடத்துப் பெரிதும் அமைந்து கிடக்

கின்றது. தேவர் கோவிந்தையாரின் அழகை எடுத்துக் கூறுவாராகிய இடையர் கூற்றிலே அமைத்து,

'வெண்ணெய் போன்றாறினியள் மேம்பாற்போற் றீஞ்சொல்லள்
உண்ண வுருக்கிய ஆனெய்போல் மேனியள்
வண்ணவன முலை மாதர் மடநோக்கி
கண்ணுங் கருவிளம்போ திரண்டே கண்டாய்.'

என்று யாத்தமை காண்க. இங்ஙன்மே கம்பநாடர் பரதனைச் சேனையுடன் கண்டு, அவன் இராமபிரானுக்குத் தவறு இழைப்பதாகப் பிறழ உணர்ந்த குகன் கூற்றிலே அமைத்து,

'எலியெலா மிப்படை அரவம் யானென
ஒலியுலாஞ் சேனையை உவந்து கூயினான்.' என்றும்

'செஞ்சர மென்பன தீயுமிழ் கின்றன செல்லாவோ
உஞ்சிவர் போய்விடின் நாய் குகனென்றெனை யோதாரோ.'

என்றுங் கூறினர்.

அன்றியும் ஒரு பொருளைக் குறித்துச் சிறப்பிக்கலுறும் புலவாணர் அதனைத் தொடர்பு பொருந்தச் சிறப்பித்தல் வேண்டும். அங்ஙனம் செய்யும் செய்கையில் கண்ணுக்கு விருந்தாக வுள்ள சில காட்சிகளைக் கற்பவர் நெஞ்சகத்தே பதிப்பித்தல் நலம் பயப்பதாம். அதுதானும் இயற்கை வழாது வினைத் திறனோடு சொல்லப்படல் வேண்டும். அத்திறன் கம்பருக்கு நனி பெரிதும் உண்டு. இத்திறனிலே இவருக்கு மிக்கார் ஒருவருமிலர்; ஒப்பார் மிகச் சிலரே. சீதாபிராட்டியாரைப் பிரிந்து வருந்தும் இராமபிரான் கடலைக் கண்ணுற அக்கடலின் காட்சி இங்ஙனம் அவருக்குத் தோற்றியதெனக் கம்பர் கூறிய செய்யுட்களுள் ஒன்றாகிய

'சேயகாலம் பிரிந்தகலத் திரிந்தான் மீண்டுஞ் சேக்கையின்பால்
மாயன்வந்தான் இனிவளர்வான் என்று கருதிவருந் தென்றல்

'தூயமலர்போல் நுரைத்தொகையும் முத்துஞ் சிந்திப் புடைசுருட்டிப்
பாயலுதறிப் படுப்பதே யொத்த திரையின் பரப்பம்மா'

என்பது நோக்கற்பாலது. தென்றல் இராமபிரான் தன்னிடம் விட்டுப் பிரிந்து நெடுங்காலம் பொறுத்து வந்தான் என்றும் அவன் பல விடங்களிலும் திரிந்தமையான் இளைத்து ஆறுதல் விரும்பினன் என்றும் அத்தகையான் 'இனிக் கண் வளர்தல் ஒருதலை' என்றும் கருதிப் பாயலை உதறிப் போடுவதுபோல இருந்தது எனக் கூறிய அழகு காண்மின். இங்கே படுக்கையிலே பரப்பி வைத்த மலர்போல நுரை விளங்கியதும், திரையின் சுருட்டல் பாயலின் சுருட்டலுக்கும், உதறிப் போடுதல் அலைகள் எழுந்து அடங்குதலுக்கும் மிகப் பொருத்தமாக இயற்கைக்கு மாறா துள்ளன. முத்துச் சிந்தியது என்பது கடலில் முத்துள்ள செய்தியைக் குறித்ததோடு அரசர் பாயலில் பள்ளிகொள்ளும் மகளிர் தமது ஊடலால் முத்து மாலையை அறுத் தெறியும் இயல்பையுங் காட்டிக் கற்போருக்கு அகவுணர்ச்சியை எழுப்பி இன்பஞ் செய்கிறது. தென்றல் கருதியதென்பது காற்றின் நிகழ்ச்சியையும் தென்றல் எனவே கடலின் அமைந்த காட்சியையும் காட்டுதலோடு, திருமகளுடன் பிறந்ததென்றல் சீதாபிராட்டியாருக்கு இளையவனும் முறையாலும் திருப்பாற்கடல் இராமனுக்கு வேட்டக மாதலாலும் அது பற்றி மைத்துனக் கேண்மையுடைய தென்றல் இங்ஙனம் உபசாரம் புரிந்ததென்பதும் புலப்படுகின்றன. இன்னும் இது போன்று கண்கொண்டு நோக்குவார்க்குத் தோன்றும் நயங்கள் அளப்பில. அவற்றை விரிவஞ்சி விடுத்தாம். இஃது இயற்கைக் காட்சியோடு புராண நிகழ்ச்சிகளை உட்கொண்டு கற்போருக்குப் பேரின்பம் விளைத்தலின் மகிழ்கூர்தற் குரியனவே. இயற்கை நெறியிலன்றிச் செயற்கை நெறியால் இன்புறுத ஒரு சாரார் இதன் இயற்கை நலத்தில் இன்புறுக.

சங்கப் புலவர் இயற்கை நவிற்சியினையே பெரிதுங் கொண்டவர். பிற்காலத்தவர் புனைந்துரையாகிய உயர்வு நவிற்சியில் அறிவைப் பெரிதும் செலுத்தியவர். இத் தன்மை யொன்றில் கம்பர் சங்கப் புலவருடைய நிலைமையில் குறைந்து விடுகின்றனர். இது பற்றியே சுந்தரம் பிள்ளை என்னும் பேரறிஞர்,

'பத்துப் பாட்டாதி மனம் பற்றினர் பற்றுவரோ
எத்துணையும் பொருட்கிசையும் இலக்கணமில் கற்பனையே.'

என்று கூறுவாராயினர். இஃதொருபா லிருப்ப, கம்பர் வட மொழிப் பெயர்களைத் தமிழோசைக் கிசையத் திரித்து வழங்கியது பல விடங்களில் செவிக்கினிமை பயப்பினும் ஓரோவோரிடத்தில் அஃது இன்னாத ஓசையை விளைவித்தலின், காளமேகப் புலவர் அதனை விநோதமாக இகழ்ந்துரைத்தலைப் பின்வரும் செய்யுளால் உணர்க:

'நாராயணனை நராயணனென்றே கம்பன்
ஓராமற் சொன்ன வுறுதியால்—நேராக
வாரென்றால் வர்எனபேன் வாளென்றால் வள்ளென்பேன்
நாரென்றால் நர்என்பேன் நான்.'

இக் கூறியவாற்றால் நாம் கடைப்பிடிக்க வேண்டுவது நமது செந்தமிழ் நூல்களைப் பல்லாற்றானும் ஆராய்ந்து பல சுவைகளையும் நுகரவேண்டும் என்பதேயாம்.

---

## 18. கற்றல்

நாம் மிகப்பல நூற்களைத் தெளிவான மனத்துடன் கற்கத் தொடங்குதல் வேண்டும். ஒரு சில நூற்களைக் கற்ற துணையானே அமைதியுறுதல் ஆகாது. பல நூல்களைப் பல்காலும் பலமுறைகளை வகுத்துக்கொண்டு பயின்றாலன்றி பரந்த புலமை உண்டாகாது. அங்ஙனம் அவற்றைக் கற்கும்

போதும் நமது மனத்தில் அந்நூலைப் பற்றியோ அல்லது அதன் ஆக்கியோனைப் பற்றியோ அல்லது அந்நூல் நுதல் பொருளைப் பற்றியோ யாதொரு கருத்தும் முன்னரே அமைந்திருத்தல் கூடாது. அவ்வாறு அமைந்திருப்பின் அந் நூலைப்பற்றிய உண்மை மதிப்பு ஒரு சிறிதும் ஏற்படாது. எத்துணையோ பலர் தமது கருத்துக்களையும் தமது விருப்பு வெறுப்புக்களையுமே பிறர் நூல்களில் கண்டு மகிழ்வெய்து கின்றனர். பலர் தமது கருத்தைப் பிறர் நூல்களில் இடர்ப் பட்டுப் புகுத்தி இன்பெய்துகின்றனர். பலர் ஒரு பொருளைக் குறித்துத் தாம் துணிந்துள்ள முடிபுகளுக்கு வேறுபாடாகத் தோன்றும் நூல்களைக் கண்ணாலும் பாரார், கையாலும் தொடார். சைவப்பற்றுடையாருள் சிலர் வைணவ நூல்க ளைக் கற்பதற்குங் கூசி நிற்கின்றனர். வைணவ ஆசாரியரில் பலர் திவ்வியப் பிரபந்தத்தைத் தவிர வேறு நூல்களைக் கருத் தாலும் நினைக்கலாகாதெனத் தம் மாணவ குழாங்களுக்கு அறி வுறுத்துகின்றனர். இதனால் அறிவு விரிதலின்றி, அன் னோர் குறுகிய அறிவுடையாராய்க் கிணற்றுத் தவளைகளா கின்றனர்.

கம்பராமாயணத்தில் கவின் பொருந்திய நடையையுங் கருத்தழகுகளையுங் கற்பனை நயங்களையும் இழக்கும் சைவப் புலவர்களையும், திருத்தொண்டர் புராண மென்னும் பெரிய புராணத்தின் மிகவுயர்ந்த பக்குவ நிலையைப் பதமுற வெடுத் துக்காட்டி, அன்புச்சுவை ததும்பும் அரிய இனிய திருப் பாடல்களின் விஞ்சிய சுவையை யிழக்கும் வைணவப் புல வர்களையுங் கண்டு யாம் பெரிதும் இரங்குகின்றோம்.

'எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்ப தறிவு.'

என்னும் தெய்வப் புலவர் அருமருந்தன்ன திருவாக்கு எத்துணை அழுகாக நாம் நூல் கற்கவேண்டியமுறையை எடுத்துக் காட்டுகின்றது. சமய நூல்களை மட்டுங் கற்பவர் தாமும் பிறநூல்களையும் புறச்சமய நூல்களையும் இன்றியமையாது கற்றல் வேண்டும். தங் கொள்கைகளுக்கு முரண்படாது அரண்பட்டு நடக்கும் பொருள்கள் என்றும் எவராலும் ஏற்றுக்கோடற் பாலனவாம். இவ்வுண்மை கடைப்பிடித்தே சைவசமயநெறி யுடையாரும்,

‘ அன்னிய நூலின் விதியவி ரோதமேல்
உன்னேல் பழுதென் றுளத்து ’

என்று அருளிச் செய்வாராயினர். ஆதலால், நூல் கற்கத் தொடங்குவோர் முதன் முதலாக அறிய வேண்டுபவை : பலநூல்களைக் கற்கவேண்டுமென்பதும், தூயமனத்தினராயிருத்தல்வேண்டு மென்பதுமேயாம்.

இனி, நூல்களை ஒரு பயனுங் கருதாது, படித்தலிலேயே இன்பமுடையாராய் நூல் படிப்பவரும், கற்றலினால் ஒரு பயன் கருதி நூலைக் கற்பாருமென இருதிறவர் உளர். இவருள், முன்னையோர் யாதேனு மொருநூலைத் தமக்குத் தோன்றும்போது கையிலெடுத்து ஆழ்ந்த நினைவும் அமைதியுமின்றி விரைந்து படித்துச் செல்வர். அவருக்கு விளையும் பயன் அப்பொழுது தோன்றும் மகிழ்ச்சியே யன்றி வேறின்று. படித்தவற்றின் பொருள்களை உளத்தே கொண்டு சிந்தித்துத் தெளிந்து உறுதிப்பயனும் அவர் அடையார். பிறர்க்கு அவற்றை எடுத்து உணர்த்துதற்கும் அவர்க்கு ஆற்றல் உளதாக மாட்டாது. இவ்வாறன்றிப் பின்னையோர் ஒரு நூலைக் கற்கத் தொடங்கும் பொழுதே ஒருவகை முடிந்த பொருளைத் தேர்ந்தெடுத்துக் கொண்டு

அதற் கிசைந்தவாறு தமது கருத்தையும் அறிவையும் செலுத்தி, அந்நூற் பொருளைக் கற்று, ஐயமறத் தெளிந்து, கருதிய பயனைத் தலைப்படுவர். இதனால், அவர் கல்வி தமக்குப் பயன்படுதலோடு பிறர்க்கும் பயன்படுகின்றது. ஒரு நூலைப் புலன்கொள விளங்கக் கற்ற ஒருவன் நூறு நூல்களை முறையின்றிக் கற்றவனைக் காட்டினும் சிறந்தவனாவான் என்பதற்கு ஐய மில்லை. இக்கருத்தே பற்றி அதிவீரராம பாண்டியரும்,

> " நூற்பல கற்றானேனும் பொருள்நுனித் தறியா னென்னில்
> மாலொடு வாளா கத்தும் மாணிறக் காகம் போல்வான்."

என்று யாப்புறுத் தோதுவா ராயினர். அவர் அவ்வாறு நுனித்து நூலைக்கல்லாதார்மேல் தமக்கு இருக்கும் வெறுப்பு மிகுதியைக் 'கரையு' மெனக் கூறாது 'கத்து' மென்னு மொழியால் இனிது புலப்படுத்தலையுங் காண்க. வடமொழியிலும், நூறு கவிகளை நன்கு கற்றவன் பண்டிதனாவானென்றும், ஆயிரம் சுலோகங்களை நன்கு கல்லாதவன் பண்டிதனாகானென்றும் ஒரு மொழி யுலவுகின்றது. இதனானே, ஒவ்வொருவரும் ஒரு நூலைக் கற்கத் தொடங்கும்பொழுது ஒரு பயனைக் குறிக்கோளாகக் கொண்டு, அதற்கேற்ற முறையை அமைத்துக்கொள்ள வேண்டு மென்பது தெளியப்படும். அங்ஙனம் முறையுடன் கற்போரே கற்றவரெனப்படுவர். ஏனையோர் கற்றவரெனக் கருதப்பட மாட்டார். இதனா னன்றோ,

> ' புத்தகமே சாலத் தொகுத்தும் பொருடெரியார்
> உய்த்தக மெல்லா நிறைப்பினும்—மற்றவற்றைப்
> போற்றும் புலவரும் வேறே பொருடெரிந்து
> தேற்றும் புலவரும் வேறு.'

என்ற நாலடிச் செய்யுளும் எழுந்தது.

இனி, ஒரு நூலை எவ்வாறு கற்க வேண்டுமென்பது பற்றி ஒரு சிறிது கூறுவாம். பெரிய புராணத்தைக் கற்கத் தொடங்குமொருவர் முதன்முதல் அந்நூல் முழுவதையும், கருத்தூன்றி நிற்க, சரித்திரப் பகுதிகளெல்லாவற்றையும் ஒழுங்குறப் படித்தல் வேண்டும். சரித்திரங்களெல்லாம் வழுவின்றித் தெளிவாக உள்ளத்தில் பதிந்த பிறகு அச்சரித்திரக்கூற்றுக்களில் முளைத்து ஐயம்போலும், முரண்வன போலும், உலகியலுக்கு அப்பாற் பட்டவை போலும் தோன்றுவனவற்றையெல்லாம் சிந்தித்து நுணுகிச் சுருதி, யுக்தி, அநுபவங்களைக் கொண்டு தெளிதல் வேண்டும். அதன்பின் சரித்திர சம்பந்தமாக்க் கால ஆராய்ச்சி செய்து அக்கால இயல்புகளைச் செவ்விதின் ஆராய்தல் வேண்டும். பின்னர் யார்யார் என்னென்ன வகையைத் தெரிந்துகொள்ள வேண்டுமோ அவற்றையெல்லாம் நூலைப் பன்முறை பயின்று உண்மைகளைத் துருவித் துருவிப் பார்த்தல் வேண்டும். இவ்வாறு நூல் முழுவதுங் கற்றபின் நூலாசிரியரைக் குறித்து அறிய வேண்டும் பகுதிகளையெல்லாம் அறிய விழைவு தூண்டும். அவ்விழைவு பற்றுக்கோடாக அந்நூலுக்கும் அதனை ஆக்கிய ஆசிரியருக்குமுள்ள இயைபைத் தெரிந்துகொள்வதற்கு முயலுதல் வேண்டும். அவரெழுதிய வேறு நூல்கள் எவையேனுமிருப்பின், அவற்றைக் கற்று அதனால் அவர் தன்மைகள் சிலவற்றை அறிதல் வேண்டும். பின்னர், அவர் இயற்றிய நூலினின்று ஆசிரியர் மனநிலையையும், கல்விப் பெருக்கையும், உலகானுபவத்தையும், அவருக்குள்ள விருப்பு வெறுப்புக்களையும், இன்ப துன்பங்களையும், நற்குண தீக்குணங்களையும் அறிந்துகோடல் வேண்டும்.

அவ்வாறு செய்யுங்கால் ஓர் ஆசிரியர் இயற்றிய நூல்களில் ஒன்றைக் கற்கத் துவங்கும்போது அவர் முதன்முதல்

இயற்றிய நூலேயே எடுத்துக்கொள்ளுதல் மிகவும் நன்று. அபபொழுதுதான் நூலாசிரியரின் மனவிருத்தி செவ்வையாகப் புலப்படும். பின்னர் ஆசிரியன் நடை, சொல்லாட்சி, பொருளமைப்பு முதலியவற்றைக் கொண்டு பல உண்மைகளேப் பெறுதல் கூடும். ஆதலால், காலமுறை பற்றி நூல்களேக் கற்றல் பெரிதும் பயனுடைத் தென்பது உணரப்படும்.

இனி, ஓர் ஆசிரிய னியற்றிய ஒரு நூலே, அவனியற்றிய வேறு நூல்களோடு ஒருங்கு வைத்து ஒப்பிட்டுப் பார்த்தலால் எங்ஙனம் அவனது புலமையின் சிறப்பு நமக்குத் துலக்கமாக விளங்குமோ, அங்ஙனமே ஆசிரியர் பிறர், அப் பொருளே பற்றி எழுதியுள்ள நூல்களோடு ஒப்பிட்டுப் பார்க்க, எடுத்துக்கொண்ட நூலாசிரியனின் பெருமை, சிறுமை களங்கமற விளங்கும். எனவே, இங்ஙனம் பல நூல்களோடு தாம் கற்கும் நூலே ஒப்பிட்டுக் கற்றலும் இன்றியமையாது வேண்டப்படுவதாகும். இங்ஙனமே பல வகையாகக் கற்குந் துறைகளும் வழிகளு முள. அவற்றையெல்லாம் ஈண்டு விரிப்பிற் பெருகும். இக்கூறிய சிலவற்றைக் கொண்டு ஏனேயவற்றை யுய்த்துணர்க.

---

## 19. பெரிய புராணமும் தலேவிமாரும்

பெரியபுராணம் வைதிக சைவ பொக்கிஷம் என்பதும் காவ்யரத்நம் என்பதும் எல்லார்க்கும் ஒப்ப முடிந்த உண்மை. அது தெய்வச் சேக்கிழார் பெருமானுல் திருவருள் இயக்கியவழி அருளிச் செய்யப்பட்ட அருணூலாகும். அதன்கண் எத்துணேயோ பலருடைய் திருவருட் பெருஞ் செல்வமும் அருந்திருத் தொண்டும் அழகுறக் கூறப்பட்டுள்ளன. அவை ஒவ்வொன்றும் உற்று நோக்குவோர்க்கு

உலப்பிலா இன்பத்தை ஊட்ட வல்லன. இக்காலத்தே மாதர் தமக்கு ஆடவரோ டொப்ப உரிமையும் நலன்களும் வேண்டுமென உலகத்திலே எல்லாப் பாகங்களிலும் பேசியும் எழுதியும் வருகின்றனர். ஆடவர் இப்பொழுது நுழைந்து உழைத்துவரும் தொழிற்றுறைகளிலும் தாம் புகுதல் வேண்டுமென வலி செய்கின்றனர். ஆனால், பண்டைக் காலத்து நூல்கள் சிலவற்றிலும் தொல்காப்பிய உரையிற் சிலவிடத்தும் வீடு பேற்றிற் குரியர் ஆடவரே என்றும், சில உரைகள் பெண்டிர் வீடுபெறுதல் தாம் ஆண்பாலராக மீண்டும் பிறந்தா லன்றிக் கூடாதென்றும் அல்லது தம் வயிற்றுப் பிறந்த மகன் துவரத்துறந்தால் கூடுமென்றும் மொழியும். உலக வாழ்க்கையிலே ஒத்த உரிமை விரும்பும் மகளிர்க்குச் சமய வாழ்க்கையில் ஓரோவோரிடங்களில் இத்தகைய மொழிகள் காணப்படுதல் பெருஞ்சீற்றத்தைத் தருதல் இயல்பே. இயல்பாகவே உடலமைப்பினும் மனவமைப்பினும் வேறுபட்டுள்ள ஆடவரும் மகளிரும் ஓரே உரிமையுடையவராதல் பொருந்தாது. அஃது இருபாலருக்கும் நன்மை பயப்பது மன்று. இன்று புதிது புதிதாக முளைக்கும் இத்தகைய கருத்துக்களுக் கெல்லாம் பெரிய புராணம் தக்க மறுமொழி புகலும். பெரிய புராணம் குலத்தாலும் குணத்தாலும் வாழ்க்கை நிலையாலும் திருத்தொண்டின் சிறப்பாலும் வெவ்வேறு வகைப்பட்ட அடியார் அறுபான் மும்மையர் வரலாற்றைக் கூறுவதனால் அஃது ஊன்றிப் படித்து உணரற் பாலதாம். அதன்பால் அமைந்து கிடக்கும் உண்மைகளும் அளப்பில. இக்கட்டுரையில் பெரிய புராணத் தலைவிமாருள் சிலர் அவ்வப்போது புரிந்த பேரருட் செயல் களையும் அவர் தம் உரிமைச் சிறப்பினையும் சிறிது ஆராய்ந்து தொட்டுக் காட்டுவோம்.

இளையான் குடிமாற நாயனார் தாம் வறுமை மீதூர ஒன்று மின்றிப் பட்டினி கிடப்புழி, சிவபெருமானை விருந்தினராக ஏற்றபொழுது இன்னது செய்வதென அறியாராய்த் தமது அருமைத் திருமனைவியாரை நோக்கி, 'அணங்கே, தபோதனர் தீரப் பசித்துள்ளார், அவருக்கு அமுதளித்தல் எங்ஙனம்?' எனப் பரிந்து வினவியதும் அதற்கு அச் செல்வியார் சூழ்ச்சி கூறியதும் பின்னர் விருந்தினருக்குப் பொருந்துமாற்றானே அமுது சமைத்து வைத்தும் நன்றாற்றல் இயலாமைக்காகப் பண்டை நினைவெண்ணி நொந்தமையும் அம்மையார் செயலின் மேன்மையை விளக்குகின்றன. திருநீலகண்ட நாயனார் வாழ்க்கைத் துணைவியார் தமது கணவனார் கூறுறவின்படி தாம் தமது நெறிக்கண்ணே வழுவாது ஒழுகினமையும் அவர் கூடாவொழுக்கத்தைக் கடிந்துரைத்த தமது கற்பின் மேம்பாடும் எத்துணைச் சிறந்தன. குங்கிலியக் கலயனார் இல்லக்கிழத்தியார் பசிநோய் கடுக வருந்தும் சுற்றத்தினரையும் மழலை மொழிமக்களையும் கண்டு, கண்ணீர் உகுத்துத் தமக்கிருக்கும் ஒரே அணிகலனாகிய திருமாங்கிலியத்தை எடுத்துக் கொழுநர் கைகொடுத்து நெற் கொண்டுவரக் கூறினமை எவ்வளவு துணிவுச் செயல் என்பதை எண்ணிப் பார்மின்! சிறுத்தொண்ட நாயனார் காதலியார் தமது அருமந்த மகவாம் சீராளத்தேவரைத் தமது பெற்ற வயிறு சற்றும் குழம்பாது காத்துத் தமது திருக்கரத்தால் நெகிழாது பற்றி மகிழ்நர் அரிதற்குத் துணைபுரிந்த ஆற்றலை வியமின்! நயமின்!! அப்பூதி அடிகளார் பெருமனைத் தலைவியார் தமது மூத்த புதல்வர் பாம்பு கடித்திறந்தது கண்டு சிறிதும் பதறாது அப்பருக்கு அமுது செய்விப்பதிலேயே முனைந்து நின்ற அருஞ்செயலை உணர்மின்! இயற்பகை நாயனார் வாழ்வரசியார் தமது கொழுநனார் அடி-

யவருக்குத் தம்மை அளித்துவிட்டதாகக் கூறியவுடன், எதிர்பாராத அம்மொழியைக் கேட்டுத் தமது கணவனைக் கைவிகந்து வாழவேண்டுமே யெனக் கலங்கிப் பின் அவர் இட்ட பணியே திருப்பணியெனத் தெளிந்து அடியவருடன் செலவுக்குத் துணிந்தமையும் அடியவராகப் போந்த இறையவன், சுற்றத்தார் சூழ்ந்து நெருக்கியவழி அஞ்சுவான் போல் அபிநயிக்க, அம்மையார் அவரைத் தொழுது நோக்கி, 'இறைவனே அஞ்ச வேண்டாம்; இயற்பகை வெல்லும்' எனக் கூறியமையும் எங்ஙனம் எமது உள்ளத்தை உருக்கி உவகைத் தேனைச் சொரிகின்றன.

இனி, சாலப் பெருஞ்செயல்களை ஆற்றிய தலைவிமார் மூவரைப் பற்றிச் சில கூறி இச் சிற்றுரையினை முடித்தும். இம்மூவராவார் திலகவதியார், புனிதவதியார், மங்கையர்க் கரசியார் என்பார். திலகவதியார் சைவ சமயாசாரியர் நால்வருள் ஒருவராகிய திருநாவுக்கரசு சுவாமிகள் தேவாரத் திருமுறையை அருளிச் செய்வதற்கே காரணமாக நின்றவர். தமக்கெனப் பெற்றோரான் நியமிக்கப்பட்ட கேள்வர் இறந்து பட்டதும் தமதுயிரை அவர்பாற் செலுத்த வேண்டுமெனத் துணிந்த மாதரசியார், தமது திருத்தம்பியார் தாம் உயிர் நீப் பின், உயிர் வாழார் என்னுங் கருத்தானே உயிர்ப் பொறை தாங்கித் திருவதிகைச் செல்வருக்குத் தொண்டு பூண்டு, செம்மை நோன்பியற்றி வாழ்ந்த நிறைவுடைமையும் பின் னர்த் தம்பியார் சமண் சமயம் புகுந்தவழி, ஐயன் திரு வடியை நினைந்து நினைந்துருகித் தம்பியார் உய்ய வேண்டு மென வரங் கிடந்ததும், திருநாவுக்கரையர் சூலைநோயாற் பிணிப்புண்டமை கேட்டும் சமண்சேரி புகுதேன் எனக் கூறி யருளிய சைவப் பற்றும் அவ்வம்மையார்க்கு இறைவன் கன விடை அருளிச் செய்த அருளுடைமையும் பின்னர் நாவரச

ருக்குத் திருநீறு நல்கித் திருவைந்தெழுத் தோதி யருளிய தலைமைப்பீடுடைமையும் எண்ணியெண்ணி எக்கழுத்தம் கொள்ளற்பாலன வன்றோ!

இனிக் காரைக்கால் புனிதவதியாரை நோக்குவோம். மாதவச் சிவஞான யோகிகள் மா பாடியத்துள், இவரைப் பற்றிக் குறிக்க வந்தவிடத்து 'அம்மை' யெனச் செல்வ மொழியால் மொழிந்தது குறிக்கொளற்பாற்று. அம்மையார் அருளாற் பெற்ற மாங்கனி மறைந்தவழி உற்றதே தெனக் கேட்கும் கணவனுருக்கு உண்மை கூற வேண்டு மென்னும் உணர்ச்சி ஒருபாலும் இறைவன் அருள் மொழி யற்பாற் றன்றென்னும் உணர்ச்சி மற்றொருபாலும் நெருங்கி வருத்த ஒருபால் துணிந்த பெருமதித் திறனும், தம்மைக் கற்புடைத் தெய்வமெனக் கருதாது மனையாகக் கொள்ளலாகாத பொற்புடைத் தெய்வமெனப் பிறழ வுணர்ந்து கணவன் பிரியக் கற்பொழுக்கம் காத்து நின்ற மையும், பின்னர் அவனால் நீக்கப்பட்ட போழ்து, 'இனியான் இறைவனுக்கே ஆளாவேன்' எனத் திருவுளத் தடைத்துப் பேய்வடிவம் சிவபெருமானை வேண்டிப் பெற்றதும் கைலாய மலைக்குத் தலையால் நடந்து சென்றதும், இறைவன் திருவாய் மொழியால் அம்மையென அருள்செய்யப் பெற்றதும், அவன் திருவடிக்கீழ் உறையும் பெருவாழ்வுடன் அவன் ஆடும்போது பாடும் பணிவாய்ப்பப் பெற்றதும், இறைவன் பால் இறவாத இன்பவன்பு வேண்டியமையும், அற்புதத் திருவந்தாதி முதலிய அருள்வழியும் பொருள் நூல்களை அருளிச் செய்ததும், எவ்வளவு சீரிய அறிவாற்றல் உடைமை யைக் காட்டுகின்றன.

இனி, 'மங்கையர்க்குத் தனியரசி எங்கள் தெய்வம்' எனச் சேக்கிழார் பெருமானால் அருளிச் செய்யப்பட்ட அ

சியார் திருத்தொண்டின் அழகை எடுத்துக்கொள்வோம். அரசியார் தமது கணவனாராகிய பாண்டிய மன்னன் சமண சமயத்தைக் கைப்பற்றி யொழுக அஃது உளங்கொளா ராய்க் 'குலமகட்குத் தெய்வங் கொழுநனே' என்னும் நல் லுரை கடவாது அவன் வழிபாட்டினும் காதன்மையினும் ஒரு சிறிதுங் குறைவுபடாது, தமது திருவுள்ளத்தே சிவ பெருமானை யன்றிச் சிந்தியாது மன்னவனை மீண்டுஞ் சைவ நெறியிற் புகுத்தும் செவ்வி நோக்கித் திருவருளை நினைந்து கிடந்தார். அவ்வழி ஞானசம்பந்தர் சோணாட்டில் திருவவ தாரஞ் செய்தமையும் அவர் மூவாண்டிலே உமையம்மையார் திருமுலைப்பால் சிவஞானம் குழைத்தூட்டப் பட்டமையுங் கேட்டு, அன்பு மேலீட்டால் திருமுலை சுரந்து அவர்தம்மால் பாண்டி வேந்தன் வழிபட இயலும் என்னும் கருத்தின ராய்க் காலங் கருதி யிருந்தனர்; பின்னர் அமைச்சர் பெரு மானாகிய குலச்சிறை நாயனாரால் திருமுகப்பாசுரம் எழுது வித்துச் சம்பந்தப் பிள்ளையாரை மதுரைக்கு வருவித்தனர்; பிள்ளையார் மதுரைக்குப் போந்த வழித் திருக்கோயில் வழி பாடு புரிவார்போலப் பிள்ளையாரை நல்வரவேற்றுத் திரு மடஞ் செய்து கொடுத்தனர். பின் சமணர் தீக் கொளுவ லும் அவருக் கேற்பட்ட நிலைமையினைச் சிறிது எண்ணிப் பார்மின்! அரசியார் மதிநலமும் தொழில்வன்மையும் இனிது விளங்கும். பாண்டியன் வெப்புநோய் கொண்டு வருந்துழிக் கோப்பெருந்தேவியார் நிலைமையைக் கருதுமின்! சமணர் மணிமந்திர மருந்துப் பிரயோகஞ் செய்வான் முற்பட்டனர். அரசியாருக்கோ அரசற் குற்ற நோயின் காரணம் இன்ன தெனத் தெரியும். ஆயினும், சமண சமயத்தை மெய்யென நம்பிச் சமண்குருக்கள்மார் சூழ்ச்சி வலையிற் சிக்கி அவர்தம் தீச்செயலுக்கும் இடந்தந்து சைவரைக் காணின் 'கண்டு

முட்டு' அவர் பெயரைக் கேட்பின் 'கேட்டுமுட்டு' என்றிருக்கும் மன்னவனிடம் 'பிள்ளையாரை அழைத்தால் நோய் தீரும்' என்று கூறுதற்கு எத்துணை ஊகமும் நுண்ணறிவும் வேண்டும் கருதுமின்! அல்லதூஉம் பிள்ளையாரைத் தாம் தங்கியிருந்த மடத்திலே தீக்கொளுவுதற்குக் காரணமாக நின்ற அரையனை அணுகவேண்டுமென வேண்டியிரத்தல் எத்துணை இடர்ப்பாடுடையதென எண்ணிப் பார்மின்! பின்னர் அமணர் பாலறாவாயரை வாதுக்கு அழைத்தபோது அமணர் கொடுஞ்செயலுக்கு அரசியார் அஞ்சியதும் பிள்ளையார் இளம்பருவத்தினர் என்பது குறித்து வருந்தியதும் தோல்வி வெற்றி எவர் பங்காகுமோ என ஏங்கிக் கவலையுற்றமையும் ஆழ நினைத்துப் பார்க்கின் அரசியாருடைய மனநிலை தெள்ளிதின் விளங்கும். இத்தகைய இடர்ப்பாடுகள் நிரம்பிய சிக்கலான சமயங்களி லெல்லாம் அரசியார் மனவுரனும் மதிவல்லபமுங் கொண்டு வயங்கியமையானன்றோ சைவ சமயம் இன்றுவரை நின்று நிலவுவதாயிற்று. அதனை நன்குணர்ந்தன்றே சேக்கிழார் 'எங்கள் தெய்வம்' எனச் சைவரை உளப்படுத்திக்கொண்டு கூறுவாராயினரென்க.

பெரியபுராணத் தலைவிமாரால் மகளிர் அவ்வப்போது காட்டிய இல்லாண்மை, அருஞ்செயல், மதித் திறன், சூழ்ச்சி வன்மை முதலியவற்றை உணரலாகும். அத்தகைய அருமை பெருமைகள் பெண்பாலார்க்கு வாய்ந்திருப்பின் அவரைப் போற்றாத ஆண்பாலரும் உளரோ? அவரவர் இயல்பிற்குத் தக்க செயல்கள் என்றும் எங்கும் பாராட்டப் படுவனவேயாம். இனி ஆண்பாலரே வீடு பேற்றிற் குரியர் என்னும் சில நூலுரையின் வாயிற்பொடியட்டி வீடுபேறு எய்திய நம் தலைவிமாரும் நந்தா மணி விளக்கனையார்.

இன்னோரன்ன அரும்பெருஞ் செயல்களைப் புரிதற்கு நம் செல்வச் சகோதரிமாரும் விழைவாராக; பெரியபுராணத் தலைவிமார் மனைவிமாராகவும் தாய்மாராகவும் சகோதரிகளா கவும் தங்கடமைகளைக் ஆற்றிய வகைகளைக் கூர்ந்து நோக்கிப் பாராட்டி மகிழ்ந்து, அவற்றைப் பின்பற்றி இம்மை மறுமை களை எய்துவார்களாக.

---

## 20. தமிழ்ச் செல்வம்

தமிழ்ச் செல்வம் என்னும் தொடர் பொருட் செல்வம் அருட் செல்வம் என்புழிப்போல, தமிழாகிய செல்வம் என விரியும். தமிழ் என்பது ஈண்டு தமிழ் மொழியைக் குறிக் கும். செல்வம் என்பது பொருள்; அறம் இன்பம் ஆகிய இரண்டையும் துணைக்காரணமாக நின்று தருதலோடு அமை யாது வீடு பேற்றுக்கு இன்றியமையாத அருட் செல்வத்தை யும் பயப்பித்துத் தானும் நுகரப்படுவதாகும். இவ்வாறே தமிழும் அறம் பொருள் இன்பம் வீடு என்னும் உறுதிப் பொருள் நான்கினையும் பயப்பிக்கும் கருவியாய் நின்று தானும் கற்றறிவுடைய மக்களால் நுகரப்படும் ஒரு பொரு ளாகும். இப்பெற்றி நோக்கியே தமிழ்ச் செல்வம் என உரைக்கப்பட்டது.

தமிழ் என்னும் சொல் இனிமை என்னும் பண்பை உணர்த்தும். அது அப்பொருட்டாதலை 'தமிழ் தழீஇய சாயலவர்' 'தமிழ்ப் பாட்டிசைக்கும் தாமரையே' என வரூஉம் சான்றோர் வாக்குகளால் அறிக. இச்சொல்லுக்கு இப்பொருள் உணரமாட்டாதார் தத்தமக்குத் தோன்றியவா றெல்லாம் உரைப்பர்.

தமிழ், பல்லாயிரம் ஆண்டுகளுக்குமுன் இவ்வுலக முழுவதும் வடமொழியாகிய ஆரியம் இந்நாட்டிற் புகுதற்கு முன்னரே விளங்கி ஒளிர்ந்த அருமந்த மொழியாம். ஆதலின் இது தோன்றிய காலம் இன்னதென வரையறுக்கலாகாமை இதனை வடமொழியைக் கூறுவது போல 'ஆதி மொழி' என்னாது 'அநாதி மொழி' என்றே ஆராய்ச்சியாளர் கூறுவர். இவ்வுண்மையினை,

'சதுமறை ஆரியர் வருமுன் சக முழுதும் நினதாயின்,
முதுமொழி நீ அநாதியென மொழிகுவதும் வியப்பாமே?'

என்று திரு: சுந்தரம் பிள்ளை அவர்கள் மனோன்மணீயத்தில் கூறுமாற்றானும் அறிக. இனி, தமிழ் பண்டு தொட்டே இயல்வரம்புடைய இனியமொழி என்பதும், வெவ்வேறு காலங்களில் வெவ்வேறு வகையாக மாறுபட்டுவரும் மொழி அன்றென்பதும், எக்காலத்தும் ஏற்றம் பெறத்தக்க ஆற்றல் வாய்ந்த அருமை மொழி என்பதும், கன்னடம், தெலுங்கு, மலையாளம், துளுவம் என்னும் பல மொழிகளுக்குத் தாய் மொழி என்பதும், வடமொழியோடு ஒத்த சிறப்புடைத் தாய்த் தொன்மை, அழியாமை, முதலியவற்றால் உயர்ந்த சிறப்புடைத்தாய் விளங்கும் தனிமொழி என்பதும் ஆன்றோர் நூல்களாலும், உரைகளாலும் நன்று தெளியப்படும்.

ஒரு மொழி சிறந்தது என்றால் அதன்கண்ணுள்ள நூல்கள் சொற்சுவை பொருட்சுவைகளால் விஞ்சியிருத்தல் வேண்டுமென்பது எல்லாருக்கும் ஒப்ப முடிந்த உண்மை. இவ் வுண்மையைக் கொண்டு தமிழ் மொழியை ஆராய்ந்து பார்ப்போமானால் அது சிறந்த மொழி யென்பது எளிதில் புலப்படும். தமிழிலே செய்யுள் வகையில் சிறந்துள்ள நூல்களையும், செந்நாப் புலவர்களையுங் கணக்கிட்டுப் பார்க்கினும் ஏனை மொழிகளுக்கு இல்லாத தனிச்சிறப்பு இப்

மொழிக்கு உண்டென்பது பெறப்படும். எந்நாட்டிலே இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன் திருவள்ளுவர் திருக்குறள் போன்ற ஓர் அரிய நூல் எழுந்தது? எந்நாட்டிலே இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன் இலக்கியப் பொலிவும், இலக்கண வரம்பும், இயல் இசை நாடகம் என்னும் முத்தமிழ் வகையும் தோன்றின? ஆங்கில மொழியின் அருமை பெருமை யெல்லாம் இருநூறு முந்நூறு ஆண்டுகட்கு முற்பட்டவையே யாகும். இலத்தீன், கிரேக்கு, எபிரேயம், ஆரியம் முதலான தொன் மொழிகளோடு இணையொத்த தமிழ் மொழி, அவை யாவும் வழக்கு வீழ்ந்து ஒழியவும் இன்றும் நின்று நிலவும் தனிப்பேர் ஆற்றல் வாய்ந்தது என்பதை எண்ணுந்தோறும் எண்ணுந்தோறும் இறுமாப்படையாத தமிழன் தாய் மொழிப் பற்றில்லாச் சழக்கனே யாவான்.

வட நாட்டினின்றும் வீறிவந்த ஆரியம் தெலுங்கை அடிமைப்படுத்தியது; மலையாளத்தை மணந்து கொண்டது; கன்னடத்தில் கை வைத்தது; துளுவத்தைச் சூழ்ந்து கொண்டது; செந்தமிழ் மருங்கிலும் செல்லத் தொடங்கியது. ஆனால் அச் சூழலில் அகப்படாது தனது ஒப்பற்ற உண்மையை இன்றும் அழியாமற் காத்துக்கொண்டு அதனோடு சமமாய் எதிர்த்து நின்று 'நான் நினக்கு ஒருவாற்றானும் எளியே னல்லேன்; எவ்வாற்றானும் நின்னினும் சிறந்தேன்' என்று ஒளிரும் தமிழ் அன்னையின் கன்னித் தன்மையை என்னென்பேன்?

தமிழ் மொழியை நம் முன்னோர் தெய்வம் என்றே பேணி வந்தனர். நாம் அதனைப் போற்றாது கொன்னே காலம் கழிக்கின்றோம். பிறநாட்டார் தமது மொழியை வளம் படுத்த அரும்பாடுபட்டு வருகின்றனர். நாமோ ஒவ்வொரு நாளும் நமது அரிய மொழியை ஆரியத்துக்கும் ஆங்

கிலத்துக்கும் பறிகொடுத்துக்கொண்டு வருகின்றோம். நமது முன்னோர், தமக்காக அரிதிற் றேடிவைத்த பெருஞ் செல்வங்களாகிய அரிய நூல்களைக் கண்ணெடுத்தும் பார்க்கின்றோமில்லை; காது கொடுத்துக் கேட்கின்றோமில்லை; காசு கொடுத்துக் காப்பாற்றுகின்றோமில்லை. இங்ஙனம் நாம் மடிந்திருப்போமாயின் நாம் உள்ள பொருளைக் கொள்ளை கொடுத்து ஒன்றும் இல்லாதவராய் ஒழிதல் திண்ணம். இந்நாட்டிலே ஒரு சிலர் தமிழில் புலமை பெற்றுத் தமிழால் வயிறு வளர்த்துத் தமிழால் பொருள் ஈட்டித் தமிழால் எல்லாச் சிறப்பு அடைந்தும், அதனைப் பாராட்டாமல் வடமொழியில் அகர உகர மறியா திருப்பினும் அதனையே சீராட்டி வருகின்றனர். கம்ப ராமாயணப் பிரசங்கம் என்வாளர பெயர் வைத்துக்கொண்டு வான்மீக முனிவருக்கே ஏற்றம் கூறிச் சென்றார் ஒருவர்; திருவள்ளுவர் திருக்குறளைப் பற்றிக் கூறப்புகுந்து மனுவின் அநீதிக்கும் அமைவு உரைப்பார் மற்றொருவர். அகப்பொருள் நூல்களை ஆராய்வார் போல அபிநயம் காட்டி வடமொழியில் காம சாஸ்திரம் மிக விரிந்தது என்று கையை விரிப்பார் வேறொருவர். இதற்குக் காரணம் என்ன? தெலுங்கு கன்னட முதலான மொழிகளை ஆதரிப்பதில் எல்லாரும் ஒரே தன்மையாக உள்ளார். தமிழுக்கோ என்றால் பார்ப்பனர் பலர் நழுவி விடுகின்றனர். இதற்குக் காரணம் தமிழ் வடமொழியை அடியோடு ஏற்றுக் கொள்ளாமல் தனித்து நிற்கும் ஆற்றல் உண்மை அவர்க்கு அழுக்காற்றை விளைத்தலே யாகும். அந்தோ! இவர் செய்கை கொடுமையினும் கொடுமை.

நம்மவரேனும் நம் செந்தமிழ்த் தாயைப் போற்றாமலிருத்தல் அழகிதோ! மேல் நாட்டார் தமது மொழியோடு இரண்டு மூன்று மொழிகளைச் சேர்த்துப் படிக்கின்றனர்.

நம்மவரில் கற்றவர் என்போர் பெரும்பான்மையாய் ஆங்கிலம் கற்றவர். அவரில் பலருக்குத் தமிழ் தெரியாது. தமிழ் தெரிந்தவர் பலருக்கு ஒரு சிறிதும் ஆங்கிலம் தெரியாது. இது தமிழ் மக்களின் கலைக் குறைவையே பெரிதும் காட்டுகின்றது.

தமிழிலே எல்லா ஓசையும் நிரம்பவில்லை என்பர் ஒரு சாரார். எல்லா ஓசையும் நிரம்ப வேண்டும் என்னும் விதியென்ன? பண்டைத் தமிழர் தம் இயற்கைக்குப் பொருத்தமான ஒலிகளினாலேயே உலகத்திலுள்ள காட்சிப் பொருள், கருத்துப் பொருள்கள் எல்லாவற்றிற்கும் பெயரிட்டு இருக்கின்றனர். நாகரிகம் முதிர முதிர அவருக்கு வேண்டப்படும் புதிய புதிய கருவிகட்கும் புதிய புதிய கருத்துக்கட்கும் வேண்டப்படும் புதிய புதிய சொற்களை ஆக்கிக் கொள்வாராயினர். அங்ஙனம் உண்மையிருக்க வடநாட்டிலிருந்து அழையா வீட்டுக்கு நுழையாச் சம்பந்தியாக வந்து நுழைந்த வடமொழி ஓசைகளைப் பார்த்து இவ்வோசைகள் தமிழிலே இல்லையே என்று கூறுவார் இப்பொழுது தொடர்ந்துள்ள ஆங்கில மொழியின் ஓசையும் தமிழின்கண் இல்லையென்பார் போலும். எம்மொழியில்தான் எல்லா ஓசைகளும் நிரம்பி இருக்க இயலும்? அன்றியும் எல்லா ஓசைகளுமென்பது என்ன? ஒருவன் பல மொழிகளின் ஓசையை எடுத்துக்கொண்டு இவைகளே உலகத்தில் உள்ள எல்லா ஓசைகளும் என்று கூறுதல் பொருந்துமா? அற்றன்று, எழுத்தோசையையே கூறுகின்றோ மெனின், எழுத்தோசை இவைதாம் என்னும் வரையறை யாண்டுளது? ஓர் ஓசையை எழுத்தோசை அன்று என்று கூறுதற்குப் பிரமாணம் அவ்வோசையினால் யாதொரு எழுத்தும் எம்மொழியிலும் ஆக்கப்படாமை யன்றிப் பிறிதென்னை?

இனிப் புதிது புதிதாகத் தோன்றும் சொற்களுக்குக் கூறும் காரணம் என்னை? ஆதலின் இவர் உரைப்பன வெல்லாம் வெறும் போலியாக ஒழிதல் காண்க.

இனி, தமிழ்மொழி எழுத்துக்களின் கூட்டுறவால் தமக்கு உரிய ஓசையே யன்றி வேறு ஓசை பெறுதலும் உண்டு என்பதை "எடுத்தல் படுத்தல் நலிதல்" என்னும் நன்னூற் சூத்திரத்தானும் உணர்க.

தமிழைப்போல் இலக்கண வரம்பு வாய்ந்த மொழி வேறொன்று மில்லை. ஆரியம், இலக்கண நெறியைப் பலப்படியாக அறிவுக்குப் பொருத்த மின்றி எடுத்துரைப்பது. ஆங்கில மொழியோ ஒரு வரம்புக்கும் உட்படாதது. ஏனைய மொழிகளோ காலந்தோறும் மாறும் இயல்புடையன. தமிழ் இலக்கணம் அன்று தொட்டு இன்றுவரை நின்று உலவுதற்குக் காரணம் அது நேரிய முறையில் அமைக்கப்பட்டதேயாம்.

இனி ஒரு மொழி எத்துணை இயற்கை யாற்றல் வாய்ந்ததோ அத்துணையே அது சிறப்புப்பெறும். தமிழ்மொழி இயற்கை யொலியால் இரண்டு மூன்று எழுத்துக்களால் ஆக்கப்பட்ட சொற்பான்மை யுடைமையினால் அஃது எத்துணையும் விரிதற்கு இசைந்த ஆற்றல் வாய்ந்த தென்பது சொல்லாமலே அமையும். இத்தகைய இயற்கை நலன்களை இவ்வளவோடு நிறுத்தித் தமிழின்கண்ணுள்ள அழியாச் செல்வங்களாக விளங்கும் நூல்களைப் பற்றி ஒரு சிறிது கூறுவோம்.

தமிழில் முதன் முதலாகச் செய்யப்பட்ட முழு இலக்கணம் அகத்தியம் என்ப. அகத்தியம் குறைந்தது ஐயாயிரம் ஆறாயிரம் ஆண்டுகட்கு முற்பட்டது. அது தலைச்சங்கத்து நூல். இலக்கியங் கண்டதற்கு இலக்கண மென்பதை அகத்

தியமே எடுத்துக் கூறுவதனால் அகத்தியத்துக்கு முன்னரே தமிழிலே சிறந்த இலக்கியங்கள் திகழ்ந்தன என்பது மிகை யாகாது. அல்லதூஉம் தமிழிலே சிற்சில இலக்கண நூல்க ளும் ஓரோ ஓர் அதிகாரம் பற்றி எழுதப்பட்டிருத்தல் வேண்டு மென்பது ஊகிக்கப்படும். எவ்வாறு ஊகிக்கப் படுமெனின், அகத்தியம் முத்தமிழும் விரவிய விரிந்த இலக் கணமெனப் படுதலின், முத்தமிழும் விரவா இலக்கணங்க ளும் யாப்பதிகாரம் என்றாற்போலத் தனித்தனி எழுதப்பட்ட இலக்கணங்களும் இருந்திருத்தல் வேண்டு மென்பது உற்று நோக்குவார்க்கு இனிது புலனாம். அகத்தியர் தமிழுக்கு இலக்கணம் வகுத்தா ரென்பது இனிவருங் காலத்திலே தமிழ்ப் புலமை குன்றினால் போப்பையர் இலக்கணம் படித்த ஒருவன் தமிழுக்கு இலக்கணம் வகுத்தார் போப்பையரே என்று கூறுதலை யொக்கும். அகத்தியம் போப்பையர் தமிழ் இலக்கணத்தை ஆங்கில முறையோடு ஒப்பச் செய் தது போன்றே, வடநூல் முறைமைக்கு ஒப்பத் தமிழிற் செய் யப்பட்ட தாகும். அதனானன்றே தமிழ் மக்கள் தன்மைக்கு அஃது ஏலாததாய் இறந் தொழியத் தமிழ்த் தன்மைக்கு ஒத்த பழைய இலக்கணங்களிற் செய்யப்பட்ட தொல்காப் பியமே வழங்கலாயிற்று. அகத்தியர் தமிழில் இலக்கணம் செய்தார் என்பதனோ டமையாது தமிழையே செய்தா ரென் றும் வரலாற்று முறைமை யறியாத புலவர்கள் பாட்டாகவும் தீட்டி விட்டார்கள். இறந்தன போகத் தம் தவப் பயனாய் இன்று வரை இருப்பது தொல்காப்பியம். இத் தொல்காப்பி யக் கடலுள் நுழைந்து சென்றால் தமிழ் மக்களுடைய பண்டை நாகரிகம் என்னும் முழு மணிகளைக் கண்டெடுக்க லாம். இதுவே நம் முன்னோர் அறிவு, அன்பு, ஆக்கம், தன்மை, அரசியல், ஒழுக்கம் முதலிய எல்லாவற்றையும் நாம் சிறிதேனும் அறிதற்குக் கருவியாக இருப்பது. எழுத்தும்

சொல்லும் ஆராயாது விடப்படினும் பொருட் பால் மட்டு மேனும் தமிழ்மக்கள் ஒவ்வொருவரானும் ஆராயற்பாலதாம். அங்ஙனம் ஆராய்ந்தாலன்றி நமக்கு நம் முன்னோருடைய தன்மை யாதும் விளங்கா தென்க. தொல்காப்பியத்திலே மரபியலிலே அவ்வியல் எழுத்துச் சொற்பொருள் மரபைக் குறிப்பதென அறியாது சாதியாகிய மரபு ஆண்டுக் கூறப்பட வில்லை யெனப் பிறழக்கொண்டு இடையே சில சூத்திரங்க ளைச் செருகி விட்டாருமுளர். இவ்வாறு இடைச் செருகும் வழக்கம் பண்டே நம் இந்தியருக்கு உளதென்பது வேதம், ஸ்மிருதி முதலிய நூல்களில் காணப்படும் ஆபாச மந்திர தந்திரங்களினால் இனிது தெளியப்படும். தொல்காப்பி யத்தில் தமிழர் மண முறை, ஒருவனும் ஒருத்தியும் தம்முள் ஒருவரை ஒருவர் கண்டு நெஞ்சம் கலந்த பின்னரே நிகழ்வது எனக் குறிப்பிடப்பட் டுள்ளது. ஆசிரியர் கூறும் எண்வகை மணத்துள் சிறந்ததும், நெடுங்காலத்துக்குப் பின்னர்த் தோன்றியதுமாய கந்தர்வ மணமே தமிழர் முற்படக் கைக் கொண் டொழுகிய களவியல் ஒழுக்கம். இவ் வொன்றைக் கொண்டே தமிழ் மக்களுடைய தனி நாகரிகம் நாட்டப் படும். தமிழர் குல வேற்றுமை யுடையவ ரல்லர் என்ப தும், வீரரைப் போற்றியவ ரென்பதும், பெண்பாலரை மிக்க மேல் நிலையில் வைத்திருந்தவ ரென்பதும், அரசியற் றுறை யில் அறத்தையே கடைப்பிடித் தொழுகியவ ரென்பதும், கற்புநெறி தவறாப் பொற்புடையவ ரென்பதும், தொல்காப்பி யத்தால் அறியக் கிடக்கின்றன. இன்று இவை போன்ற பலவற்றையும் அறிதற்குக் கருவியாக உள்ள தொல்காப்பி யத்தைப் பல்லாற்றானும் ஆய்ந்து அறிந்து தமிழர் நலம் பெறுவாராக.

இரண்டாம் படியில், ஆனால் பயன் முறையில் முதற் படியில் எடுத்துச் சொல்லப்படும் நூல் திருவள்ளுவர் அரு

ளிச் செய்த திருக்குறள். இந்நூலால் தமிழ் மக்கள் தமது உயர்வை உலக முழுவதும் ஒளிரச் செய்யும் பேறு பெற்றனர். இதிற் கூறப்பட்ட அறம், பொருள் இன்பங்கள் தமிழர் முறையையே பெரிதும் தழுவியவை. ஒரு குலத்துக்கு ஒரு நீதிகூறும் மனு முதலிய சாத்திரங்களும், வேள்வியைப் பொருளெனக் கருதும் வேதம் முதலியவற்றின் கொள்கைகளையும், உயிருக்காக மானத்தை விடலாம் என்னும் தாழ்ந்த கருத்துக்களையும் ஒழித்து, எல்லாருக்கும் ஒரே நீதியையும் உயிர்க் கொலை, புலால் உண்ணல் இல்லாத நல்லறத்தையும், மானமே உயிரினும் சிறந்ததென்னும் மாண்பையும் எடுத்து விளக்கி ஆற்றல் அழியும் என்று அந்தணர்கள் ஏட்டின் புறத்து எழுதாமலும், யாவரும் ஓதலாகாதென மறுத்தும் வைத்திருக்கும் மறையினும் விஞ்சிய பெருமையுடையதாகப் பொதுமறையாகத் திகழும் அற்புத நூல் திருக்குறள். இதிற் சொல்லப்படாத பொருளில்லை. இதில் கொள்ளப்படாத உயர்ந்த கருத்துக்கள் எவ்விடத்தும் இல்லை. இது பதினைந்து பதினாறு மொழிகளிலே மொழிபெயர்க்கப்பட்டிருத்தலும், திருவள்ளுவர் உருவச்சிலை பிரிட்டிஷ் மியூசியத்தில் வைக்கப்பட்டிருப்பதும் திருக்குறளின் பெருமையை மறுவற நன்குணர்த்தும்.

இனித் தேவாரம், திருவாசகம், நாலாயிரப் பிரபந்தம் முதலிய அன்புச் சுவை ததும்பும் அரிய நூல்களும், சிவஞான போதம், சிவஞான சித்தியார் முதலிய அறிவு நூல்களும், சிந்தாமணி, சிலப்பதிகாரம், மணிமேகலை, பெரிய புராணம் முதலிய விரிந்த பெருங்காப்பியங்களும், பத்துப் பாட்டு, எட்டுத் தொகை முதலிய இயற்கையழகு பொங்கித் ததும்பும் சங்க இலக்கியங்களும், ஆரா அமுதெனச் சுவைக்கும் உலா, பாடல், கோவை, பிள்ளைத்

தமிழ், கலம்பகம், பள்ளு, அந்தாதி, முதலான அளவற்ற பிர பந்தங்களும் ஒவ்வொருவர் வாழ்க்கையிலேயும் ஒவ்வோர் காலத்தும் படித்துப் படித்து ஆரா இன்பம் நுகரும் பெருஞ் சிறப்புடைய செந்தமிழ்த் தனிச் செல்வங்களாம்.

இவற்றுள் ஈடும் எடுப்புமின்றி இலங்கும் தொல்காப்பி யத்தைத் தமிழருடைய பழைய வரலாற்றைக் கூறும் வேதம் என்னலாம். அறிவு நூல்களின் முடிவைக் கூறும் சிவஞான சித்தியாரை உபநிடதம என்னலாம். பொதுமறையாகிய திருக்குறளை, மிருதிகளிலும் மேம்பட்ட நீதிரத்தின மென்ன லாம். ஊனையும் உயிரையும் உருக்கும் தித்திக்கும் திருவாச கத்தை என்னென்னலாம்? இது வடமொழி இருக்குக்களி னும் சிறந்தது என்பதை

'மனங் கரைத்து மலங் கெடுக்கும் வாசகத்தின் மாண்டேர்கள்,
கனஞ்சடையென் றுருவேற்றிக் கண்மூடிக் கதறுவரோ' என்றும்

'கடையூழி வருந்தனிமை கழிக்கவன்றோ அம்பலத்துள்
உடையார் உன் வாசகத்தில் ஒரு பிரதி கருதியதே'

என்றும் உள்ளவா றுணர்ந்த பெரியோர் கூறுமாற்றானறிக. நம்மாழ்வார் திருவாய் மொழி வடமொழி வேதத்தின் முன் செல்கின்றது. கம்ப ராமாயணம் கருத்தழகில் வான்மீகத் தினும் மாட்சி கொண்டது. சங்கத் தமிழ் நூல்கள் இயற்கை நெறி திறம்பாமல் உள்ளது உள்ளவாறே கிளக் கும் தன்மையால் பொருட்குப் பொருத்தமில்லாத கற்பனை யலங்கார வருணனைகள் மலிந்து கிடக்கும் வடமொழி இலக் கியங்களை விலைக்கு வாங்குகின்றன. தமிழ்ச் செய்யுள் முறையில் எத்தகைய மொழியிலும், வடமொழியாயினு மாகுக, இலத்தீன் ஆகுக, கிரேக் ஆகுக இவை யாவற்றினும் மேலோங்கிச் செல்லும் மேன்மை வாய்ந்தது என்பது

உண்மை நவிற்சி என்பதை எடுத்துக் காட்டுக்களுடன் காலம் வாய்ப்புழி யெல்லாம் வகுத்துக் காட்டுவாம்.

தமிழ் மக்களே நம்முன்னோர், நம்மக்கள் தேடிவைத்த அரிய செல்வங்களை இழந்து விடாதீர். முன்னமே பல கோடி இழந்தீர், இன்னும் இழந்து வருகின்றீர். தூங்கின உங்கள் கன்று கடாக் கன்றாயிற்று: சொல்வார் இன்மையில் உங்கள் வழக்குப் பல விடங்களில் தோற்றுப் போயிற்று. இன்னும் தூங்கிக் கிடப்பீரேல் நாகரிக மற்ற மிலேச்சராக சிறிது காலத்தி லாய்விடுவீர். நீங்கள் பண்டை நிலைக்கு வர வேண்டுமாயின், நீங்களும் உலகத்தில் நல்வாழ்வு வாழ வேண்டுமாயின், பிறநாட்டார் உங்களை மதிக்க வேண்டுமாயின், பிற மொழியார் உங்களை மிதிக்காமல் இருக்க வேண்டின், உங்கள் முன்னோருக்குப் பொருளற்ற பிதிர்க் கடன் செய்வதைக் காட்டிலும் அவர் தம் அறிவு நிறைந்த வாய்மொழியாகிய செந்தமிழ் மொழியைக் கற்றும், கேட்டும், கற்பித்தும், [illegible]பித்தும் பாதுகாத்தலே சிறந்த பிதிர்க் கடன் ஆம் என்பதை உணர்ந்து செய்ய முந்துமின்! முந்துமின்!

வழங்கும் பகுதி
சென்னை-1

Printed at the Imperial Printing Works, Madras.